★
REGISTERED AS A
NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2024 ஒக்டோபர் 2 புதன்கிழமை

# தினகரன்

THINAKARAN 92 1932–2024 ANNIVERSARY தினகரன்

வரு. 92 இல. 235 | Wednesday 02, October, 2024 | 20 பக்கங்கள் | 50/-

## பஸ் கட்டணங்கள் நேற்று நள்ளிரவு முதல் குறைப்பு



ஆகக் குறைந்த கட்டணம் 27 ரூபா. முச்சக்கரவண்டி கட்டணமும் குறையும்

லோரன்ஸ் செல்வநாயகம்

பஸ் கட்டணங்கள் நேற்று நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில், குறைக்கப்பட்டுள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது. 06

## IMF உடன்படிக்கையில் மீளாய்வுகள் செய்யப்படும்

### மாத நடுப்பகுதியில் முக்கிய பேச்சுவார்த்தை

லோரன்ஸ் செல்வநாயகம்



சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தை தொடரும் என்றும், இம்மாத நடுப்பகுதியில் நியூயோர்க்கில் நடைபெறவுள்ள பேச்சுவார்த்தை முக்கியத்துவம் வாய்ந்ததாக அமையும் என்றும் அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான விஜித ஹேரத் தெரிவித்தார். இப்பேச்சு வார்த்தையில் முக்கியமான விடயங்கள் ஆழமாக ஆராயப்படுவதுடன் அரசாங்கத்தின் சார்பில் மத்திய வங்கியின் ஆளுநர், நிதியமைச்சின் செயலாளர் உள்ளிட்ட உயர் மட்ட 06

## டீசல் விலைகள் குறைந்ததால் பஸ் கட்டணங்களிலும் மாற்றம்

### 04 வீதத்தால் குறைக்க திட்டம்

டீசல் விலையை அரசாங்கம் குறைத்துள்ளதையடுத்து அதன் பயனை மக்களுக்கு வழங்கும் வகையில், பஸ் கட்டணங்களைக் குறைக்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

இது தொடர்பான கணக்கீடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் புதிய பஸ் கட்டணங்கள் விரைவில் அறிவிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுவதாகவும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார் .

இந்நிலையில்,பஸ் கட்டணத்தை குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அகில இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

இதன் நன்மைகளை மக்களுக்கு வழங்கவுள்ளதாக, சங்கத்தின் பொதுச் செயலாளர் அஞ்சன பிரியஞ்சித் தெரிவித்துள்ளார். 06

## ஜனாதிபதியுடன் அமெரிக்க தூதுவர் ஜூலி சங் சந்திப்பு

### புதிய ஜனாதிபதிக்கு வாழ்த்தும் தெரிவிப்பு



இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவை நேற்று சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இலங்கையின் புதிய ஜனாதிபதியாக பதவியேற்ற அநுரகுமார திசாநாயக்கவுக்கு தனது வாழ்த்துகளைத் தெரிவித்த அமெரிக்க தூதுவர், அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையிலான வலுவான இருதரப்பு உறவுகளை தொடர்ந்தும் மேம்படுத்துவது குறித்து கலந்துரையாடினார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர 06

# புதிய அரசியலமைப்பு மூலம் தமிழர் பிரச்சினைக்கு தீர்வு

## மக்கள் கருத்தை அறிய சர்வஜன வாக்கெடுப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

**எதிர்வரும் பொதுத் தேர்தலின் பின்னர் தெரிவாகும் புதிய அரசாங்கத்தில் புதிய அரசியலமைப்பை உருவாக்கி, அதனை சர்வஜன வாக்கெடுப்பு மூலம் மக்கள் முன் சமர்ப்பித்து, தமிழ் மக்களது நீண்டகால தேசிய பிரச்சினைக்கு தீர்வு காணப்படுமென அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்**



தேசிய மக்கள் சக்தியின் புதிய அரசாங்கத்தில் தமிழ் மக்களின் தேசிய பிரச்சினைக்கான தீர்வை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என, அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

புதிய அரசியலமைப்பு திருத்தம் மேற்கொள்ளப்பட்டு தமிழ் மக்களின் பிரச்சினைக்கான தீர்வுகளை புதிய அரசாங்கம் மேற்கொள்ளும் என தெரிவித்த அவர், தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பிலும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர்கள் சந்திப்பு நேற்று தகவல் திணைக்களத்தில் இடம்பெற்றது. இதன் போது, ஊடகவியலாளர் ஒருவர், தமிழ் மக்களின் 06

முன்னாள் அமைச்சர்கள், எம்.பிக்கள், ஜனாதிபதிகளின்

## சிறப்புரிமைகளை மீளாய்வு செய்வதற்கு விசேட குழு

லோரன்ஸ் செல்வநாயகம்

### 02 மாதங்களுள் அறிக்கை சமர்ப்பிக்கவும் பணிப்பு

அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் முன்னாள் ஜனாதிபதிகளின் உரித்துக்கள், கொடுப்பனவுகள் மற்றும் சிறப்புரிமைகளை மீளாய்வு செய்வதற்கு விசேட 06



தரம் 05 புலமைப்பரிசில்

## விடைத்தாள் திருத்த பணிகள் நிறுத்தம்

### 02 வாரங்களுக்கு நிறுத்த ஜனாதிபதி அறிவுறுத்தல்

தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையின் விடைத்தாள் திருத்தும் பணிகளை இரண்டு வாரங்களுக்கு இடைநிறுத்துமாறு, ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க பரீட்சைத் திணைக்கள அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் விடுத்துள்ளார். 06

சர்வதேச சிறுவர் தினத்தில்

## காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் ஆர்ப்பாட்டம்



சர்வதேச சிறுவர் தினமான நேற்று செவ்வாய்க்கிழமை (01) காணாமலாக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினரால் ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது. வவுனியா பழைய பஸ் நிலையத்துக்கு முன்பாக இந்த 06

## முன்னாள் MP எஸ். ஸ்ரீதரன் புதிய ஜனாதிபதிக்கு வாழ்த்து



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எஸ். ஸ்ரீதரன் நேற்று (01) ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவை சந்தித்தார்.

இலங்கையின் ஒன்பதாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட 06

## வாகனங்கள் மீண்டும் அந்தந்த நிறுவனங்களிடம் கையளிப்பு



அமைச்சுகள், திணைக்களங்கள் உள்ளிட்ட பல்வேறு அரச நிறுவனங்களிலிருந்து ஜனாதிபதி அலுவலகத்துக்கு கொண்டுவரப்பட்ட வாகனங்கள், நேற்று 06

## உலக மது ஒழிப்பு தினம் மதுபானசாலைகளுக்கு பூட்டு

உலக மது ஒழிப்பு தினத்தை முன்னிட்டு நாளை (03) நாடளாவிய ரீதியிலுள்ள அனைத்து மதுபானசாலைகளும் மூடப்படுமென மது மற்றும் போதைப்பொருள் தகவல் மையம் தெரிவித்துள்ளது.

மது அருந்துவதால் உலகளாவிய ரீதியில் வருடத்துக்கு 03 மில்லியனுக்கும் அதிகமானோர் உயிரிழக்கின்றனர். மது அருந்துவதால் நாட்டில் நாளொன்றுக்கு 06

## கட்சியின் தீர்மானங்களை மீறியவர்களுக்கு தேர்தலில் போட்டியிட அனுமதியில்லை



தமிழரசுக் கட்சியின் தீர்மானங்களை மீறிய கட்சி உறுப்பினர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். இவர்களுக்கு எதிர்வரும் தேர்தல்களில் நியமனங்கள் வழங்கப்படக் கூடாதெனவும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ சுமந்திரன் தெரிவித்தார். எதிர்வரும் தேர்தல்களில் நியமனங்கள் வழங்கப்படும் விதம் குறித்து தினகரனுக்கு அவர் கருத்துத் தெரிவித்தார். அவர் மேலும் இது பற்றி விளக்குகையில்,

தமிழரசுக் கட்சியிலிருந்து அதன் தீர்மானங்களுக்கு மாறாகச் செயற்பட்டவர்கள் 06

## ஈஸ்டர் தாக்குதல், மத்திய வங்கி மோசடி; விசாரணைகள் ஆரம்பம்

லோரன்ஸ் செல்வநாயகம்

### முன்னாள் ஜனாதிபதி ரணிலும் சட்டத்தின் முன் பதில் சொல்ல நேரிடும்

ஈஸ்டர் தாக்குதல் மற்றும் மத்திய வங்கி பிணைமுறி மோசடி தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான விஜித ஹேரத் தெரிவித்தார்.

மேற்படி விசாரணைகள் விரைவாக ஆரம்பிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை கவனத்திற் கொண்டே, உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார். 06

## 03 பதில் கட்டுப்பாட்டாளராக நிலூஷா பாலசூரிய நியமனம்

பாராளுமன்றம் கலைக்கப்பட்டதால்

## முன்னாள் MPக்கள் இராஜதந்திர கடவுச்சீட்டை பயன்படுத்த முடியாது



பாராளுமன்றம் கலைக்கப்பட்டதன் பின்னர் பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது இராஜதந்திர கடவுச்சீட்டைப் பயன்படுத்தும் தகுதியை இழந்துள்ளதாக, பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தெரிவித்துள்ளார். வெளிநாட்டுப் பயணம் மேற்கொள்ள வேண்டுமாயின் அவர்கள் சாதாரண 06

தொகுதி பங்கீடு முக்கிய விடயம்

## ஐ.ம.சக்தியுடன் இணக்கப்பாடு இல்லையேல் தனித்து போட்டி

### யாழ்., கிளிநொச்சி தவிர்த்து களமிறங்குவோம்



பாராளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி தவிர்ந்த வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும் அதற்கு வெளியே 06 மாவட்டங்களிலும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் போட்டியிட திட்டமிட்டுள்ளதாக மு.கா. தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் கட்சி 06

அமைச்சர்கள் இருவர் இருந்தபோதும்

## மட்டு. மாவட்ட மக்களுக்காக நானே களத்தில் செயற்பட்டேன்



மட்டக்களப்பில் இராஜாங்க அமைச்சர்கள் இருவர் இருந்தபோதும், தமிழ் மக்கள் எதிர்கொண்ட பிரச்சினைகளுக்கு அவர்களுடன் நின்று தீர்வைப் பெறுவதற்கான முயற்சிகளை தாமே, முன்னெடுத்ததாக தமிழ் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு, களுவாஞ்சிகுடியில் நேற்று மாலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே, அவர் 06

மக்களின் ஆர்ப்பாட்டத்தையடுத்து

## மன்னார் மதுபானசாலையை உடனடியாக மூடுமாறு பணிப்பு

மன்னார் குறூப் நிருபர்



மன்னாரில் புதிதாக திறக்கப்பட்ட மதுபானசாலையை மக்களின் பலத்த எதிர்ப்பையடுத்து உடனடியாக 06

# நகர்வலம்



## கல்நேவ பிரதேச செயலக ஏற்பாட்டில் பிராந்திய இலக்கிய விழா நிகழ்வு

**(திறப்பனை தினகரன் கல்நேவ தினகரன் விசேட நிருபர்கள்)**





கல்நேவ பிரதேச செயலகப் பிரிவின் பிராந்திய இலக்கிய விழா கடந்த 27 பிரதேச செயலக வளாகத்தில் பிரதேச செயலாளர் ஜி.எம். கே.ஆர். பிரியதர்ஷன தலைமையில் வெகு சிறப்பாக நடைபெற்றது. கலாசார அலுவல்கள் திணைக்களம், பிரதேச செயலகம் மற்றும் பிரதேச கலாசார அதிகார சபை என்பன இணைந்து இவ்விழாவை ஏற்பாடு செய்திருந்தன.

பிரதேச மட்டத்தில் இடம்பெற்ற பல்வேறு இலக்கியப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசில்களும் சான்றிதழ்களும் இங்கு வழங்கி வைக்கப்பட்டதுடன், கலைத்துறைக்கு அளப்பரிய சேவையாற்றிய பிரதேசத்தைச் சேர்ந்த 12 கலைஞர்கள் இங்கு பாராட்டப்பட்டு கௌரவிக்கப்பட்டு அவர்களுக்கான நினைவுப் பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன. உள்ளூராட்சி நிறுவனங்கள் மற்றும் வர்த்தக சமூகத்தினரின் ஆதரவுடனும் பங்களிப்புடனும் இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

பாடசாலை மாணவர்கள், கலைஞர்கள் மற்றும் கல்நேவ பிரதேச செயலக உத்தியோகத்தர்களின் பல்வேறு நிகழ்வுகள் மேடையேற்றப்பட்டன. இவ் இலக்கிய விழா வண்ணமயமாக இருந்ததோடு பார்வையாளர்களின் பாராட்டுக்களையும் பெற்றன.

இவ்விழாவின் போது பல்லின பல் சமய பொதுமக்கள் ஒன்றிணைந்திருந்தனர்.

இவ் இலக்கிய விழாவில் மாவட்ட கலாசார உத்தியோகத்தர், கல்நேவ உதவி பிரதேச செயலாளர் உட்பட அலுவலக உத்தியோகத்தர்கள், ஏனைய அரச நிறுவனங்களின் அதிகாரிகள், கலாசார உத்தியோகத்தர் சுஜாதா பிரியங்கனி, பிராந்திய கலாசார குழு உறுப்பினர்கள், பாடசாலை மாணவர்கள், பெருந்திரளான பொது மக்கள் என பலர் இந் நிகழ்வில் கலந்து சிறப்பித்திருந்தனர்.



மத நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வகையில் வடமத்திய மாகாண புதிய ஆளுநர் முன்னாள் உயர் நீதிமன்ற நீதிபதி வசந்த ஜினதாச அநுராதபுரம் நகர மொஹிதீன் ஜும்ஆப் பள்ளிவாசலுக்கு (30) வருகை தந்து துஆ பிரார்த்தனையில் ஈடுபட்ட போது பிடித்த படம். (படம்: அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்)

## பேருவளை ஜாமிஆ நளீமிய்யா கலாபீடத்தில் நேர்முக பரீட்சை

பேருவளை ஜாமிஆ நளீமிய்யா கலாபீடத்திற்கு 2024/2025ஆம் கல்வியாண்டிற்கு புதிய மாணவர்களை (ஆண்) தெரிவு செய்வதற்கான நேர்முக மற்றும் எழுத்துப்பரீட்சைகள் எதிர்வரும் 05 மற்றும் 06 ஆம் திகதிகளில் ஜாமிஆ நளீமிய்யா கலாபீட வளாகத்தில் நடைபெறவுள்ளது.

வடக்கு, வட மத்திய, வட மேல், தென் மற்றும் மேல் மாகாணங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு 05ஆம் திகதி சனிக்கிழமையும் கிழக்கு, மத்திய, சப்ரகமுவ, ஊவா மாகாணங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு 06ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமையும் நேர்முக பரீட்சைகள் கலாபீட வளாகத்தில் காலை 8.00 மணி முதல் மாலை 4.00 மணிவரை (நேர்முக, எழுத்துப் பரீட்சைகள்) நடைபெறும்.

நடைபெற்று முடிந்த (2023) க.பொ.த (சா/த) பரீட்சையில் இஸ்லாம், தமிழ், கணிதம் உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருப்பதோடு அவற்றில் மூன்று பாடங்களில் திறமைச்சித்திகளைப் (C) பெற்றிருத்தல் வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு 077 6504765 என்ற கைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளுமாறு நளீமிய்யா கலாபீட முதல்வர் கேட்டுள்ளார்.

## கொழும்புத் தமிழ் சங்க நூலகம்

### புதிய கட்டணம் அறிமுகம்

வாசிப்பு மாதத்தை முன்னிட்டு வாசிப்பை ஊக்குவிப்பதற்காக ஒக்டோபர் மாதம் 01ஆம் திகதி தொடக்கம் 31.10.2024 வரை நூலகத்தில் இணையும் புதிய அங்கத்தவர்களுக்கான கட்டணம் அரைப் பங்காகக் குறைக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் சிறுவர் ஒருவருக்கு ரூ. 150 உம் வளர்ந்தோர் ஒருவருக்கு ரூ. 250 உம் கட்டணமாக அறவிடப்படவுள்ளதென்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

மறைந்த முன்னாள் அமைச்சர்

## குமார வெல்கமவின் இறுதிக்கிரியை நிகழ்வில் அரசியல் பிரமுகர்கள் பங்கேற்பு

**(பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)**





மறைந்த முன்னாள் அமைச்சர் குமார வெல்கம 'களுகங்தொட சிங்கம்' என்று பெயர் பெற்றபோதிலும் அவர், களுத்துறை மாவட்டத்துக்கு மாத்திரமன்றி மனித நேய குணாதிசயத்திலும் அரசியல் பண்பாட்டிலும் முழு நாட்டுக்கும் சிறந்த முன்னுதாரணமான அரசியல் தலைவராக விளங்கினார். அன்னாரின் இழப்பு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும் என மறைந்த அமைச்சரின் இறுதிக் கிரியை நிகழ்வில் முஸ்லிம் சமூகம் சார்பில் அஞ்சலி உரை நிகழ்த்திய சமூக செயற்பாட்டாளர் ஹாஜி சிராஸ் யூனூஸ் தெரிவித்தார். மறைந்த அமைச்சரின் மதுகம இல்லத்தில் இடம்பெற்ற இறுதி அஞ்சலி நிகழ்வில் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க மற்றும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரின் அனுதாபச் செய்திகளும் வாசிக்கப்பட்டன. முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் நளிந்த ஜயதிஸ்ஸ ஜனாதிபதியின் செய்தியை வாசித்தார். முன்னாள் எம்.பி சஞ்ஜீவ எதிரிமான்ன மஹிந்த ராஜபக்ஷவின் செய்தியை வாசித்தார்.

மறைந்த அமைச்சரின் சகோதரர் நளின் வெல்கம நன்றியுரை வழங்கினார்.

முன்னாள் அமைச்சர்களான ராஜித சேனாரத்ன, சுசில் பிரேமஜயந்த, ஏ.எச்.எம்.பவுசி, ரோஹித அபேகுணவர்தன உள்ளிட்ட அமைச்சர்கள், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட பிரமுகர்கள் பெருமளவிலான பொதுமக்களும் இதில் கலந்து கொண்டனர்.

## வெலிகம அறபா சிறந்த பெறுபேறு

**(வெலிகம தினகரன் நிருபர்)**

வெளியாகிய க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையின் (2023) பெறுபேற்றின் படி வெலிகமை அறபா மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) சிறந்த பெறுபேற்றைப் பெற்றுள்ளதாக கல்லூரியின் அதிபர் எம்.டி.எம் முதஹ்ஹர் தெரிவித்தார்.

இப் பாடசாலையிலிருந்து தோற்றிய மாணவர்களுள் 80% சதவீதமான மாணவர்கள் க.பொ.த. உயர்தரம் கற்க தகுதி பெற்றுள்ளனர். மேலும், எம்.ஏ.ஹாஜரா, எம். ஆர்.எப்.ஹப்ஸா, மற்றும் எம்.ஏ. எப். மித்ஹா ஆகியோர் 9 பாடங்களிலும் "ஏ" சித்தி பெற்றுள்ளதோடு, எம்.ஆர். அஹ்மத், எம்.ஏ.எம். அஷ்பான், எம்.எப்.எப். பாதா, எம். எப். தம்ரா, மற்றும் எம்.எப்.துஹா, ஆகியோர் 8 பாடங்களில் "ஏ" சித்தி பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளனர்.

இது தவிர 7,6,5, "ஏ" சித்தி பெற்றவர்களும் கணிசமானோர் உள்ளனர். இவர்கள் அனைவரும் க.பொ.த. உயர்தரம் கற்பதற்கு தகுதிபெற்றுள்ளனர்.

## ஹம்பாந்தோட்டை ஸாஹிரா; மாணவர்களுக்கு '9A' சித்தி

**ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்**

ஹம்பாந்தோட்டை ஸாஹிரா தேசிய பாடசாலையிலிருந்து க. பொ. த சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் ஏழு மாணவர்கள் ஒன்பது பாடங்களிலும் ஏ சித்திகளைப்பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளனர்.

எம்.எ.எப் அஸ்ரா, பாத்திமா ஆயிஸா மஹமூர், பாத்திமா நஸ்ரா மௌலானா, எஸ்.எப். ஸேமா, எம். என்.எப். ஸமீஹா, எம்.எப். சேகாசிங் ஹாடா, எம். இஸட். எப். ஸைனப் ஆகிய மாணவிகள் ஒன்பது பாடங்களிலும் 'ஏ' சித்திகளைப் பெற்றுள்ளனர்.

இம்முறை பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களில் மூன்று மாணவர்கள் எட்டு 'ஏ' மற்றும் ஒரு 'பீ' சித்தியும் ஒரு மாணவி ஏழு 'ஏ' ஒரு பீ மற்றும் ஒரு 'சீ' சித்தியும் பெற்றுள்ளதோடு பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் அதிகமானோர் சித்தியடைந்துள்ளதாக பாடசாலை அதிபர் தெரிவித்தார்.

எம். ஆர்.எம். ராஸிட், எப். மபாஸா ரூமி, எம். ஆர்.எப். ரிபானா ஆகிய மாணவர்கள் எட்டு ஏ ஒரு பீ சித்தியையும் பெற்றுள்ளதோடு மாணவி எம். ஆர்.எப். இல்மா ஏழு ஏ,ஒரு பீ, ஒரு சீ சித்திகளைப் பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளனர்.

## அநுராதபுரம் சாஹிராவில் இம்முறை சிறந்த பெறுபேறு

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

அநுராதபுரம் சாஹிரா கல்லூரியில் க.பொ.த சாதாரண தர பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களில் 03 மாணவர்கள் சகல பாடங்களிலும் 'ஏ' சித்திகளைப் பெற்றுள்ளதாக கல்லூரி அதிபர் ஜே.எம். அசாத் மொகமட் தெரிவித்தார்.

இதனடிப்படையில் எம்.ஐ.எப். ருசைகா, எம்.ஏ.எப்.சைனப், எம். என்.சைனப் சாரா ஆகியோர் 09ஏ சித்திகளையும் எம்.என். அர்ஹம், எம்.அஸ்பாக் அஹமட், என்.ஏ. என்.எம்.ஆய்ஷா, எம்.பி.எல்.சப்கி அஹமட், எம்.எஸ்.எப்.சம்ரா, என். எஸ்.ஷிபா பர்வின் ஆகியோர் 08ஏ பீ சித்திகளையும் எம்.என்.ஆய்ஷா 07ஏ 02பீ, வீ.பிரவீனா 07ஏ, பீ, சீ, எம்.எப்.ஹம்ரா 07ஏ, சீ, எஸ், ரீ.டீ.எப்.ஹம்தா 06ஏ 03பீ, எம்.ஏ. அன்பா சைனப் 06ஏ, 02பீ, சீ . எம். எம்.எப்.முஷ்பிரா 06ஏ, 02பீ ,சீ சித்தியினையும் . எம்.ஏ.எப். ஹன்சா 05ஏ, 03பீ, சீ. எச்.எம்.றிஸ்மி, எம். எஸ். சீமா பர்வின், எம்.எப்.எப். சிம்ஹா ஆகியோர் 05ஏ, 02பீ, 02சீ. எம்.எச்.எப். ஹனா 05ஏ, பீ, 03 சீ.எம்.ரீ.ஆகில் அஹமட் 04ஏ, 04பீ, சீ.எம்.என். ஆதில் அம்மார் 04ஏ, 03பீ, சீ, எஸ்.என்.பீ.சஸ்லா 04ஏ, பீ, 03சீ, எஸ்.எம்.ஏ. ஆதில் அஹமட் 03ஏ, 03பீ, 03சீ சித்தியினையும் பெற்றுள்ளதுடன் பரீட்சைக்கு தோற்றிய 73 மாணவர்களில் 69 மாணவர்கள் க.பொ.த உயர்தரம் கற்பதற்கு தகுதி பெற்றுள்ளதாக அதிபர் மேலும் தெரிவித்தார்.

## ஜாமிஅதுல் பாஸிய்யா கலாபீடத்தில் மீலாதுன் நபி விழா பரிசளிப்பு





**(பேருவளை விசேட நிருபர்)**

பேருவளை, சீனன்கோட்டை ஜாமிஅதுல் பாஸிய்யதுஷ் ஷாதுலிய்யா கலாபீடத்தின் வருடாந்த மீலாதுன் நபி விழா அண்மையில் கலாபீட பாஸிய்யா மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. கலாபீட அதிபர் அல் உஸ்தாத் மௌலவி எம். அஸ்மீகான் (முஅயீதி) நிகழ்வுக்கு தலைமை வகித்தார். கலாபீட மாணவர்களிடையே பல்வேறு போட்டிகள் நடாத்தப்பட்டன. இப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு இதன்போது பரிசில்களும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் கலந்துகொண்ட சீனன்கோட்டை பள்ளிச்சங்க பொருளாளர் ஸப்வான் நயீம், கலாபீட இணைப்பொருளாளர் முஸ்னி உவைஸ், சீனன்கோட்டை பாஸிய்யா பெரிய பள்ளிவாசல் இமாம் மௌலவி அஹமத் முபாரக் (மன்பயீ) உட்பட கலாபீட விரிவுரையாளர்கள், நிர்வாகிகள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள், சீனன்கோட்டை வாலிபர் ஹழரா ஜமாஅத் உறுப்பினர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## கேரள கஞ்சாவுடன் ஒருவர் கைது

**அநுராதபுரம் தினகரன் நிருபர்**

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த தனியார் பஸ்ஸில் ஒரு கிலோவிற்கும் அதிகமான கேரள கஞ்சாவினை எடுத்துச்சென்ற சந்தேக நபர் ஒருவரை மதவாச்சி பூனேவ பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலொன்றுக்கமைய பூனேவ பொலிஸார் பூனேவ நகரில் நேற்று முன்தினம் திடீரென வீதித்தடையினை ஏற்படுத்தி பஸ் வண்டியினை சோதனைக்கு உட்படுதியபோதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார். இதன்போது அவரிடம் காணப்பட்ட ஒரு கிலோவும் 750 கிராமும் நிறையுடைய கேரள கஞ்சாவினை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர் கொழும்பு 13 பகுதியை வசிப்பிடமாக கொண்ட 56 வயதுடையவர் என்பது ஆரம்பகட்ட பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

## மாவனல்லை குட்ஹோப் சர்வதேச பாடசாலையின் சிறுவர் தின நிகழ்வுகள்






மாவனல்லை குட்ஹோப் சர்வதேச பாடசாலையின் சிறுவர் தின நிகழ்வுகள் அதன் பணிப்பாளர்களான திருமதி ரஹ்மான் மற்றும் ஏ.எச். ஆர். சமீல் ஆகியோரின் தலைமையில் நடைபெற்றது. இதன்போது மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றதோடு மாணவர்களுக்கு பரிசுகளும் இதன்போது வழங்கி வைக்கப்பட்டன.

## ரஷ்ய தூதுவர் ஜகார்யன் ஜனாதிபதியுடன் சந்திப்பு

**ரஷ்ய ஜனாதிபதியின் வாழ்த்து செய்தியும் கையளிப்பு**



இலங்கைக்கான ரஷ்யத் தூதுவர் லெவன்எஸ். ஜகார்யன் (Levan S. Dzhagaryan) நேற்று (01) முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவை சந்தித்தார்.

இச்சந்திப்பில் புதிதாக தெரிவான ஜனாதிபதிக்கு ரஷ்யத் தூதுவர் எஸ். ஜகார்யன் வாழ்த்துத் தெரிவித்ததுடன், ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினின் தனிப்பட்ட வாழ்த்துச் செய்தியொன்றையும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கு வழங்கினார். ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் தலைமையில் இருநாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகள் மேலும் வலுவடையும் என எதிர்பார்ப்பதாக ரஷ்ய ஜனாதிபதி புடின்,தனது செய்தியில் குறிப்பிட்டிருந்தார்.

இலங்கைக்கும் ரஷ்யாவுக்கும் இடையிலான நீண்டகால இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவது குறித்து இக்கலந்துரையாடலில் விசேட கவனம் செலுத்தப்பட்டது. இராஜதந்திர உறவுகளை மேம்படுத்த இருதரப்பினதும் அர்ப்பணிப்பை மீண்டும் உறுதிப்படுத்துவதுடன்,வர்த்தகம், முதலீடு, கலாசாரம் மற்றும் கல்வி போன்ற முக்கிய துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்துவதன் முக்கியத்துவத்தையும் இருதரப்பினரும் வலியுறுத்தினர்.

## பிரதமர் தலைமையில் சுகாதார சேவைகளை ஆராயும் கூட்டம்



சுகாதார சேவையின் தற்போதைய நிலை மற்றும் எடுக்க வேண்டிய அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பான விசேட கலந்துரையாடல், நேற்று (01) காலை பிரதமரும் சுகாதார அமைச்சருமான டொக்டர் ஹரிணி அமரசூரிய தலைமையில் சுகாதார அமைச்சில் நடைபெற்றது.

இலங்கையில் ஆரம்ப சுகாதார சேவைகள், தடுப்பூசித் திட்டம், குழந்தைகள் /தாய்மார் உட்பட அனைத்து மக்களின் ஊட்டச்சத்து நிலை, மருந்துகளின் நிலை, தொற்றக்கூடிய மற்றும் தொற்றா நோய்கள், சுகாதார கல்வி திட்டங்கள், மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் சுகாதார பணியாளர்கள் மற்றும் சேவைகள், மருந்துகளை கொள்முதல் செய்தல், ஆயுர்வேத சிகிச்சை சேவைகளை வலுப்படுத்துதல் மற்றும் தொடர்புடைய வசதிகளை வழங்குதல், தொற்றுநோய்கள், அத்தியாவசிய மருத்துவ உபகரணங்களை வாங்குதல் போன்றவற்றின் அடிப்படையில் ஊழியர்களின் அங்கீகாரம் குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டது.

இலங்கையில் தற்போது சிறந்த சுகாதார சேவை காணப்படுவதாகவும், சேவையில் ஈடுபடும் அனைத்து சுகாதார ஊழியர்களின் கடின உழைப்பின் காரணமாக, இலங்கையின் சுகாதார சேவை, அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கு நிகரான நிலையில் இருப்பதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

புதிய அரசாங்கத்தின் பிரதான நோக்கமானது, தம்மைப் பாதிக்கும் எந்தவொரு பிரச்சினைகளுக்கும் தீர்வு காண்பதேயாகுமென பிரதமரும் சுகாதார அமைச்சருமான கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

சுகாதார அமைச்சின் செயலாளர் டொக்டர் பாலித மஹிபால, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டொக்டர் அசேல குணவர்தன, ஆயுர்வேத ஆணையாளர் நாயகம் டொக்டர் தம்மிக்க அபேகுணவர்தன மற்றும் சுகாதார அமைச்சின் அனைத்து மேலதிக செயலாளர்கள் மற்றும் பிரதிப் பணிப்பாளர் நாயகம் ஆகியோர் நிகழ்வில் கலந்துகொண்டனர்.





சர்வதேச சிறுவர் தினத்தையிட்டு பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய நேற்று லேடி ரிஜ்வே சிறுவர் ஆஸ்பத்திரி மற்றும் மாகொல, ரன்முத்துகலவிலுள்ள சான்றிதழ் பெற்ற பாடசாலைகளுக்குச் சென்றார். அங்குள்ள குழந்தைகளுடன் சிநேகபூர்வமாக உரையாடிய அவர், குழந்தைகளின் பிரச்சினைகள் மற்றும் நிறுவனத்தின் குறைபாடுகள் குறித்து ஆராய்ந்து குழந்தைகளுக்கு பரிசுகளையும் வழங்கினார்.

## வாகனங்கள் கையளிப்பு பட்டியலில் திருத்தம்

ஜனாதிபதி செயலகத்திடம் கையளிக்கப்பட்டிருக்கும் வாகனங்கள் தொடர்பாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு நேற்று முன்தினம் (30) விடுத்த ஊடக அறிக்கையில், இணைப்புச் செய்யப்பட்ட வாகனங்களின் பட்டியலில் 95 ஆவது இலகத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள உதயசாந்த குணசேகர என்ற பெயர் உதயகாந்த குணதிலக்க என்று மாற்றப்பட வேண்டுமென அறிவிக்கிறோம்.

இதன்படி பாராளுமன்ற உறுப்பினர் உதயகாந்த குணதிலக்கவுக்கு தற்காலிகமாக வழங்கப்பட்டிருந்த PE1580 இலக்க TOYOTA HILUX வகை, கெப் வாகனம் 2024 09 23 ஆம் திகதி ஜனாதிபதி அலுவலகத்துக்கு மீண்டும் கையளிக்கப்பட்டுள்ளதென்பதையும் அறியத்தருகிறோம்.

இந்தச் செய்தியால் பாராளுமன்ற உறுப்பினர் உதயசாந்த குணசேகரவுக்கு ஏற்பட்ட அசௌகரியத்துக்காக வருந்துகிறோம்.

## இரண்டு மூத்த பொருளாதார ஆலோசகர்கள் நியமனம்

இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் தலைவர் துமிந்த ஹூலங்கமுவ மற்றும் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக் கழகத்தின் பேராசிரியர் அனில் பெர்னாண்டோ ஆகியோரை பொருளாதார விவகாரங்கள் மற்றும் நிதிக்கான சிரேஷ்ட ஆலோசகர்களாக கௌரவ அடிப்படையில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க நியமித்துள்ளார்.

2024 செப்டெம்பர் 24 ஆம் திகதி அமுலுக்கு வரும் வகையில், இந்நியமனங்கள் அமைச்சரவையின் ஒருமித்த கருத்துடன் வழங்கப்படுவதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

இரண்டு நியமனங்களும் சம்பளம் அல்லது பிற சலுகைகள் இல்லாமல், கௌரவ அடிப்படையில் மேற்கொள்ளப்படுவை என்றும் அவர் கூறினார்.

## பதில் கட்டுப்பாட்டாளராக நிலூஷா பாலசூரிய நியமனம்

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

வெற்றிடமாகவுள்ள குடிவரவு, குடியகல்வு திணைக்களத்தின் பதில் கட்டுப்பாட்டாளர் நாயகமாக பி .எம். டி.நிலுஷா பாலசூரிய நியமிக்கப்பட்டுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

மேற்படி திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் நாயகமான ஹர்ஷ இலுக்பிட்டிய, அண்மையில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நிலையில், அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் பதில் கட்டுப்பாட்டாளர் நாயகம் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கடவுச்சீட்டுகளில் உத்தியோகபூர்வமாக கையொப்பமிடும் செயற்பாடுகளுக்கு அந்த பதவி முக்கியமானதாகும் என்பதால், தற்காலிக வெற்றிடம் ஏற்பட்டிருந்த அந்த பதவிக்கு பதில் கட்டுப்பாட்டாளர் நாயகம் நியமிக்கப்பட்டுள்ளார். தற்போது பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளராகப் பணிபுரியும் பி.எம். டி.நிலூஷா பாலசூரிய குடிவரவு, குடியகல்வு திணைக்களத்தின் பதில் கட்டுப்பாட்டாளர் நாயகமாக நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## JICA நிறுவனத்தின் உதவியுடன் விமான நிலையத்தின் அபிவிருத்தி



பண்டாரநாயக்க விமான நிலைய அபிவிருத்தியின் இரண்டாம் கட்டம் மற்றும் ரூபவாஹினி டிஜிட்டல் ஒளிபரப்பு திட்டங்கள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன. ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவர் நிறுவனத்தின் தலைமை பிரதிநிதி யாமோடா டெட்சூயா

06

## எரிபொருட்களை அடுத்த வருடம் ஏப்ரல் வரைக் கொள்வனவு செய்யும் ஏற்பாடுகள்

### மக்களுக்கு நன்மையளிக்கவே விலைத் திருத்தங்கள்



நாட்டில் அடுத்த வருடம் ஏப்ரல் வரை எரிபொருளைக் கொள்வனவு செய்வதற்கான ஏற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக,இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் மொத்த விற்பனை முனைய நிறுவனத்தின் தலைவர் டி. ஜே. ராஜகருணா தெரிவித்தார்.

விலை குறைக்கப்பட்ட எரிபொருள் கடந்த மாதம் அரசாங்கத்தினால் இறக்குமதி செய்யப்பட்டதாகும் என்றும் அவர் கூறினார். இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன தலைமையகத்தில் நேற்று (01) இடம்பெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டிலேயே இதனைத் தெரிவித்தார்.

இதுபற்றித் மேலும் தெரிவித்த அவர்:

எரிபொருட்களில் விலை திருத்தம் செய்யப்பட்டுள்ளது.தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளராக இல்லாமல் ஜனாதிபதியாகவே அவர் இதனைச் செய்துள்ளார்.நாடு தொடர்பில் கவனம் செலுத்தியே எரிபொருளில் விலைக்குறைப்புக்கள் செய்யப்பட்டுள்ளன.

கடந்த அரசாங்கங்க காலப்பகுதியில் இடம்பெற்ற மோசடிகள் மற்றும் ஊழல்களை கண்டறிய ஜனாதிபதி ஆணைக்குழுவொன்று நியமிக்கப்படவுள்ளது. இந்த ஆணைக்குழு பெற்றோலிய கூட்டுத்தாபனத்தில் இடம்பெற்ற மோசடிகள் மற்றும் ஊழல்கள் தொடர்பிலும் நடவடிக்கை எடுக்கும். ஊழல் மோசடிகளில் ஈடுபட்ட அதிகாரிகள் தப்பிக்க முடியாது.

'செல்வம் நிறைந்த நாடும் அழகிய வாழ்வும்' என்ற தேசிய மக்கள் சக்தி வேலைத்திட்டத்தின் படி புதிய அரசாங்கம் செயற்படும். மின்சார கட்டணத்தை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு ஒழுங்குபடுத்தியுள்ளது. பெற்றோலியத்தை ஒழுங்குபடுத்தும் பணிகளும் மேற்கொள்ளப்படும். வரியைக் குறைத்து எரிபொருள் விலையை தீர்மானிக்க வேண்டுமா

06

## லெபனான், சிரியாவுக்கு செல்வதை தவிர்க்கவும்

### அரசாங்கம் வலியுறுத்து

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

நெருக்கடியான நிலைமை நிறைவடையும் வரை லெபனான் மற்றும் சிரியா நாடுகளுக்கு செல்வதை தவிர்த்துக் கொள்ளுமாறு அரசாங்கத்தின் சார்பில் வலியுறுத்திக் கேட்டுக் கொள்வதாக, அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

அதேபோன்று அந்த நாடுகளில் பாதிக்கப்பட்டுள்ள இலங்கையர்களை பாதுகாப்புடன் தங்க வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அதற்கான பணிப்புரைகளை அங்குள்ள தூதுவர்கள் மற்றும் உயர் ஸ்தானிகராலய அதிகாரிகளுக்கு விடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அதற்கமைய அங்கு மதவழிப்பாட்டுத்தலங்கள் மற்றும் தூதுவராலயத்தின் ஒரு பகுதியிலும் இலங்கையர்கள் பாதுகாப்புடன் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நெருக்கடி நிலையை கவனத்திற் கொண்டு தமது பாதுகாப்பைக் கருதி அந்த நாடுகளுக்கு செல்ல வேண்டாம் என்பதை நாம் வலியுறுத்துகின்றோம். நிலைமை முற்றாக சீரடைந்ததும் அதற்கான வாய்ப்புகள் வழங்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பிலேயே, அவர் இதனைத் தெரிவித்தார்.

## NPP புதிய அரசாங்கத்தில் 25 அமைச்சர்கள் மட்டுமே

### இராஜாங்க அமைச்சர்கள் இல்லை; 25 பிரதி அமைச்சர்கள்

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

எதிர்வரும் பொதுத் தேர்தலுக்குப் பின்னர் புதிய அரசாங்கத்தை தேசிய மக்கள் சக்தியே அமைக்கும். அந்த அமைச்சரவையில் 25 அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள் இடம்பெறுவர் என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார். அந்த புதிய அரசாங்கத்தில் இராஜாங்க அமைச்சர்கள் எவரும் நியமிக்கப்பட மாட்டார்கள் என தெரிவித்த அமைச்சர், அந்தந்த துறைக்கான நடவடிக்கைகளை உரிய முறையில் முன்னெடுக்கும் வகையில் 25 பிரதியமைச்சர்களும் நியமிக்கப்படுவார்கள் என்றும் தெரிவித்தார். அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாடு நேற்று தகவல் திணைக்களத்தில் இடம்பெற்றது. ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

06

## களுத்துறை ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோயில் நவராத்திரி விழா

களுத்துறை ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோயிலில் நவராத்திரி விழா நாளை 03.10.2024 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10:45 மணி முதல் 11:45 மணி வரையிலான சுப வேளையில் கொழு கும்பம் வைக்கப்பட்டு நவராத்திரி பூஜைகள் ஆரம்பிக்கப்படும்.

தினமும் 09 நாட்கள் மாலை 06 :00 மணிக்கு நித்திய பூஜையை தொடர்ந்து அபிஷேகம் தீபாராதனை நடைபெற்று அடியார்களுக்கு பிரசாதம் வழங்கப்படும்.

11.10.2024 வெள்ளிக்கிழமை நவராத்திரி தின இறுதி பூஜை நடைபெறும். 12.10.2024 சனிக்கிழமை காலை விஜயதசமி பூஜை நடைபெற்று மதியம் 12:00 மணிவரை விந்தியாரம்பம்(எடு தொடக்கல்) நடைபெறும்.

அன்று மாலை 5:30 மணிக்கு நித்திய பூஜையை தொடர்ந்து மானம்பூ விழாவும்( வாழை வெட்டு) பிராயச்சித்த அபிஷேகம் நடாத்தப்பட்டு பிரசாதம் வழங்கப்படும்.

இரவு 07:30 மணிக்கு இந்து இளைஞர் மன்ற

06

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834

தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279

பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

குரோதி வருடம் புரட்டாதி மாதம் 16ஆம் நாள் புதன்கிழமை

ஹிஜ்ரி வருடம் 1446 ரபீஉனில் அவ்வல் பிறை 28

### குறள் தரும் சிந்தனை



நடுவின்றி நன்பொருள் வெஃகின் குடிபொன்றிக்
குற்றமும் ஆங்கே தரும்

மனச்சான்றை ஒதுக்கிவிட்டுப் பிறர்க்குரிய அரும் பொருளைக் கவர்ந்து கொள்ள விரும்புகின்றவரின் குடியும் கெட்டொழிந்து, பழியும் வந்து சேரும்.

# பொருட்களின் விலைகள் குறைவது சிறந்த அறிகுறி

நாட்டின் ஒன்பதாவது ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான ஜனாதிபதி தேர்தல் நடைபெற்று சுமார் பத்து நாட்கள் கடந்துள்ளன. இந்த தேர்தலில் ஊடாக நாட்டின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக அநுரகுமார திசாநாயக்க தெரிவாகி சத்தியப் பிரமாணம் செய்து பதவியேற்றுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்று பத்து நாட்கள் தான் கடந்துள்ள போதிலும், இக்காலப்பகுதிக்குள் பல பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டு இருக்கின்றன. அவற்றில் முட்டைக்கான விலைக் குறைப்பு குறிப்பிடத்தக்க ஒன்றாக விளங்குகிறது. ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் ரூ. 50.00 முதல் ரூ 60.00 வரை சந்தையில் விற்பனை செய்யப்பட்ட முட்டையின் விலை இத்தேர்தலின் பின்னர் பெரிதும் குறைவடைந்துள்ளது.

இத்தேர்தலுக்கு முன்னர் பெரிதும் அதிகரித்துக் காணப்பட்ட முட்டையின் விலை, தேர்தலின் பின்னர் பெரிதும் குறைவடைந்திருப்பது வரவேற்கப்படுகின்றது. முட்டை உற்பத்தியில் ஏற்பட்டுள்ள அதிகரிப்பே இதற்குக் காரணம் எனக் கூறப்படுகிறது. ஆனால் தேர்தல் முடிந்ததும் முட்டை உற்பத்தியில் திடீரென அதிகரிப்பு ஏற்பட்டதா? என்ற கேள்வியும் பாவனையாளர்கள் மத்தியில் நிலவவே செய்கிறது.

ஏனெனில் உள்நாட்டில் முட்டை உற்பத்தி பெரிதும் வீழ்ச்சியடைந்துள்ளதாகக் குறிப்பிட்டு கடந்த ஆட்சிக் காலத்தில் இந்தியாவில் இருந்து முட்டை இறக்குமதி செய்யப்பட்டு சந்தைப்படுத்தப்பட்டமை தெரிந்ததே.

இதேவேளை இலங்கையின் பிரதான அரிசி ஆலை உரிமையாளரான டட்லி சிறிசேன, 'அரிசியை கட்டுப்பாட்டு விலையில் சந்தைப்படுத்தத் தயார்' என்று சில தினங்களுக்கு முன்னர் அறிவித்திருக்கிறார்.

கொத்துரொட்டி உள்ளிட்ட சில உணவுப் பண்டங்களின் விலைகளை குறைப்பதாக சிற்றுண்டி விற்பனையாளர்கள் சங்கத்தினர் குறிப்பிட்டுள்ளனர்.

மேலும் பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய் என்வற்றின் விலைகளும் நேற்றுமுன்தினம் முதல் குறைக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் பஸ் கட்டணம் 4.24 சதவீதத்தினால் குறைக்கப்பட்டுள்ளது. டொலரின் பெறுமதி வீழ்ச்சியடைந்து ரூபாவின் பெறுமதி அதிகரிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. பணவீக்கமும் வீழ்ச்சி அடைந்துள்ளது.

நாடு பொருளாதார வீழ்ச்சிக்கு உள்ளானதன் விளைவாக அனைத்துப் பொருட்களது விலைகளும் கடந்த ஆட்சிக் காலத்தில் பெரிதும் அதிகரித்திருந்தன. அதன் விளைவாக மக்கள் பலவிமான அசௌகரியங்களுக்கு முகம்கொடுத்திருந்தார்கள்.

கடந்த காலப்பகுதியில் முன்னெடுக்கப்பட்ட தவறானதும் பிழையானதுமான பொருளாதார வேலைத்திட்டங்களின் விளைவாகவே பொருளாதார வீழ்ச்சி ஏற்பட்டது. அதனால் பொருட்களின் விலைகளை பழைய நிலைக்கு கொண்டு வருவது மிகவும் மந்த நிலையில் காணப்பட்டது. ஆனால் ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் பொருட்களின் விலைகள் குறைவடைவது வேகம் அடைந்திருக்கின்றது. இவ்வாறு பொருட்களின் விலைகள் குறைக்கப்படுவதை மக்கள் பெரிதும் வரவேற்றுள்ளனர். மக்களின் எதிர்பார்ப்பும் அதுவேயாகும்.

கடந்த ஆட்சியாளர்களால் முன்னெடுக்கப்பட்ட தவறான பொருளாதார வேலைத்திட்டங்களால் நாடு பொருளாதார ரீதியில் பின்னடைவுக்கு உள்ளாகி வங்குரோத்து நிலையை அடைந்தது. அதனால் நாடும் மக்களும் கடும் நெருக்கடிகளுக்கும் பாதிப்புகளுக்கும் முகம்கொடுத்தனர். குறிப்பாக எரிபொருள், எரிவாயு ஆகியவற்றுக்காக நாட்கணக்கில் வரிசைகளில் காத்துக் கிடக்கும் நிலைக்கு தள்ளப்பட்டனர். சந்தையில் அனைத்து பொருட்களது விலைகளும் அதிகரித்துக் காணப்பட்டன.

அந்தச் சூழலில் பொருளாதார நெருக்கடியில் இருந்து தங்களுக்கு நிவாரணம் பெற்றுத் தருமாறு மக்கள் கோரினர். அதற்காக ஆர்ப்பாட்டங்களையும் ஊர்வலங்களையும் முன்னெடுத்தனர். ஆனால் அன்றைய ஆட்சியாளர்கள் மக்களது கோரிக்கைக்கு ஏற்ப நிவாரணங்ளைப் பெற்று கொடுக்காது பதவிகளை விட்டு விலகிச் சென்றனர். மக்களின் வாக்குகளைப் பெற்று ஆட்சிப் பதவிகளைப் பெற்றுக் கொண்ட இவர்கள், மக்களைப் பொருளாதார நெருக்கடிகளுக்குள் தள்ளிவிட்டு சென்றமைக்கு மக்கள் கடும் ஆட்சேபனை தெரிவித்தனர். பொறுப்புணர்வு மிக்க எந்தவொரு ஆட்சியாளரும் இவ்வாறு செயற்பட மாட்டார்கள் என்பதே மக்களின் கருத்தாகும்.

கடந்த கால ஆட்சியாளர்களின் தவறானதும் பிழையானதும் வேலைத்திட்டங்களே நாட்டின் பொருளாதார வீழ்ச்சிக்கு அடிப்படைக் காரணரமே தவிர, மக்களின் செயற்பாடுகளால் அல்ல. கடந்த காலங்களில் அரச நிதிகளும் பொதுச்சொத்துகளும் பெரிதும் வீண்விரயம் செய்யப்பட்டன. சில ஆட்சியாளர்கள் அரச வளங்களையும் சொத்துக்களையும் தங்கள் சொந்த வீட்டுச் சொத்தாகப் பயன்படுத்தினர்.

இதன் ஊடாக மக்கள் பொருளாதார நெருக்கடிகளுக்குள் தள்ளப்பட்டனர். அதனால் அவர்களுக்கு நல்ல பாடம் புகட்ட வேண்டும் என மக்கள் எதிர்பார்த்திருந்தனர். அதன் வெளிப்பாடுதான் கடந்த ஜனாதிபதித் தேர்தல் முடிவாகும்.

அதன் ஊடாகப் பதவிக்கு வந்துள்ள ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, நாட்டின் அரச சொத்துக்களும் வளங்களும் வீண்விரயம் செய்யப்படுவதைத் தவிர்ப்பதற்கான அனைத்து நடவடிகைகைகளையும் முன்னெடுத்துள்ளார். இதன் விளைவாகவே மக்களின் எதிர்பார்ப்புக்கு அமைய பொருட்களின் விலைகள் குறைவடைந்து வருவது குறிப்பிடத்தக்கது.

editor.tkn@lakehouse.lk

# மாத்தளை சோமுவின் 'ஒற்றைத்தோடு' சிறுகதை நூல் சிட்னியில் வெளியீடு

தமிழ் மக்கள் யுத்தத்தில் அடைந்த துன்பங்களையும், யுத்தத்திற்குப் பின்னர் வாழ்வியலுக்காக படும் துன்பக்காட்சிகளையும், புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களின் மனப்போராட்டங்களையும் சித்திரிக்கும் மாத்தளை சோமுவின் சிறுகதைத் தொகுதியான 'ஒற்றைத்தோடு' கடந்த வாரம் சிட்னியில் வெளியிடப்பட்டுள்ளது.

புலம்பெயர் மண்ணில் முன்னணி ஈழத்து எழுத்தாளரான மாத்தளை சோமுவின் 30 ஆவது நூலான 'ஒற்றைத்தோடு' சிறுகதைத் தொகுதி வெளியீடும் அறிமுகமும் சிட்னியில் கடந்த 29.9.2024 அன்று சிறப்புற நிகழ்ந்தன.

சிறுகதைகள் அனைத்தும், இலங்கையில் நடைபெற்ற இறுதியான யுத்தக் களத்தில் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் புலம்பெயர்ந்து அவுஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகளில் குடியேறியவர்கள் தொடர்பானவற்றை கருப்பொருளாகக் கொண்டுள்ளதால், வாசிக்கும் போதே மனம் நெகிழ்கின்றது. பல்வேறு இதழ்களில் வெளியாகிய பாராட்டுப் பெற்ற 23 சிறுகதைகள் இந்தத் தொகுப்பில் வெளியாகியுள்ளன.

போருக்குப் பிந்திய ஈழத் தமிழர்களின் வாழ்க்கை, அவர்களுக்கு ஏற்பட்ட பொருளாதாரப் பாதிப்பு, பெண்கள் அனுபவித்த வேதனைகள் போன்றவற்றை இந்தக் கதைகள் அப்பட்டமாகக் காட்டுகின்றன.

எழுத்தாளர் மாத்தளை சோமு சிறுகதை, புதினம், பயண இலக்கியம் முதலான துறைகளில் பல நூல்களை எழுதி மலையக இலக்கிய வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றியவர். அத்துடன் மலையக இலக்கிய வளர்ச்சிக்குப் பங்காற்றிய மாத்தளை சோமுவின் பெயர் தமிழ் இலக்கிய உலகில் மிகவும் பரிச்சயமானது. இலக்கியத் துறையில் தனக்கென தனியான ஒரு இடத்தைப் பிடித்திருப்பவர்.

அவுஸ்திரேலியாவில் புலம்பெயர்ந்த நிலையில் அமைதியாக தனது எழுத்துப்பணியை சமூக நோக்கோடு செய்துவருபவர். அவரது இலக்கிய முயற்சிகளின் தொடராக முப்பதாவது நூல் வெளியாகி உள்ளது.







இந்நூல் வெளியீட்டு நிகழ்வு சிட்னியில் உள்ள துங்காபி புனித அந்தோனியார் தேவாலய மண்டபத்தில் பெருந்திரளான இலக்கிய ஆர்வலர்கள் முன்னிலையில் நடைபெற்றது. மாத்தளை சோமுவுக்கு எழுத்தே உயிர்மூச்சாக இருக்கிறது. இந்நிகழ்வின் தொடக்க இணைப்புரையை குலசேகரம் சஞ்சயன், வரவேற்புரையை சமூக ஆர்வலர் வசந்தராஜா ஆற்றினர்.

தலைமை உரையை கலாநிதி குலம், வாழ்த்துரைகளை பத்திரிகையாளர் எஸ். சுந்தரதாஸ் மற்றும் கலாநிதி மாலினி ஆனந்தகிருஷ்ணன் ஆற்றினர். இலக்கியப் படைப்புகள் அனைத்திலும் தனக்கென தனிமுத்திரை பதித்துள்ள மாத்தளை சோமு பற்றிய பகிர்வை ஐங்கரன் விக்கினேஸ்வரா வழங்கினார்.

'ஒற்றைத்தோடு' சிறுகதைத் தொகுதி நூல் அறிமுக உரையினை செல்வி வி.விஜயாழ், திருமதி இந்துமதி சிறினிவாசன், மயில்வாகனம் தனபாலசிங்கம் ஆகியோர் வழங்கினர். அத்துடன் முனைவர் இலக்குவன் சொக்கலிங்கமும் உரையாற்றினார்.

நூலாசிரியர் மாத்தளை சோமுவின் பதிலுரையைத் தொடர்ந்து, நிகழ்வின் நன்றியுரையை பூபாலசிங்கம் சின்னய்யா ஆற்றினார்.

**ஐங்கரன் விக்கினேஸ்வரா...**

# வாழைச்சேனை மண்ணின் அடையாளமாக திகழும் அமைச்சுச் செயலாளர் மகேசன்

அண்மையில் வழங்கப்பட்ட 14 அமைச்சுகளின் செயலாளர்களுக்கான நியமனத்தில் இடம்பிடித்துள்ள ஒரேயொரு தமிழரான கணபதிப்பிள்ளை மகேசன் வாழைச்சேனையைச் சேர்ந்தவராவார். இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளராக பதவி வகித்த கணபதிப்பிள்ளை மகேசனுக்கு மீண்டும் மகளிர், சிறுவர் மற்றும் இளைஞர் விவகாரம், விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளராக நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

அவர் 1965.10.20 இல் பிறந்தார். வாழைச்சேனையில் பிரபலமான விஷ வைத்தியராக விளங்கிய கணபதிப்பிள்ளை மற்றும் பொன்னம்மா தம்பதியருக்கு மொத்தம் 10 பிள்ளைகள். அவர்களில் கடைசியாய் பிறந்தவர் மகேசன். தரம் 1 முதல் 5 வரை புதுக்குடியிருப்பு வாணி வித்தியாலயத்தில் கற்றார். தரம் 6 முதல் 13 வரை வாழைச்சேனை இந்துக்கல்லூரியில் (அப்போது தமிழ் மகா வித்தியாலயம்) கற்றார். உயர்தரத்தில் சித்தி பெற்று யாழ் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவானார். கலைப்பிரிவில் பட்டம் பெற்ற இவரது மூத்த சகோதரர் தியாகராஜா கல்குடா தொகுதியின் முதலாவது பட்டதாரி ஆவார்.

1989 இல் யாழ். பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பினை நிறைவு செய்த பின்னர், இலங்கை நிருவாக சேவை பரீட்சை எழுதி அதில் சித்திபெற்று வாழைச்சேனை பிரதேச செயலாளராக நியமனம் பெற்றார். அதன்பின்னர் வவுணதீவு, செங்கலடி பிரதேச செயலாளராக பணிபுரிந்தார். இக்காலப்பகுதியில் தனது முதுமாணிப்பட்டக் கல்வியைப் பூர்த்தி செய்தார். மேற்படிப்புக்காக பாங்கொக் சென்றார். வெளிநாட்டு பட்டக் கல்வியினை முடித்து திரும்பிய அவருக்கு 2005இல், பட்டிப்பளை பிரதேச செயலாளராக நியமனம் கிடைத்தது. அங்கு ஆறுமாத காலம் பணியாற்றிய பின்னர் அதே வருடம் மட்டக்களப்பு மாவட்ட உதவி அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்டார். பிரதேச செயலாளராக விளங்கிய காலகட்டங்களில் வாழைச்சேனை, வவுணதீவு, செங்கலடி பிரதேச சபைகளின் விசேட ஆணையாளராகவும் பணிபுரிந்துள்ளார்.





அதன் பின்னர், 2008 ஏப்ரலில் இலங்கை வெளிவிவகார அமைச்சின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். இந்நியமனம் பெற்ற முதல் தொகுதியினரில் இடம்பிடித்த ஒரேயொரு தமிழர் இவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. அதனைத் தொடர்ந்து நைரோபியில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயத்தின் ஆலோசகராக கடமையாற்றினார். இக்காலப்பகுதியில் ஐ.நா.வின் சுற்றுச்சூழல் மற்றும் வாழ்விட திட்டங்களில் பிரதி வதிவிடப் பிரதிநியாகவும் பங்காற்றியுள்ளார்.

அதனைத் தொடர்ந்து, 2011 முதல் இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பதிவாளராக கடமை புரிந்தார். 2015 முதல் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் மேலதிக செயலாளராக பணியாற்றினார். மேலும் உலக உணவு நிகழ்ச்சித் திட்டத்தின் செயற்றிட்டப் பணிப்பாளராகவும் உணவு ஊக்குவிப்புசபையின் பணிப்பாளர் சபை உறுப்பினராகவும் விளங்கினார்.

2020 இல் யாழ். மாவட்டத்தின் அரசாங்க அதிபராகப் பொறுப்பேற்றார். கொவிட்19 தொற்று நோய் காலகட்டத்தில் மிகவும் சிறப்பாக பணியாற்றியமைக்காவும் தனது பதவிக்காலத்தில் பல அபிவிருத்தித் திட்டங்களை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தியமைக்காகவும் பின்வரும் தேசிய விருதுகளையும் பெற்றுள்ளார். தேசிய உற்பத்தித் திறன்2020 முதலிடம், மற்றும் சமூக பாதுகாப்பு வாரியத்தின் தேசிய விருது 2020, 2021&2022இல் முதலிடம்.

2023 ஜனவரியில் விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளரானார். தற்பொழுது மீண்டும் புதிய அரசாங்கத்தில் மகளிர், சிறுவர் மற்றும் இளைஞர் விவகாரம், விளையாட்டுத் துறை அமைச்சின் செயலாளராக நியமனம் பெற்றுள்ளார்.

யாழ்.பல்கலைக்கழகத்தில் கலைமாணிப் பட்டம், சர்வதேச வணிகத்தில் எம்.பி.ஏ, எல்.எல்.பி. சர்வதேச உறவுகளில் பி.ஜி.டி. பட்டம் போன்றவற்றைப் பெற்று கல்வியினால் உயர்ந்து வாழைச்சேனை மண்ணின் அடையாளமாய் விளங்குகிறார் கணபதிப்பிள்ளை மகேசன்.

**எஸ்.ஏ.ஶ்ரீதர்...**
(வாழைச்சேனை தினகரன் நிருபர்)

# மேல்மாகாணத்தின் பன்னிரண்டாவது ஆளுநர் தொழிலதிபர் ஹனீப் யூஸுப்



ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவினால் மேல்மாகாணத்தின் புதிய ஆளுநராக நியமனம் பெற்றுள்ள தொழிலதிபர் ஹனீப் யூஸுப் சிறுபான்மை சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் மேல்மாகாணத்தின் பன்னிரண்டாவது ஆளுநராவார். Universal Memon Organisation தலைவரும் சமூக செயற்பாட்டாளருமான சிராஸ் யூனுஸ் ஆளுநரை வாழ்த்தி பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்.

மேல் மாகாண புதிய ஆளுநர் ஹனீப் யூசுப், உலக மேமன் அமைப்பி (World Memon Organisation) தலைவராவார். அவர் தொண்டு அமைப்புகள், தர்ம ஸ்தாபன அமைப்புகள் மற்றும் சன சமூக மேம்பாட்டுக்கு பங்களிப்பை வழங்கியுள்ள தொழிலதிபராவார்.

யுனிவர்சல் மேமன் சமூகத்தின் (Universal Memon Organisation) தலைவரும் சமூக செயற்பாட்டாளருமான ஹாஜி சிராஸ் யூனுஸ் மேல்மாகாண புதிய ஆளுநரை பத்தமுல்லவில் அமைந்துள்ள ஆளுநர் செயலகத்தில் சந்தித்து பாராட்டுக்களைத் தெரிவித்தார்.



இலங்கையின் மாகாணசபை வரலாற்றில் மேல்மாகாண ஆளுநர்களாக நியமனம் பெற்ற பன்னிரெண்டு பேரில் ஒன்பது பேர் சிறுபான்மை சமூகங்களைச் சேர்ந்தவர்களாவர். நாட்டின் 37 ஆவது முன்னாள் பிரதம நீதியரசரான மறைந்த எஸ்.சர்வானந்தா மேல்மாகாணத்தின் முதலாவது ஆளுநராவார். இவர் 1988 முதல் 1994 வரை ஆறாண்டுகள் ஆளுநராக கடமையாற்றினார்

மேல் மாகாண ஆளுநர்களாக சிறுபான்மை சமூகங்களைச் சேர்ந்த எஸ்.சர்வானந்தா, டீ.சுவாமிநாதன், கே.விக்னராஜா, பீ.ராமநாதன், அஸ்ஸெய்யது அலவி மௌலானா, கே.சி.லோகேஸ்வரன், ஆஸாத் சாலி, ஏ.ஜே.எம்.முஸம்மில் மற்றும் ஹனீப் யூசுப் ஆகியோர் நியமிக்கப்பட்டிருந்தனர்.பெரும்பான்மைச் சமூகத்தைச் சேர்ந்த ஹேமகுமார நாணயக்கார (2018_2019), சீதா அரம்பேபொல(2019_2020) மற்றும் ஏயார் மார்ஷல் ரொஷான் குணதிலக (2020_2024)ஆகியோர் மேல்மாகாண முன்னாள் ஆளுநர்களாவர்.

ஆளுநரின் பதவியேற்பு நிகழ்வில் மேல்மாகாண அவைத் தலைவர் சுனில் விஜேரத்ன, பிரதம செயலாளர் எஸ்.எல். தம்மிக விஜய்சிங், ஆளுநரின் செயலாளர்பீ.சோமசிறி மற்றும் மாகாண அரச சேவைகள் திணைக்களத் தலைவர்களும் கலந்து கொண்டனர்.

**எம்.எஸ்.எம்.முன்தஸிர்...**
(பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)

# திடீரென மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட ரஜனி!

உடல் நலக்குறைவு காரணமாக நேற்று முன்தினம் இரவு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நடிகர் ரஜினிகாந்திற்கு இருதயத்தில் அடைப்பு இருப்பது கண்டறியப்பட்டு ஆஞ்சியோ சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. சிகிச்சைக்குப் பிறகு குடும்பத்தினருடன் ரஜினிகாந்த் நன்றாக பேசினார். அவர் இன்று வீடு திரும்பவிருந்தார்.

ரஜினிகாந்த் உடல்நலக் குறைவு காரணமாக நேற்றுமுன்தினம் நள்ளிரவில் சென்னை கிரீம்ஸ் சாலையில் உள்ள அப்பலோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். 'வேட்டையன்' படத்தில் நடித்து முடித்துள்ள ரஜினிகாந்த், தற்போது லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் 'கூலி' திரைப் படத்தில் நடித்து வருகிறார்.



இந்நிலையில் நேற்றுமுன்தினம் விசாகப்பட்டினத்தில் நடந்த கூலி படப்பிடிப்பில் கலந்துகொண்ட நடிகர் ரஜினிகாந்துக்கு நெஞ்சுவலியும் அடிவயிற்றில் வலியும் ஏற்பட்டன. இதையடுத்து அப்பலோ மருத்துவமனை மருத்துவர்களை தொடர்புகொண்டு ரஜினி பேசினார். இதன்பின்னர் நேற்றுமுன்தினம் இரவு 10 மணியளவில் நடிகர் ரஜினிகாந்த் அப்பலோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

ரஜினிகாந்துக்கு நேற்றுக்காலை 6 மணியில் இருந்து 7 மணிக்குள் மூன்று விதமான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதனைத் தொடர்ந்து இருதயவியல் சிகிச்சை நிபுணர் சாய் சதீஷ் உள்பட 3 பேர் தலைமையில் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. 4 மணிநேர பரிசோதனைக்கு பிறகு அவருக்கு இரத்த நாளத்தில் அடைப்பு இருப்பது கண்டறியப்பட்டது. இதையடுத்து ரஜினிகாந்திற்கு ஆஞ்சியோ சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது.

அவர் சுமார் அரைமணி நேரம் மயக்கத்தில் இருந்ததாகவும், அதன்பின்னர் கண்விழித்த ரஜினிகாந்த் மருத்துவர்களிடம் சிரித்துப் பேசியதாகவும் தகவல் வெளியாகியுள்ளது. அவர் மருத்துவர்களுக்கு நன்றி தெரிவித்துள்ளார். அவர் தற்போது எழுந்து, நடந்து செல்லும் அளவுக்கு உடல்நலத்துடன் உள்ளார்.




# கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாண மாவட்டங்களில் 10,000 மரங்களை நடும் முயற்சியை கொமர்ஷல் வங்கி ஆரம்பித்தது

கொமர்ஷல் வங்கியின் நிலைபெறுதகு தன்மையை மேம்படுத்துவதற்கான நாடளாவிய முயற்சியின் ஒரு பகுதியாக வட பகுதியில் அமைத்துள்ள மாவட்டங்களான யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சியில் 10,000 மரக்கன்றுகளை நடும் திட்டமொன்றை கொமர்ஷல் வங்கி ஆரம்பித்துள்ளது.

கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணத்தில் யாழ்.பல்கலைக்கழகத்திற்கு சொந்தமான 600 ஏக்கர் காணிகளிலும், கிளிநொச்சி மாவட்டத்தின் ஊடாக செல்லும் ஏ9 வீதியின் ஓரங்களிலும் மரக்கன்றுகள் நடப்பட உள்ளதாக வங்கி தெரிவித்துள்ளது. யாழ்ப்பாணத்தில் இயங்கும் இலாப நோக்கற்ற சுற்றுச்சூழல் அமைப்பான க்ரீன் லேயர் [Green Layer] உடன் இணைந்து இந்த திட்டம் செயல்படுத்தப்படும்.



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப பீட வளாகத்தில் இடம்பெற்ற இத்திட்டத்தின் முதற்கட்ட அறிமுக நிகழ்வில் கொமர்ஷல் வங்கியின் தலைவர் திரு ஷர்ஹான் முஹ்சீன், முகாமைத்துவப் பணிப்பாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி திரு சனத் மனதுங்க, பிரதம செயற்பாட்டு அதிகாரி திரு எஸ். பிரபாகர் மற்றும் வங்கியின் பெருநிறுவன மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவப் பிரதிநிதிகள் பங்குபற்றினர். பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட பிரதிநிதிகளில் தொழில்நுட்ப பீடத்தின் பீடாதிபதி கலாநிதி டி.கேதீசன், விவசாய பீடத்தின் பீடாதிபதி கலாநிதி கே.பஹீரதன் மற்றும் பொறியியல் பீடத்தின் பீடாதிபதி கலாநிதி ஏ.கனேஸ்வரன் ஆகியோர் அடங்குவர்.

திட்டத்தின் முதல் இரண்டு கட்டங்களில் ஒரு மாதத்திற்குள் 3,000 மரக்கன்றுகள் நடப்படும் என்றும், மூன்றாவது மற்றும் இறுதி கட்டத்தில் 4,000 மரக்கன்றுகள் நடப்படும் என்றும் வங்கி தெரிவித்துள்ளது.

இத்திட்டமானது கிளிநொச்சி மாவட்டத்தின் சூழலியல் நிலப்பரப்பை மேம்படுத்துவதோடு உள்நாட்டு சமூகத்தில் சாதகமான தாக்கத்தையும் ஏற்படுத்தும்.

# தெற்காசிய பிராந்தியத்தில் சிறந்த இஸ்லாமிய வங்கியாக அமானா வங்கி தெரிவு

“தெற்காசியாவின் சிறந்த இஸ்லாமிய வங்கி 2024” எனும் பெருமைக்குரிய கௌரவிப்பை அமானா வங்கி பெற்றுள்ளது. பிரான்ட்ஸ் ரிவியு சஞ்சிகை விருதுகள் 2024 நிகழ்வின் போது இந்த கௌரவிப்பு வழங்கப்பட்டிருந்தது. பிராந்தியத்தில் காணப்படும் இதர வங்கிகளுடன் ஒப்பிடுகையில் அமானா வங்கியின் தலைமைத்துவ நிலை மேலும் வெளிப்படுத்தப்பட்டுள்ளதுடன், பிராந்தியத்தில் வட்டிசாராத நிதிவசதிகளை ஊக்குவிப்பதில் வெற்றிகரமான கதையை உணர்த்துவதாகவும் அமைந்துள்ளது.

இந்த கௌரவிப்பு தொடர்பில அமானா வங்கியின் முகாமைத்துவ பணிப்பாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி மொஹமட் அஸ்மீர் குறிப்பிடுகையில், “கடந்த சில ஆண்டுகளாக உறுதியான பெறுபேறுகளை பதிவு செய்திருந்த நிலையில், “தெற்காசியாவின் சிறந்த இஸ்லாமிய வங்கி 2024” எனும் உயர் கௌரவிப்பைப் பெற்றுள்ளதையிட்டு நாம் மிகவும் பெருமை கொள்கின்றோம். நிலைபேறான செயற்பாடுகளை பின்பற்றி, மக்களுக்கு நட்பான மற்றும் அபிவிருத்தியை நோக்காகக் கொண்ட வங்கியியல் வழிமுறைகளை ஊக்குவிப்பதில் நாம் காண்பிக்கும் அர்ப்பணிப்புக்கு இது கௌரவம் சிறந்த முன்னுதாரணமாக அமைந்துள்ளது. ” என்றார்.




சிறப்புக்கான அமானா வங்கியின் தொடர்ச்சியான செயற்பாடுகள் மற்றும் தமது வாடிக்கையாளர்களுக்கு பெறுமதி சேர்ப்பது போன்றவற்றுக்கான அதன் அர்ப்பணிப்பு ஆகியவற்றுக்கு கிடைத்த கௌரவிப்பாக இது அமைந்துள்ளது.

சிறிய நடுத்தரளவு தொழில்முயற்சியாளர்கள் மற்றும் விற்பனையாளர் பிரிவுகளில் சிறந்த செயற்பாடுகளை வங்கி தொடர்ச்சியாக வெளிப்படுத்தி, நிதித் துறையின் அபிவிருத்திக்கு பெருமளவு பங்களிப்பை வழங்குகின்றது. டிஜிட்டல் வங்கியியல் வளர்ச்சி மற்றும் வாய்ப்புகளை கண்டறிதல் போன்றவற்றில் கவனம் செலுத்துவதுடன், புத்தாக்கமான மக்களுக்கு நட்பான மற்றும் அபிவிருத்தியில் கவனம் செலுத்தும் நிதிசார் தீர்வுகளுக்கு பிராந்தியத்தில் கீர்த்தி நாமமும் கிடைத்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் அனுமதி பெற்று இயங்கும் நிதிச் சேவைகளை வழங்கும் நிறுவனமாகவும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட நிறுவனமாகவும் அமானா வங்கி பிஎல்சி திகழ்கின்றது. ஜித்தாவை தளமாகக் கொண்டியங்கும் IsDB குரூப் பிரதான பங்காளராக திகழ்கின்றது

# இலங்கையில் புத்தம் புதிய Lenovo வணிக தயாரிப்புகள் சந்தைக்கு அறிமுகம்

IT Gallery Group (Pvt) Ltd. நிறுவனமானது, 2011 ஆம் ஆண்டு முதல் தகவல் தொழில்நுட்ப (IT) விநியோகச் சந்தையில் முக்கிய பங்கு வகிக்கின்ற ஒரு நிறுவனமாக இருந்து வருகின்றது. அந்த வகையில், உலகளாவிய தொழில்நுட்ப சக்தியாக விளங்கும் Lenovo வர்த்தக நாமத்தின் புதிய உற்பத்தித் திறன் கொண்ட மடிகணனிகளை நிறுவனம் தற்போது இலங்கையில் அறிமுகம் செய்து வைத்துள்ளது. இந்த வெளியீட்டில், வணிக வல்லுநர்களிடையே பிரபலமான தெரிவான ThinkPad X1 Carbon தொடர் மற்றும் சக்திவாய்ந்ததும் சிறிய ரகத்திலானதுமான ThinkPad P16 Gen 2 workstation ஆகியவனவும் அடங்குகின்றன. இந்த அறிமுகத்தின்



மூலம், IT Gallery Group ஆனது, இலங்கைச் சந்தையில் தற்போது வரையான Lenovo வர்த்தகநாமத்தின் மிகவும் புத்தாக்கமான புதிய தயாரிப்புகளை வெளியிட்டுள்ளதால், இலங்கையை அதி வேக மட்டத்தை நோக்கி அழைத்துச் செல்ல தயார் நிலையில் உள்ளது. வெளிநாட்டு சந்தையில் அதிநவீன தொழில்நுட்பத்தை கொண்டு சேர்ப்பது தொடர்பில் Lenovo வர்த்தகநாமம் கொண்டுள்ள உறுதிப்பாட்டை இந்த கூட்டாண்மை எடுத்துக் காட்டுகிறது. சமீபத்திய புத்தாக்க கண்டுபிடிப்புகள் மற்றும் சிறந்த செயல்திறன்களுடன் ஒப்பிட முடியாத தயாரிப்புகள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கு இவ்வர்த்தகநாமம் அர்ப்பணிப்புடன் இருந்து வருகின்றது.

இந்த வெளியீட்டு நிகழ்வில் ஒரு தனிச்சிறப்பு வாய்ந்த ThinkPad X1 Carbon Gen 9 2in1 மற்றும் அதிநவீன செயற்பாட்டுத்திறன் மற்றும் பாதுகாப்பு தொழில்நுட்பங்களையும் நேர்த்தியான, இலகுரக வடிவமைப்பைக் கொண்ட ThinkPad X1 Carbon G12 ஆகியன வெளியிடப்பட்டுள்ளன. இந்த அல்ட்ராலைட் இலகு ரக வணிக மடிகணனிகளில் நீடித்த ஆயுளைக் கொண்ட காபன் பைபர் சட்டகம் காணப்படுவதோடு, இது 14 அங்குல திரையுடன் Intel processors மூலம் இயக்கப்படுகிறது. நீண்ட மின்கல ஆயுள் மற்றும் வணிகத் தரத்திலான பாதுகாப்பை அது வழங்குகிறது. இங்கு மற்றுமொரு சிறப்பம்சமாக Lenovo ThinkPad P16 Gen 2 இன் அறிமுகம் அமைகின்றது. இது தொழில்முறை பணிகளை மேற்கொள்வதற்காக வடிவமைக்கப்பட்ட உயர் செயல்திறன் கொண்ட நடமாடும் பணிநிலையமாக விளங்குகின்றது.

# வடமத்திய மாகாணத்தில் 6ஆவது தொழில் முனைவோர் திறன் மேம்பாட்டுத் திட்டத்தின் பதிவுகளை ஆரம்பித்த தீவா கரத்திற்கு வலிமை

‘தீவா கரத்திற்கு வலிமை தொழில் முனைவோர் திறன் மேம்பாட்டுத் திட்டம்’ ஆனது, பெண் தொழில் முனைவோரை ஆதரிப்பதற்காக, Hemas Consumer Brands நிறுவனத்தின் முதன்மையான சலவை பராமரிப்பு வர்த்தகநாமமான தீவாவிற்கும் Women in Management (WIM) அமைப்பிற்கும் இடையேயான ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும் ஒத்துழைப்பு முயற்சியாகும். இந்த நிகழ்ச்சித் திட்டம் 5 மாகாணங்களில் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு, 275 இற்கும் மேற்பட்ட பெண் தொழில் முனைவோர் தமது தொழில்களை மேம்படுத்த வலுவூட்டி உள்ளது. இந்தத் திட்டமானது, இப்பெண்களுக்குத் தேவையான தொழில் முனைவுத் திறன்களை வழங்குவதன் மூலம், அவர்களின் தொழில்களை மேம்படுத்த உதவுவதோடு மட்டுமல்லாமல், நாட்டின் பொதுவான பொருளாதார வளர்ச்சிக்கும் பங்களிக்கிறது.

இத்திட்டத்தின் 6ஆவது கட்டமானது, ஒரு நாள் கருத்தரங்காக எதிர்வரும் 2024 ஒக்டோபர் 07ஆம் திகதி அனுராதபுரம் நுவரகம் பலாத்த மத்திய பிரதேச செயலகத்தில் மு.ப. 9.00 மணி முதல் நடாத்தப்படவுள்ளது. இந்த கருத்தரங்கானது, WIM அமைப்பின் தலைவர் கலாநிதி சுலோச்சனா சிகேராவினால் முன்னெடுக்கப்படும். WIM ஆனது, மிகவும் சவாலான தொழில் முனைவோர் உலகில் திறமைகள், அறிவு, தன்னம்பிக்கையுடன் பெண்களை வலுவூட்டுவதை நோக்கமாகக் கொண்ட மிகவும் வெற்றிகரமான நிகழ்ச்சித் தொடரின் ஒரு அங்கமாக விளங்குகின்றது. இந்த கருத்தரங்கானது சிங்கள மொழியில் முன்னெடுக்கப்படும்.

‘தீவா கரத்திற்கு வலிமை’ தொழில் முனைவோர் திறன் மேம்பாட்டுத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது முதல், தொழில்முனைவை பெண்கள் அணுகுகின்ற முறையை மாற்றியமைத்து, அவர்களை உற்பத்தியாளர்கள் எனும் நிலையிலிருந்து வெற்றிகரமான வணிக உரிமையாளர்களாக மாற உதவியுள்ளது.

வணிகப் பதிவு, நிதி முகாமைத்துவம், விலை நிர்ணய உத்திகள், வாடிக்கையாளர் பராமரிப்பு, ஒன்லைன் சந்தைகள், வர்த்தகநாம பிரபலப்படுத்தல், பொதியிடல் போன்ற விடயங்களில் அவர்களுக்குத் தேவையான திறன்களை இந்தத் திட்டம் வழங்குகிறது.

# "இலங்கையின் சிறந்த வங்கி" மற்றும் "இலங்கையின் சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான சிறந்த வங்கி" ஆகிய விருதுகளை வென்ற HNB

இலங்கையின் முன்னணி தனியார் துறை வங்கியான HNB, சவாலான பொருளாதார நிலைமை மற்றும் உலகளாவிய சந்தை வீழ்ச்சிக்கு மத்தியில், 2024 ஆம் ஆண்டு புகழ்மிக்க யூரோமணி விருது வழங்கும் நிகழ்வில் "இலங்கையின் சிறந்த வங்கி" மற்றும் "இலங்கையின் சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான சிறந்த வங்கி" ஆகிய விருதுகளை வென்றுள்ளது.

"கடந்த ஆண்டில் சிறப்பான செயல்திறனை வெளிப்படுத்தியதற்காக எங்கள் அணி முழுமையான பாராட்டைப் பெற தகுதியானது. வைப்புத்தொகைகளில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியையும், ஆரோக்கியமான கட்டண வருவாயையும், வரிக்கு பிந்தைய வருமானத்தையும் (PAT) நாம் கண்டிருக்கிறோம். டிஜிட்டல் வங்கி திறனை அதிகரிக்கவும், சிறு மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களை




மேம்படுத்தவும், அனைத்து இலங்கையர்களுக்கும் முன்னேற்றத்தில் பங்காளியாக இருக்கவும் HNB செய்த பெரிய முதலீடுகளால் இந்த வலுவான செயல்திறன் ஊக்கப்படுத்தப்பட்டது."

"எங்கள் வாடிக்கையாளர்கள் மற்றும் நாட்டின் மீது வைக்கப்படும் நம்பிக்கை, தொடர்ந்து சிறந்து விளங்க முயற்சிக்க எங்களை ஊக்குவிக்கிறது. அனைத்து அளவிலான இலங்கை நிறுவனங்களும் தங்கள் முழு திறனில் செயல்பட எளிதாக்க, சிறந்த வங்கி அனுபவத்தை வழங்குவதற்கு நாங்கள் உறுதியளிக்கிறோம்" என HNB இன் பதில் பிரதம நிறைவேற்று அதிகாரி தமீத் பல்லவத்தே கூறினார்.

தொடர்ந்து அதிகரிக்கும் பணமற்ற பரிவர்த்தனைகளின் அடிப்படையில் வங்கியின் முன்னோடி டிஜிட்டல் வங்கி சேவைகளும் தொடர்ந்து முன்னேற்றமடைந்து வருகின்றன. இந்த வெற்றியின் பின்னணியில் HNB இன் டிஜிட்டல் சேவை முன்னேற்ற விகிதம் முக்கிய பங்கு வகித்ததுடன், இது HNB வாடிக்கையாளர்களிடையே தொடர்ந்து சீராக மேல்நோக்கிச் செல்கிறது.

# முழுக் குடும்பத்திற்கும் முழு வாய்ச்சுகாதார பராமரிப்பை வழங்கும் க்ளோகார்ட் பஞ்ச சக்தி

இலங்கையின் வாய்ச் சுகாதார பராமரிப்பில் மிகவும் நம்பகமான பெயரான க்ளோகார்ட், இயற்கை மூலப்பொருட்களின் பல்வேறு நன்மைகளை வாடிக்கையாளர்களுக்கு வழங்கும் வகையில் பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட இயற்கை மூலிகை குணநலன் கொண்ட பற்பசையான Clogard Pancha Shakthi இனை புதிய தோற்றத்தில் அறிமுகப்படுத்துவதில் பெருமை கொள்கிறது. தமது நுகர்வோருக்கு முழுமையான மற்றும் பல்வேறு பயன்கள் கொண்ட வாய்ச் சுகாதார பராமரிப்பு தீர்வுகளை வழங்குவது தொடர்பில் க்ளோகார்ட் கொண்டுள்ள இணையற்ற உறுதிப்பாட்டை இது பிரதிபலிக்கிறது.

இரிமேதாதி தைலம் அடங்கிய புதிய க்ளோகார்ட் பஞ்ச சக்தியானது, வாடிக்கையாளர்களுக்கு ஐந்து முக்கிய நன்மைகளை வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. பற்குழி ஏற்படுவதை தடுத்து பற்களை பாதுகாத்தல், பல்ஈறு வெண்படைகள் உருவாவதை நீக்குதல், ஆரோக்கியமான ஈறுகள் உருவாக ஊக்குவித்தல், பற்களின் நிறமாற்றம் ஏற்படுவதை குறைத்தல், வாயை தூய்மையாக பேணி சுத்தமான சுவாசத்தை வழங்குதல் உள்ளிட்ட நன்மைகளை பஞ்ச சக்தி பற்பசை வழங்குகின்றது. பற்குழிகள் மற்றும் ஈறு தொடர்பான பிரச்சினைகள், பற்களின்




நிறமாற்றம், வெண்படைகள், வாய்த் துர்நாற்றம் ஆகியவற்றினால் பாதிக்கப்பட்டுள்ள வாடிக்கையாளர்களின் இந்த அனைத்து பிரச்சினைகளுக்குமான ஒரே தயாரிப்பின் மூலம் தீர்வுகளை வழங்குவது பஞ்ச சக்தி பற்பசையாகும். இந்த வாய்ச் சுகாதார பிரச்சினைகளுக்கு எதிராக செயற்படக் கூடிய மருத்துவ குணங்கள் கொண்ட இரிமேதாதி தைலம், இயற்கை மூலிகைகளின் கலவையில் இருந்து தயாரிக்கப்படும் பெறுமதிவாய்ந்த தைலமாகும்.

இந்த இரிமேதாதி தைலமானது, கராம்பு, கறுவாப்பட்டை, ஏலம், சாதிக்காய் உள்ளிட்ட 23 இற்கும் மேற்பட்ட இயற்கை மூலப்பொருட்களால் தயாரிக்கப்படுகின்றது. இவ்வாறான பெறுமதி வாய்ந்த மூலிகை பஞ்ச பலம் மிக்க சக்தி கொண்ட பஞ்ச சக்தி பற்பசையானது, முழுமையான வாய்ச் சுகாதாரத்தை பேண உதவுகின்றது.

# மாபெரும் காட்சியறை திறப்புவிழாவுடன் நேர்த்தியில் தனது ஒரு தசாப்த கால நிறைவைக் கொண்டாடும் Bollywood Boutique



சாறிகள், சல்வார்கள் மற்றும் குர்த்தாக்கள் மற்றும் லெஹெங்காக்கள் ஆகியவற்றின் நேர்த்தியான தெரிவுக்கு பிரசித்தி பெற்ற, பாரம்பரிய ஆடைத்தெரிவுகளை வழங்கும் காட்சியறையான Bollywood Boutique, இலக்கம் 17, ஹம்டன் வீதி, கொழும்பு 06 என்ற முகவரியில் 7,000 சதுர அடி கொண்ட தாராளமான இட வசதி கொண்ட புதிய காட்சியறையை விமரிசையாக திறந்து வைத்து, முக்கியமான சாதனை மைல்கல்லொன்றை நிலைநாட்டியுள்ளது. இந்நிகழ்வானது காட்சியறையின் 10வது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் வகையில் இடம்பெற்றுள்ளது மாத்திரமன்றி, நகரத்திலுள்ள நவநாகரிக ஆர்வலர்களின் ஷொப்பிங் அனுபவத்தை மேம்படுத்தும் வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில், தான் வழங்கும் ஆடையணி வரிசைகளை விரிவுபடுத்தியுள்ளது.

2014 ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்ட Bollywood Boutique, மிகச் சிறந்த இந்திய மற்றும் பாகிஸ்தானிய நவநாகரிக ஆடைகளை நாடுவோரின் அபிமானம்பெற்ற தெரிவாக மாறியுள்ளது. நுணுக்கமாக நெசவு வேலைப்பாடு கொண்ட ஆடம்பரமான சாறிகள் முதல் எடுப்பான தோற்றத்தை வழங்கும் திருமண லெஹெங்காக்கள் வரை இரு நாடுகளிலிருந்தும் உச்ச ஆடை வடிவமைப்பாளர்களால் வடிவமைக்கப்பட்ட மிகச் சிறந்த தெரிவுகளை இக்காட்சியறை தொடர்ச்சியாக வழங்கி வருகின்றது.

Bollywood Boutique இன் முதன் முதலான சொந்த வர்த்தகநாமமான Zoraya வின் அறிமுகம் இந்நிகழ்வின் சிறப்பம்சமாக மாறியதுடன், பாரம்பரிய ஆடையணிகளின் சமகாலத்து திருப்புமுனையாக இந்த வர்த்தகநாமம் இணைந்துள்ளது. இப்புதிய ஆடையணி வரிசை நவீன ரசனைக்கு ஏற்ற வகையில் அமைந்துள்ளதுடன், காலத்தால் அழியாத பாரம்பரியங்களைக் கட்டிக்காத்து, நேர்த்தியையும், அழகுநயத்தையும் நாடுகின்ற முற்போக்கான நவநாகரிக ஆர்வலர்கள் மத்தியில் ஏற்கனவே ஆர்வத்தைத் தூண்டியுள்ளது.

Bollywood Boutique இன் முகாமைத்துவப் பணிப்பாளர் ஃபாரூக் அஷ்ரஃப், இது குறித்து பேரார்வத்துடன் கருத்து வெளியிடுகையில், “மிக முக்கியமான ஒரு தருணத்தில் எமது புதிய காட்சியறையை மிகவும் மகிழ்ச்சியுடன் திறந்து வைக்கின்றோம் என்று குறிப்பிட்டார்.

# 39ஆவது மெர்கன்டைல் தடகள சம்பியன்ஷிப் 2024இல் செலான் வங்கி சாதனை




ஆகஸ்ட் 9 முதல் 11 வரை சுகததாச மைதானத்தில் நடைபெற்ற 39ஆவது மெர்க்கன்டைல் தடகள சம்பியன்ஷிப்பில் செலான் வங்கி தனது சிறப்புத் திறமைகளை பெருமையுடன் வெளிப்படுத்தியது.

செலான் வங்கி 10 தங்கம், 8 வெள்ளி மற்றும் 5 வெண்கலப் பதக்கங்களுடன் ஒட்டுமொத்தமாக 6ஆவது இடத்தையும் வங்கிகள் மத்தியில் 2ஆவது இடத்தையும் சுவீகரித்தமை குறிப்பிடத்தக்கது. இச் சாதனை செலான் வங்கியின் விளையாட்டு வீரர்களின் அர்ப்பணிப்பு மற்றும் திறமையை எடுத்துக்காட்டுகிறது.

இவ்வாண்டின் நிகழ்வில் மொத்தம் 30 விளையாட்டு வீரர்கள் செலான் வங்கியைப் பிரதிநிதித்துவப்படுத்தி போட்டிகளில் பங்குபற்றியிருந்தனர்.

சாரங்கி சில்வா 2024 சம்பியன்ஷிப்பின் ஒட்டுமொத்த சிறந்த தடகள வீராங்கனையாகவும், பெண்களுக்கான சாம்பியன்ஷிப் பிரிவில் சிறந்த தடகள வீராங்கனையாகவும் தெரிவு செய்யப்பட்ட அதே வேளை கமலீன் மில்ஸ் 30 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் பிரிவில் சிறந்த தடகள வீராங்கனையாக அங்கீகரிக்கப்பட்டமையும் முக்கிய சிறப்பம்சங்கள் ஆகும்.

பதக்கம் வென்றவர்களில் சாமிக்க வீரவர்தன 400m, 400m தடை தாண்டல் ஓட்டம், 4x400m அஞ்சல் ஓட்டம் மற்றும் 4x100m அஞ்சல் ஓட்டம் ஆகியவற்றில் 4 தங்கங்களையும், 800m ஓட்டத்தில் ஒரு வெள்ளியையும் வென்று கவனத்தை ஈர்த்தார். சாரங்கி சில்வா நீளம் பாய்தல் மற்றும் முப்பாய்ச்சல் ஆகியவற்றில் 2 தங்கங்களை வென்றதோடு கமலீன் மில்ஸ் உயரம் பாய்தல் (புதிய சாதனை) மற்றும் ஈட்டி எறிதல் ஆகியவற்றில் 2 தங்கங்களையும், 200m ஓட்டத்தில் ஒரு வெள்ளியையும் வென்றார்.

தட்டு எறிதலில் ஜனீஷா ஸ்ரீஸ்காந்தா தங்கம் வென்றதுடன் 50 வயதுக்கு மேற்பட்ட ஆண்களுக்கான 200m ஓட்டத்தில் P. K. பிரேமசிறி தங்கதையும் மற்றும் 400m தடை தாண்டல் ஓட்டத்தில் ஹர்ஷினி செல்வராஜா வெள்ளியையும் வென்றமை ஏனைய குறிப்பிடத்தக்க நிகழ்வுகள் ஆகும். புதியவர்களுக்கான ஆடவர் 200m ஓட்டத்தில் பசிந்து மல்ஷான் வெள்ளியையும், புதியவர்களுக்கான ஆடவர் 100m போட்டியில் வெண்கலப் பதக்கத்தையும் வென்ற அதேவேளை 50 வயதுக்கு மேற்பட்ட ஆண்களுக்கான 1500m பந்தய நடையில் சமன் பெரேரா வெள்ளிப் பதக்கத்தை வென்றார்.

## IMF உடன்படிக்கையில்...

அதிகாரிகள் பங்கேற்பர் என்றும் தெரிவித்தார். இன்றைய தினம் நாட்டுக்கு வருகை தர வுள்ள சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளுடனான பேச்சுவார்த்தை ஆழமானதாக அமையாது என்பதை தெரிவித்த அவர்,

புதிய அரசாங்கத்தின் ஒரு ஆரம்ப கட்ட பேச்சு வார்த்தையாக மாத்திரமே இது அமையும் என்றும் தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது.

இதன் போது ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே, அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். ஊடகவியலாளர் தமது கேள்வியின் போது இம்முறை நடைபெற்ற அரசாங்கத்தின் முதலாவது அமைச்சரவைக் கூட்டத்தில், சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கை மற்றும் அது தொடர்பான பேச்சுவார்த்தைகள் தொடர்பில் விடயங்கள் பேசப்பட்டதா என கேள்வியெழுப்பினார். இதற்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

## ஈஸ்டர் தாக்குதல், மத்திய வங்கி...

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் நேற்று இது தொடர்பில் விளக்கமளித்த போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்த அமைச்சர்,

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தற்போது தனது ஜனாதிபதி பதவியை இழந்துள்ளார்.இந் நிலையில் அவரை சட்டத்தின் முன் பதிலளிப்பதற்காக நிறுத்த முடியும்.

அத்துடன் மோசடியில் ஈடுபட்ட அதிகாரிகள் தொடர்பில் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். எனினும் தற்போது தேர்தல் காலம் என்பதால் உடனடியாக அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட மாட்டாது. அதே வேளை, சில பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளும் மோசடி குற்றச்சாட்டுகளுக்கு இலக்கானவர்கள். எனினும் உடனடியாக அவரது பெயர்களை குறிப்பிட முடியாது. முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்து முறைப்படி அவர்களை இனங்காண வேண்டியுள்ளது.

எனினும், இந்த தேர்தல் காலம் அவ்வாறான தீர்மானத்தை மேற்கொள்ள பொருத்தமான காலம் அல்ல. அந்த வகையில் புதிய அரசாங்கம் அமைக்கப்பட்டதும் உரிய நடவடிக்கையை முறைப்படி மேற்கொள்ள நாம் தயார்.

நாட்டில் உடனடியாக மேற்கொள்ள வேண்டிய சில நடவடிக்கைகள் காணப்படுகின்றன. குறிப்பாக சில விசாரணைகளை முன்னெடுக்க வேண்டியுள்ளது.

அது முக்கியமாக ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான விசாரணையே. தற்போது விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன . அதேவேளை மத்திய வங்கி பிணைமுறி மோசடி தொடர்பில் ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பொலிஸார் தொடர்பில் சில தீர்மானங்களை எடுத்துள்ளோம். முன்னாள் அரசியல்வாதிகள் சிலர் பொலிஸ் பாதுகாப்பை பெற்றுக் கொண்டுள்ளனர். சட்டப்படி அதற்கான உரிமை அவர்களுக்குக் கிடையாது. பாராளுமன்ற உறுப்பினர்களின் பதவிக்காலத்தில் அவர்களுக்கு இரண்டு பொலிஸார் உத்தியோகபூர்வமாக பாதுகாப்புக்கு வழங்கப்படுகின்றனர். பதவிக் காலம் முடிந்ததும் அதனை வழங்க வேண்டிய அவசியம் கிடையாது.

பாராளுமன்ற உறுப்பினர் பதவி இல்லாத நிலையிலும் அரசியல் ரீதியான நட்பை பயன்படுத்தி சிலர், பொலிஸ் பாதுகாப்பை பெற்றுக் கொண்டுள்ளனர். அத்தகைய பொலிஸார் தமது பாதுகாப்பு கடமைகளுக்கு மேலதிகமாக அவர்களது வீடுகளிலும் வேலை செய்கின்ற நிலை காணப்படுகிறது. இந்த நிலை மாற்றப்பட வேண்டும். அதனால்தான், உத்தியோகபூர்வமற்ற வகையில் வழங்கப்பட்டுள்ள பாதுகாப்புக்கான பொலிஸாரை நாம் உடனடியாக அழைத்துள்ளோம். அவ்வாறு இதுவரை 1100 பேர் அழைக்கப்பட்டுள்ளனர். அதேபோன்று அவர்கள் உபயோகப்படுத்திய வாகனங்களும் மீள பெற்றுக் கொள்ளப்படவுள்ளது.

பொலிஸ் துறைக்குப் பொறுப்பான அமைச்சர் தெரிவித்தார் எனக் கூறி, பொதுமக்கள் சிலரை அசௌகரியத்தில் உள்ளாக்கிய சம்பவங்களும் நிகழ்ந்துள்ளன. அதில் இரத்தினபுரியில் மாணிக்கக்கல் தொழிலில் ஈடுபட்டவர்களும் உள்ளடங்குகின்றனர். நான் தனிப்பட்ட ரீதியில் எந்த உத்தரவையும் பிறப்பிக்கவில்லை. உத்தியோகபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள நான், அவர்களுக்குத் தடை விதிக்கவுமில்லை. எனினும் அமைச்சரே பணிப்புரை வழங்கினார் என பிரசாரங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. சிலர், அரசாங்கத்தை அசௌகரியத்திற்கு உள்ளாக்குவதற்காகவும் அவ்வாறு செயற்படுகின்றனர். அரசியல் சூழ்ச்சியாக அரசாங்கத்தை அசௌகரியப்படுத்த அவர்கள் அவ்வாறு செயல்பட்டால், அது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## ஜனாதிபதியுடன் அமெரிக்க...

உறவுகள், பொருளாதார மற்றும் சமூக ஒத்துழைப்பை வலுப்படுத்தல், பரஸ்பர ஆர்வமுள்ள துறைகள் குறித்தும் இதன்போது விசேட கவனம் செலுத்தப்பட்டது.

நீடித்து நிலைத்திருக்கும் இலங்கை அமெரிக்க உறவுகள் குறித்து ஆராய்வதற்காக ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவை நேற்று சந்திக்க முடிந்துள்ளமை குறித்து மகிழ்ச்சியடைகின்றேன்.

இலங்கையின் வெளிப்படைத் தன்மை, பொறுப்புக்கூறல், குடிமைப் பங்கேற்பு மற்றும் நல்லாட்சி ஆகியவற்றின் திறன்களை வலுப்படுத்தும் அதேவேளை வலுவான, அனைவரையும் உள்ளடக்கிய சமூகங்களையும், செழிப்படையும் பொருளாதாரத்தையும் கட்டியெழுப்பும், எங்களின் பகிரப்பட்ட இலக்குகள் குறித்து வலியுறுத்தியதாக தூதுவர் ஜூலி சங், தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார். இலங்கையர் தங்கள் சொந்த இலக்குகளையும் அபிலாசைகளையும் அடைவதற்காக அவர்களை வலுப்படுத்தும் எங்களின் உதவிகள் திட்டங்கள் குறித்தும் சுட்டிக்காட்டியதாகவும் இலங்கை புதிய அத்தியாயத்தை ஆரம்பிக்கும் வேளையில் ஐக்கியம், நல்லாட்சி, செழிப்பு மற்றும் மனித உரிமைகளுக்கு ஆதரவளிக்கும் வலுவான சகாவாக அமெரிக்கா விளங்குமென்றும் தான்தெரிவித்ததாக தூதுவர ஜூலி சங் பதிவிட்டுள்ளார்.

## சிறப்புரிமைகளை மீளாய்வு...

குழுவை நியமிப்பதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளதாக, அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

இது தொடர்பில் தற்போது நடைமுறையில் உள்ள கட்டளைச் சட்டங்களை ஆராய்ந்து, பரிந்துரைகளுடன் இரண்டு மாதங்களுக்குள் அறிக்கை சமர்ப்பிப்பதற்காக இந்த மூவரடங்கிய குழு நியமிக்கப்பட்டுள்ளது.

நீதி,பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் தொழில்

அமைச்சரான பிரதமர் ஹரிணி அமரசூரிய சமர்ப்பித்துள்ள யோசனைக்கே, அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு, நேற்று தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது. இங்கு விளக்கமளித்த போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்,

நாட்டு மக்களின் வாக்குகளால் நியமிக்கப்படும் பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள், மற்றும் முன்னாள் ஜனாதிபதிகளுக்கு சம்பளம், கொடுப்பனவு, ஓய்வூதியம், உத்தியோகபூர்வ இல்லம், வாகனங்கள், பணியாட்குழாம், அலுவலக உபகரணங்கள் மற்றும் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் போன்ற பல்வேறு உரித்துக்கள், கொடுப்பனவுகள் மற்றும் சிறப்புரிமைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

குறித்த உரித்துக்கள், கொடுப்பனவுகள் மற்றும் சிறப்புரிமைகளை வழங்குவதற்காக மக்களுடைய வரிப்பணத்திலிருந்து அரசாங்கம் குறிப்பிடத்தக்க நிதியை வருடாந்தம் செலவிட நேர்ந்துள்ளது.

அதிகளவான செலவுகளைக் குறைக்க வேண்டிய தேவையை அரசாங்கம் கண்டறிந்துள்ளது.இது தொடர்பான விடயங்களை ஆராய்ந்து திறைசேரிக்கு தேவையற்ற சுமைகளை ஏற்படுத்தும் மற்றும் முறையற்ற உரித்துக்கள், கொடுப்பனவுகள், சிறப்புரிமைகளை முறையான ரீதியில் மட்டுப்படுத்துவதற்கு அல்லது மாற்று முறைகளை அறிமுகப்படுத்துவதற்குப் பொயருத்தமான பரிந்துரைகளை இந்த குழு முன்வைக்கவுள்ளது.

## டீசல் விலைகள் குறைந்ததால்...

இதற்கமைய பஸ் கட்டணத்தை 04 வீதத்தால் குறைக்க தீர்மானிக்கப்பட்டதாக நேற்றுக் காலை ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த செயலாளர் குறிப்பிட்டுள்ளார். பஸ் கட்டணத்தை 4 சதவீதத்தால் குறைப்பதற்கு தீர்மானித்துள்ளதாக, அகில இலங்கை பஸ் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

## முன்னாள் MPக்கள் இராஜதந்திர...

கடவுச்சீட்டைப் பெற வேண்டுமெனவும் அவர் அறிவித்துள்ளார்.

பாராளுமன்றம் கலைக்கப்பட்டதன் பின்னர் இராஜதந்திர கடவுச்சீட்டுகள், கொடுப்பனவுகள், காப்புறுதி திட்டங்கள், தொலைபேசி கொடுப்பனவுகள் போன்ற சலுகைகளுக்கு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு உரிமை இல்லை என்றும் அவர் ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

எவ்வாறாயினும் மாதிவெல வீடமைப்புத் தொகுதியில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள வீடுகளில், பொதுத் தேர்தல் முடியும் வரை முன்னாள் எம்.பி.க்கள் தங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். அரசியலமைப்பு பேரவையில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்கள் தவிர்ந்த, ஏனைய அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்காக வழங்கப்பட்டுள்ள ரிவோல்வர்களை மீள ஒப்படைக்குமாறு கோரப்பட்டுள்ளதாக பாராளுமன்ற பிரதி செயலாளர் சமிந்த குலரத்ன தெரிவித்துள்ளார்.

தனிப்பட்ட துப்பாக்கிகளை பெற்ற பாராளுமன்ற உறுப்பினர்கள், அனுமதியின் நிபந்தனைகளுக்கு உட்பட்டு அவற்றை வைத்திருக்க முடியும் என்று அவர் கூறினார்.

## பஸ் கட்டணங்கள் நேற்று...

அதற்கிணங்க 4. 24 சதவீதத்தால் பஸ் கட்டணங்கள் குறைக்கப்பட்டுள்ளதாக ஆணைக்குழுவின் உயரதிகாரியொருவர் தெரிவித்தார்.

புதிய கட்டண திருத்தத்துக்கு அமைய, ஆகக் குறைந்த பஸ் கட்டணம் ஒரு ரூபாவால் குறைக்கப்பட்டு, இதுவரை 28 ரூபாவாக அறவிடப்பட்ட ஆகக் குறைந்த பஸ் கட்டணம் 27 ரூபாவாக குறைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அதன்படி 36 ரூபாவாகவிருந்த பஸ் கட்டணம் 35 ரூபாவாகவும் 47 ரூபா 45 ரூபாவாகவும் 58 ரூபா 56 ரூபாவாகவும் 69 ரூபா 66 ரூபாவாகவும் 80 ரூபா77 ரூபாவாகவும் 91ரூபா 87 ரூபாவாகவும் 94 ரூபா 90 ரூபாவாகவும் 102 ரூபா 97 ரூபாவாகவும் குறைக்கப்பட்டுள்ளது.

இந்த அடிப்படையில் முழுமையான கட்டணம் 4.24 வீதத்தால் குறைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## வாகனங்கள் மீண்டும் அந்தந்த...

(01) அந்தந்த நிறுவனங்களுக்கே மீண்டும் கையளிக்கப்பட்டன.

இதன்போது19 வாகனங்களை மீளக் கையளிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. அவற்றில் 15 வாகனங்கள், முன் அறிவித்தலுக்கமைய வருகை தந்திருந்த இந்நிறுவனங்களின் அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டன.

அதன்படி, வீதிஅபிவிருத்தி அதிகார சபையின் 08 வாகனங்களும், நிதி அமைச்சின் 03 வாகனங்களும் தென் மாகாணசபை, போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவை அமைச்சு, வன ஜீவராசிகள் திணைக்களம் என்பவற்றிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தலா ஒவ்வொரு வாகனங்கள் உள்ளடங்கலாக மொத்தமாக 15 வாகனங்கள் மீளக்கையளிக்கப்பட்டன.

ஜனாதிபதி அலுவலகத்தின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் ரொஷான் கமகே, மேலதிக செயலாளர் மகேஷ் ஹேவா விதாரண உள்ளிட்ட பலர், வாகனங்கள் கையளிக்கும் சந்தர்ப்பத்தில் கலந்து கொண்டனர்.

## புதிய அரசியலமைப்பு மூலம்...

இனப் பிரச்சனைக்கான தீர்வு தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன என எழுப்பிய கேள்விக்குப் பதில ளிக்கும் போதே, அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

ஊடகவியலாளர் தமது கேள்வியின் போது தமிழ் மக்களின் இனப்பிரச்சினை தீர்வுக்கு அரசாங்கம் மேற்கொள்ளவுள்ள நடவடிக்கைகள் மற்றும் 13வது அரசியலமைப்பு திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன என்றும் கேள்வி எழுப்பினார். இது தொடர்பில் மேலும் தெரிவித்த அமைச்சர்;

எதிர்வரும் பொதுத் தேர்தலுக்குப் பின்னர் புதிய அரசாங்கம் நியமிக்கப்பட்ட பின், புதிய அரசியலமைப்பை தயாரிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பமாகும். அந்த அரசியலமைப்பு தயாரிக்கப்பட்டு மக்களின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

அண்மையில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்று புதிய ஜனாதிபதி தெரிவு செய்யப்பட்டார். அந்த வகையில் புதிய அரசாங்கத்தை நியமிப்பதற்காக பாராளுமன்ற தேர்தலை நடத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தமிழ் மக்களின் தேசிய பிரச்சினை தீர்வு தொடர்பான விடயங்களை நாம், தெரிவித்துள்ளோம்.

அந்த வகையில் புதிய அரசியலமைப்பை உருவாக்கி அது நாட்டு மக்களின் அங்கீகாரத்திற்காக முன்வைக்கப்படும். சர்வஜன அங்கீகாரமும் பெறப்படும். இதற்கான கொள்கை எம்மிடம் உண்டு. புதிய அரசாங்கம் அமைக்கப்பட்ட பின்னர், நாம் அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்போம் என்றும் அவர் தெரிவித்தார்.

அரசியல் கைதிகளுக்கு விடுதலை வழங்கப்பட வேண்டும் என்பதே அரசாங்கத்தின் நிலைப்பாடு. அதற்கான சட்டபூர்வ வரைபு ஒன்று உள்ளது. அதனை நீதி அமைச்சிடமிருந்து பெற்றுக் கொண்டு அதற்கான நடவடிக்கைகளை நாம் எதிர்காலத்தில் முன்னெடுக்கத் தயாராக உள்ளோம்.

## விடைத்தாள் திருத்த...

தரம் 5 புலமைப்பரிசில் வினாத்தாள் விவகாரம் தொடர்பில் ஆர்பாட்டத்தில் ஈடுபட்ட பெற்றோருக்கும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்குமிடையிலான சந்திப்பொன்று, நேற்று முன்தினம் (30) பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது. இதன்போதே விடைத்தாள் திருத்தும் பணிகளை இருவாரங்களுக்கு இடைநிறுத்துமாறு ஜனாதிபதி உரிய அதிகாரிகளை அறிவுறுத்தியுள்ளார்.

புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாளின் 03 கேள்விகள் மட்டுமின்றி 08 கேள்விகள் பரீட்சைக்கு முன் வெளியாகி இருந்ததெனவும், அந்தப் பரீட்சையை மீண்டும் நடத்துமாறும் ஜனாதிபதியிடம் பெற்றோர், வேண்டுகோள் விடுத்தனர். இதனையடுத்தே ஜனாதிபதி இவ்வாறு அறிவுறுத்தியுள்ளார்.

## கட்சியின் தீர்மானங்களை...

இதற்கு முன்னரும் கட்சியிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகக் குறைந்தது அவர்களுக்கு என்றுமே தேர்தல் நியமனம் கொடுக்கப்பட்டதில்லை.

முன்னர் 2019ஆம் ஆண்டு தேர்தல்களில் எங்களுடைய கட்சி மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவளிப்பதாக தீர்மானம் எடுத்த சில நாட்களில், மன்னாரைச் சேர்ந்த சிவகரனும், அனந்தி சசிதரனும் அதற்கு மாறாக ஒரு பத்திரிகையாளர் மாநாடு நடத்தியதன் காரணமாவே கட்சியிலிருந்து இடைநிறுத்தப்பட்டு வெளியேற்றப்பட்டார்கள்.

அவ்வாறிருக்க இந்தத் தடவை கட்சி எடுத்த தீர்மானத்தை மீறி, பலர் செயற்பட்டிருக்கிறார்கள். ஒரு தீர்மானமல்ல பல தீர்மானங்களை மீறியிருக்கிறார்கள். சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவளிப்பதென்பது இறுதியாக எடுத்த தீர்மானம். அதற்கு முன்பாகவே பொதுவேட்பாளருக்கு ஆதரவளிப்பதில்லை என்றும் ஒரு தீர்மானம் தெளிவாக நிறைவேற்றப்பட்டது. அது மாத்திரமல்ல பொதுவேட்பாளரை போட்டியிலிருந்து விலகுமாறும் கூட தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டது. அதற்கு பொது வேட்பாளரிடம் விளக்கமும் கோரப்பட்டது. பொதுவேட்பாளருக்கு ஆதாரவாக பிரசாரம் செய்வதற்கும் நாங்கள் எச்சரிக்கை விடுத்திருந்தோம். தீர்மானங்களுக்கு மாறாகச் செயற்பட்டவர்களிடம் விளக்கமும் கோரியிருந்தோம்.

அவர்களுக்கு நியமனம் கொடுக்கப்படுமா இல்லையா என்பது குறித்து நியமனக் குழுவே இறுதி முடிவெடுக்கும். நான் தனியாக முடிவெடுக்க முடியாது ஆனால் கட்சி கட்டுக்கோப்புடன் இருக்க வேண்டுமானால், கட்சியின் தீர்மானங்களை மீறும் எல்லார் மீதும் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

## மன்னார் மதுபானசாலையை...

மூடுமாறு, மதுவரி திணைக்கள ஆணையாளர் உத்தரவிட்டுள்ளார்.

மன்னார் தலைமன்னார் பிரதான வீதி, எழுத்தூர் சந்திக்கருகாமையில் புதிதாக திறக்கப்பட்ட மதுபானசாலையை மூடுவதற்கே உத்தரவிடப்பட்டுள்ளது.இதற்கான உத்தரவை மதுவரித் திணைக்கள ஆணையாளர் எழுத்து மூலம் அறிவுறுத்தியுள்ளார்.

புதிதாக திறக்கப்பட்ட மதுபானசாலைக்கு முன்பாக நேற்று முன்தினம் (30) ஒன்றுகூடிய பொதுமக்கள் பிரேதப் பெட்டி சகிதம் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இம் மதுபானசாலை அமைந்துள்ள பிரதேசத்தில் மக்கள் குடியேற்றம், இளைஞர் பயிற்சி நிலையம், ஆடை உற்பத்தி தொழிற்சாலை, பள்ளிவாசல் ஆகியவை அமைந்துள்ளன.

எனினும், பொதுமக்களின் எதிர்ப்பையும் மீறி இங்கு மது விற்பனை நிலையம் திறக்கப்பட்டதாக மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

அதே நேரம் நிரந்தர தீர்வு கோரி ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு சென்று, மதுபானசாலையை நிரந்தரமாக மூடுவதற்கு முயற்சிக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

## மட்டு. மாவட்ட மக்களுக்காக...

இதனை தெரிவித்தார். இதன்போது கருத்து தெரிவித்த அவர்,

பாராளுமன்றம் கலைக்கப்பட்டுள்ளது. பத்தாவது பாராளுமன்றம் கூடுவதற்கான தேர்தல் நடைபெறுவதற்கான ஆரம்ப வேலைகளை தற்போது அனைத்து கட்சியினரும் முன்னெடுத்துக் கொண்டிருக்கின்றனர்.

## காணாமலாக்கப்பட்டோரின்...

ஆர்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. இலங்கையில் எத்தனையோ சிறுவர் அமைப்புக்கள் இருந்தும், காணாமலாக்கப்பட்ட எமது குழந்தைகளுக்கான நீதிப்பொறிமுறையை ஒருவரும் ஏற்படுத்தி தரவில்லை. எனவே, நாம் சர்வதேச நீதிகோரி எமது போராட்டங்களை முன்னெடுத்து வருகிறோம்.

எமது போராட்டங்களை குழப்பும் விதமாக சில விசமிகள் திட்டமிட்டு செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றனர். இருப்பினும் எமக்கான நீதி கிடைக்கும் வரை நாம் இந்த போராட்டங்களை கைவிடப்போவதில்லை என ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்தனர். தமிழ் குழந்தைகள் பயங்கரவாதிகளா?,சிறுவர் தினம் நீதி தேடும் தினம், பச்சிளம் குழந்தைகள் ஆயுதம் ஏந்தினரா? போன்ற வாசகங்கள் தாங்கிய பதாதைகளை ஆர்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் ஏந்தியிருந்தனர்.

## இன்றைய பலன்கள்

(02.10.2024)

கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)





**மேஷம்:**
பல செயல்களில் எதிர்பார்க்கும் முன்னேற்றம் கிடைக்காமல் போகலாம். சில செயல்களில் அலைச்சல் இருந்தாலும் ஆதாயம் உண்டு.



**ரிஷபம் :**
எடுத்த காரியங்களில் முயற்சியுடன் முன்னேற்றமான பலன்களை அடைவீர்கள். என்றாலும் சில செயல்களில் சிறு சிறு தடைகளை சந்திப்பீர்கள்.



**மிதுனம்:**
சில காரியங்களில் எதிர்பார்த்த பலன் கிடைக்காவிட்டாலும் பலன் தந்த பல காரியங்களை எண்ணி மகிழ்ச்சியடைவீர்கள்.



**கடகம்:**
நீங்கள் மேற்கொள்ளும் செயல்களில் முன்னேற்றமான பலன்களை பெறுவீர்கள். பணவரவுகளில் திருப்தியான சூழ்நிலை காணப்படும்.



**சிம்மம்:**
உங்கள் செயல்கள் பலவற்றில் நன்மையான பலன்களை அடைவீர்கள். கடினமான செயல்களையும் முயற்சியோடு செய்து முன்னேற்றம் அடைவீர்கள்.



**கன்னி:**
நீங்கள் எடுத்த முயற்சிகளில் நல்ல பல முன்னேற்றங்களை காண்பீர்கள். வரவேண்டிய தன வரவு தாமதம் இன்றி வந்து சேரும்.



**துலாம்:**
உங்கள் முயற்சிகள் பலவற்றில் முன்னேற்றமான சூழ்நிலை காணப்பட்டாலும் சிலவற்றிலேயே வெற்றி காண்பீர்கள்.



**விருச்சிகம்:**
முயற்சிகள் சிலவற்றில் முன்னேற்றமான பலன்கள் கிடைக்கும். சில செயல்களில் தொடர்பு இருந்தாலும் தக்க நபர்களில் உதவியுடன் முயற்சிகளில் ஈடுபடுவீர்கள்.



**தனுசு:**
காரியங்கள் பலவற்றில் தீவிர முயற்சியுடன் ஈடுபட்டாலும் சிலவற்றிலே எதிர்பார்க்கும் பலனை அடைய முடியும்.



**மகரம்:**
பல செயல்களில் முயன்று செயலாற்றினாலும் சிலவற்றில் மட்டுமே முன்னேற்றமான பலன்களை அடைவீர்கள்.



**கும்பம்:**
ஒப்பந்தங்களில் கையெழுத்து இடுவதை தவிர்க்கவும். வரவேண்டிய தன வரவு சிறிது தாமதித்தே வந்து சேரும்.



**மீனம்:**
செயல்கள் பலவற்றில் சிறப்பாக முயற்சிகள் செய்தாலும் சில வற்றிலையை எதிர்பார்க்கும் நன்மைகளை அடைய முடியும்.

## எரிபொருட்களை அடுத்த...(3 ஆம் பக்க தொடர்)

னால், நாடு குறித்து கவனம் செலுத்தி அதனை மேற்கொள்வதற்கு கால அவகாசம் தேவைப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## NPP புதிய அரசாங்கத்தில்...(3 ஆம் பக்க தொடர்)

மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களே தமது கட்சியில் உள்ளனர். இதனால் தற்போதைய அரசாங்கத்தில் ஜனாதிபதி பிரதமர் மற்றும் ஒரு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சரே இடம்பெறுகிறார். இதனால், அமைச்சின் செயலாளர்கள் நியமிக்கப்பட்டு மக்களுக்கான சேவைகள் முறையாக முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

எமது உறுப்பினரான நிபுண ஆரச்சியை மற்றும் ஒரு அமைச்சராக நியமிப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதும் சட்டப் பிரச்சினை காணப்பட்டதால் அதனை மேற்கொள்ள முடியவில்லை.

அடுத்து அமைக்கப்படும் அரசாங்கத்தில் குறைந்தளவு அமைச்சர்கள் நியமிக்கப்பட்டு மக்களுக்கான நிறைவான சேவை வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

## JICA நிறுவனத்தின்...(3 ஆம் பக்க தொடர்)

(YAMADA TETSUYA) உள்ளிட்ட சிரேஷ்ட பிரதிநிதிகள் குழுவினர் நேற்று (01) பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவை சந்தித்தனர்.

ஜெயிக்கா நிறுவனத்தினால் இலங்கையில் முன்னெடுக்கப்பட்டு வரும் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய அபிவிருத்தி திட்டத்தின் இரண்டாம் கட்டம் மற்றும் தொலைக்காட்சி ஒளிபரப்பை டிஜிட்டல் மயமாக்குதல் போன்ற வேலைத்திட்டங்களை விரைவில் ஆரம்பிப்பது குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டது.

ஜெயிக்கா (JICA) நி றுவனத்தின் உதவியுடன் இந்நாட்டில் முன்னெடுக்கப்படும் 11 வேலைத்திட்டங்களை விரைவில் நிறைவு செய்வது குறித்து, அண்மையில்

ஜப்பான் தூதுவர் மற்றும் ஜனாதிபதிக்கு இடையிலான சந்திப்பின் போது கலந்துரையாடப்பட்டது. இந்த செயற்பாடுகளை துரிதப்படுத்துவது குறித்தும் இச் சந்திப்பில் ஆலோசிக்கப்பட்டது.

இலங்கைக்கான ஜப்பான் தூதரகத்தின் இரண்டாம் செயலாளர் கட்சுஹிரோ சுஷூகி (KATSUHIRO SUZUKI) உள்ளிட்டோரும் இந்த சந்திப்பில் கலந்துகொண்டிருந்தனர்.

## களுத்துறை ஸ்ரீ கதிர்...(3 ஆம் பக்க தொடர்)

அறநெறி பாடசாலை மாணவர்களது கலை கலாசார நிகழ்வுகள் ஆலய கலாசார மண்டபத்தில் வெகு விமரிசையாக நடைபெறும்.

## உலக மது ஒழிப்பு தினம்...

50 மரணங்கள் பதிவாகின்றன. எனவே, உலக மது ஒழிப்பு தினத்தை முன்னிட்டு, நாடளாவிய ரீதியிலுள்ள அனைத்து மதுபானசாலைகளும் மூடப்பட வேண்டும் என மது மற்றும் போதைப்பொருள் தகவல் மையம் மேலும் தெரிவித்துள்ளது.

## முன்னாள் MP எஸ். ஸ்ரீதரன்

ஜனாதிபதியாக, தெரிவு செய்யப்பட்ட அநுர குமார திசாநாயக்கவுக்கு வாழ்த்துத் தெரிவித்த எஸ். ஸ்ரீதரன், ஜனாதிபதியுடன் சிநேகபூர்வ உரையாடலிலும் ஈடுபட்டார்.

## ஐ.ம.சக்தியுடன் இணக்கப்பாடு...

மேற்கொண்டுள்ள நடவடிக்கை தொடர்பாக 'தினகரனு' க்கு தெரிவிக்கையில்,

பொதுத் தேர்தலில் எமது கட்சி ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து போட்டியிடுவது குறித்து விரிவான பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்துள்ளது. இதில் தொகுதி பங்கீடு முக்கியமான விடயமென்று அவர் குறிப்பிட்டார்.

தொகுதி பங்கீடு எமது நிலைப்பாட்டுக்கமைவாக இடம்பெறாத பட்சத்தில், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தேர்தலில் தனித்து களமிறங்கும் என்றும் அவர் மேலும் கூறினார்.




# துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் படுகாயம்

(அக்குறணை குறூப் நிருபர்)

வலப்பனை, மந்தாரம் நுவர பொலிஸ்பிரிவுக்குட்பட்ட பகுதியில் பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் கண்டி தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மந்தாரம் நுவர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எலமலை வனப்பகுதியில் புதையல் தோண்ட முற்பட்டவர்கள் மீது பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளனர். இதன்போது ஒருவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். புதையல் தோண்டுவதாக மந்தாரம் நுவர பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலொன்றின் அடிப்படையில் இச்சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது, புதையல் தோண்டுவதற்கு முற்பட்டவர்கள் பொலிஸாரை தாக்கியிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது.

அதில் ஒருவர் காயமடைந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். சந்தேகநபர்கள் நால்வரையும் சுற்றிவளைத்து பொலிஸார் கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் 40 முதல் 45 வயதுக்கு இடைப்பட்டவர்கள் எனவும் அதில் ஒருவர் தற்காலிகமாக பணி நிறுத்தம் செய்யப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர் எனவும் தெரியவந்துள்ளது.

துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்தவர் 41 வயதுடைய பொலிஸ் அதிகாரியெனவும் பொலிஸார் தெரிவித்தனர். இவர் ரிகில்கஸ்கட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கண்டி போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு அங்கு சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்தனர். இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை மந்தாரம் நுவர பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# 8 மாவட்டங்களில் வேட்பாளர்களை நிறுத்துகிறது தமிழ் முற்போக்கு கூட்டணி



சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் கூட்டணியின் கீழ் பொதுத்தேர்தலில் போட்டியிடுவதற்கு தமிழ் முற்போக்கு கூட்டணி தீர்மானித்துள்ளது. தமிழ் முற்போக்கு கூட்டணியின் அரசியல் உயர்பீடக் கூட்டம் நேற்று கொழும்பில் நடைபெற்றது.

இக்கூட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் இவ்வாறு தெரிவித்தார். மேல் மாகாணத்தில் கொழும்பு, கம்பஹா, களுத்துறை ஆகிய மாவட்டங்களிலும் சப்ரகமுவ மாகாணத்தில் இரத்தினபுரி, கேகாலை ஆகிய மாவட்டங்களிலும் மத்திய மாகாணத்தில் நுவரெலியா, கண்டி ஆகிய மாவட்டங்களிலும் ஊவாவில் பதுளை மாவட்டத்திலும் முற்போக்கு கூட்டணி வேட்பாளர்களை நிறுத்தவுள்ளதாக முன்னாள் எம்.பி, மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

# சடலம் மீட்பு

அம்பேபுஸ்ஸ கீனதெனிய ரயில் மார்க்கத்திற்கு அருகில் ஆணொருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அம்பேபுஸ்ஸ கீனதெனிய ரயில் மார்க்கத்திற்கு அருகிலுள்ள வனப்பகுதியிலிருந்து நேற்று (01) காலை ஆணொருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக மீரிகம பொலிஸார் தெரிவித்தனர்.

அம்பேபுஸ்ஸ பிரதேசத்தைச் சேர்ந்த 60 வயதுடைய நபரொருவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை மீரிகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# வாழைப்பழத் துண்டு தொண்டையில் சிக்கி குடும்பஸ்தர் மரணம்

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

வாழைப்பழத்தின் துண்டு தொண்டையில் சிக்கியதால் 74 வயதுடைய நபரொருவர் நேற்று (1) உயிரிழந்துள்ளார்.

பலாங்கொடை வெலிகபொல பகுதியைச் சேர்ந்த பீ.டப்ளியூ பியதாச எனும் நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். இவர் நேற்று பலாங்கொடை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாக வைத்தியர் கேதி சத்யா தெரிவித்தார்.

மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



ஊவா மாகாண புதிய ஆளுநர் சட்டத்தரணி கபில ஜயசேகர பதுளை நகர் 'மஸ்ஜிதுல் அன்வர்' பள்ளிவாசலுக்கு அண்மையில் விஜயம் மேற்கொண்டிருந்தார். புதிய ஆளுநரை பள்ளிவாசல் நிர்வாகம் வரவேற்றது.

# வெளிநாட்டுத் தொழில் மோசடி; இரு பெண்கள் கைது

வெளிநாட்டில் வேலை பெற்றுத்தருவதாக கூறி பணம் பெற்ற இருபெண்கள் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் அனுமதிப்பத்திரமின்றி இவ்வாறு பணமோசடியில் ஈடுபட்டுள்ளதாக தெரியவருகின்றது.

கண்டியைச் சேர்ந்த இரண்டு பெண்களே இவ்வாறு கைது செய்யப்பட்டு கண்டி நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளனர்.

தென்கொரியாவுக்கு அனுப்புவதாக மூவரிடம் தலா 5 இலட்சம் வீதம் 15 இலட்ச ரூபாவும், இத்தாலிக்கு அனுப்புவதாக கூறி பிறிதொரு நபரொருவரிடமிருந்து 7 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாவும் பெற்றுக்கொண்டதாக தெரியவருகின்றது. இதுதொடர்பில் பாதிக்கப்பட்டவர்கள் மேற்கொண்ட முறைப்பாடுகளுக்கமைய இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

மேற்படி நான்கு முறைப்பாடுகளுக்கும் ரூ.10 இலட்சம் படி ரூ.40 இலட்சம் பெறுமதியான இரண்டு சரீரப்பிணைகளில் சந்தேகநபர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

# அகில இலங்கை சமாதான நீதவானாக நியமனம்

(நானு ஓயா நிருபர்)



கந்தபளை கோட்லோஜ்சை பிறப்பிடமாகவும், இலக்கம் 02 மஹ ஊவா வலப்பனை பிரதேசத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்ரமணியம் சத்யதேவி அகில இலங்கை சமாதான நீதவானாக அண்மையில் நுவரெலியா மாவட்ட / நீதவான் நீதிமன்ற நீதிபதி என். பிள்யூ.கே.எல். பிரபுத்திக்கா லங்கானி முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார்.

இவர் தனது ஆரம்பக் கல்வியை நு/கோட்லோஜ் தமிழ் வித்தியாலயத்திலும் இடைநிலைக் கல்வியை நு/பரிசுத்த திரித்துவ மத்திய கல்லூரியிலும் கற்றுள்ளார்.

இவர் தற்போது நுவரெலியா மாவட்ட பிரதேச செயலகத்தில் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தராக பணியாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



லிந்துலை சரஸ்வதி தமிழ் மகா வித்தியாலயத்தில் பழைய மாணவர்களால் உருவாக்கப்பட்ட 'கற்றோர் பேரவையின் ஸ்மார்ட் வகுப்பறை' அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் பாடசாலை அதிபர் சிவலிங்கம் மற்றும் கல்வி அதிகாரிகள், கற்றோர் பேரவையின் உறுப்பினர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.
(படம்: தலவாக்கலை குறூப் நிருபர்)

# ஹப்புத்தளையில் குளவிக் கொட்டு: 7 பேர் பாதிப்பு



ஹப்புத்தளை, பிற்றத்மலை பகுதியில் நேற்று (01) குளவிக் கொட்டியதில் ஏழு பெண்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பிற்றத்மலை தோட்டத்தில் தேயிலை கொழுந்து பறித்துக் கொண்டிருந்த 30 வயதுக்கும் 54 வயதுக்கும் இடைப்பட்டவர்களே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று காலை 10.30 மணியளவில் குளவிக் கொட்டுக்கு இலக்காகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பெண்களை சிகிச்சைக்காக ஹப்புத்தளை வைத்தியசாலையில் அனுமதித்ததன் பின்னர், பெண் ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக தியத்தலாவை ஆரம்ப வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டதாக ஹப்புத்தளை வைத்தியசாலை பேச்சாளர் தெரிவித்தார்.

பண்டாரவளை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரதீப் களுபஹனவின் பணிப்புரையின் பேரில் ஹப்புத்தளை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரபோப சேபால ரத்நாயக்க இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருவதாகபொலிஸார்தெரிவித்தனர்.

# சினிமாவில் நடிக்க வைப்பதாக கூறி யுவதிகள் பாலியல் துஷ்பிரயோகம்

(பலாங்கொடை தினகரன் நிருபர்)

திரைப்படங்களிலும் சின்னத்திரை நாடகங்களிலும் நடிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குவதாக கூறி யுவதிகள் ஐவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்து கையடக்க தொலைபேசிகளில் வீடியோ எடுத்த இருவர் இரத்தினபுரி சிரிப்பாகம பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட நபர்கள் 30 மற்றும் 36 வயதுகளையுடையவர்கள் எனவும் கண்டி, இரத்தினபுரி பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். கைது செய்யப்பட்ட இளைஞர் யுவதிகளிடம் பொலிஸார் வாக்குமூலங்களை பதிவு செய்துள்ளனர்.

பலாபத்தல, மஹவத்த பிரதேசத்திலுள்ள வீட்டில் பல நாட்கள் தங்கியிருந்த இளைஞர், யுவதிகளை நிர்வாண புகைப்படங்கள் எடுப்பதற்கும் மற்றும் பாலியல் செயற்பாடுகளுக்கும் பயன்படுத்தியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்களின் கையடக்க தொலைபேசியில் நிர்வாண புகைப்படங்கள் இருப்பதையும் பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர். சந்தேகநபர்கள் பலாபத்தல பகுதியிலுள்ள அழகான இளைஞர் யுவதிகளை திரைப்படங்களில் மற்றும் சின்னத்திரை நாடகங்களில் நடிப்பதற்கு சந்தர்ப்பத்தை பெற்றுத் தருவதாக கையடக்கத் தொலைபேசி மூலம் குறுந்தகவல்களை வெளியிட்டு பணம் வசூலித்து வந்துள்ளதாகவும் பொலிஸார் சந்தேகிக்கின்றனர். சம்பவம் தொடர்பாக சிரிபாகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளதுடன் சந்தேகநபர்கள் இருவரையும் இரத்தினபுரி மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# முன்பள்ளி செல்ல மறுத்த சிறுமிக்கு சூடு வைத்த தாய் கைது

(அக்குறணை குறூப் நிருபர்)

முன்பள்ளிக்கு செல்ல மறுத்த ஐந்து வயது சிறுமிக்கு சூடு வைத்த தாய் கைது செய்யப்பட்டுள்ளார்.

கண்டி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாகஸ்தான பகுதியில் வாடகை வீட்டில் வசித்து வந்த முப்பது வயதுடைய பெண்ணொருவர் தனது பிள்ளை முன்பள்ளிக்கு செல்ல மறுத்ததால் உடலின் நான்கு பாகங்களில் கரண்டியால் சூடு வைத்துள்ளார். இதுதொடர்பில் கண்டி சிறுவர் மற்றும் மகளிர் பணியகத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கமைய பெண் கைது செய்யப்பட்டுள்ளார். காயமடைந்த சிறுமி கண்டி தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, சட்ட வைத்திய அதிகாரி முன்னிலையில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

# மலையகத்தில் சிறுவர் தின கொண்டாட்டங்கள்



(பொகவந்தலாவ நிருபர்)

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு ஹற்றன் கல்வி வலயத்துக்குட்பட்ட பொகவந்தலாவ கெர்க்கஸ்வோல்ட் இல.01 தமிழ் வித்தியாலயத்தின் சர்வதேச சிறுவர் தின நிகழ்வுகள் வித்தியாலய அதிபர் எஸ்.விஸ்வலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது மாணவர்கள் அதிபர், ஆசிரியர்களால் அழைத்து வரப்பட்டதுடன் மாணவர்களுக்காக கண்காட்சியொன்றையும் ஏற்படுத்தியிருந்தனர். அதனைதொடர்ந்து மாணவர்களுக்கான போட்டி நிகழ்ச்சியொன்று நடைபெற்றது.

இதன்போது மரக்கன்றுகளும் நாட்டி வைக்கப்பட்டது. போட்டியில் கலந்துகொண்ட மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டதோடு பாடசாலை நிர்வாகத்தினரால் மாணவர்களுக்கு மதிய நேர உணவுகளும் வழங்கி வைக்கப்பட்டன.





சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு மத நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நோக்கில் எலமல் பொத்த முஸ்லிம் மகா வித்தியாலய மாணவர்கள் சர்வமத வழிபாட்டு தலங்களுக்கான விஜயமொன்றை (1) நேற்று மேற்கொண்டனர். வாசலக்கோட்டை அந்தோனியார் ஆலயம் மற்றும் பம்பாவ பௌத்த விகாரை போன்ற ஆலயங்களை மாணவர்கள் பார்வையிட்டனர். இதன்போது எடுக்கப்பட்ட படத்தை இங்கு காணலாம். (படம்:மாத்தளை சுழற்சி நிருபர்)



சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு கண்டி இந்திய உயர்ஸ்தானிகர் காரியாலயத்தின் ஏற்பாட்டில் யட்டவத்த தமிழ் வித்தியாலயத்தில் கல்வி பயிலும் சகல மாணவர்களுக்கும் இலவசமாக புத்தகப்பை மற்றும் அப்பியாசக் கொப்பிகள் நேற்று வழங்கப்பட்டன. (படம்: மாத்தளை சுழற்சி நிருபர்)

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
திங்கள் 2024.09.30
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5611 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.30,623,700.00
ஆங்கில எழுத்து K — வெற்றி இலக்கங்கள் 2 4 9 4 7 8

அத சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 186 — ஆங்கில எழுத்து K — வெற்றி இலக்கங்கள் 9 4 7 8

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3853 — சீட்டிழுப்பு திகதி 2024.09.30 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு Rs. 60,000,000.00
ஆங்கில எழுத்து D — வெற்றி இலக்கங்கள் 33 34 39 62 — விசேட எழுத்து D — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 83029
ரூ. 1,000,000/-அதிர்ஷ்ட இலக்கம் 254073 — ரூ.500,000/- இலக்கம் 239632 — தஹஸ் வரம இலக்கம் 811

Mega Power — சீட்டிழுப்பு இலக்கம் 1959 — 2024.09.30 — 18224 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ.447,821,046.00
ஆங்கில எழுத்து Y — சுப்பர் இலக்கம் 02 — வெற்றி இலக்கங்கள் 07 34 48 51
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00 — அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

VIP — திகதி 2024.09.30 — சீட்டிழுப்பு இலக்கம் 437
ஆங்கில எழுத்து S — வெற்றி இலக்கங்கள் 5 8 7 8 8 7 — L7 எழுத்து S
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ.20,604,180.56

ராசி சுப பலன் — திகதி 2024.09.30 — சீட்டிழுப்பு இலக்கம் 920 — செவ்வாய் — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 3,374,322.80
வெற்றி இலக்கினம் மகரம் — வெற்றி இலக்கங்கள் 10 17 46 60 — தனயோக இலக்கம் 76942 — நாளுக்கான விதி எண் 15

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் 1641 — 2024.09.30 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.81,587,257.28
ஆங்கில எழுத்து A — வெற்றி இலக்கங்கள் 38 57 75 80 — விசேட எழுத்து A — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 77906

# கிழக்கின் குரல்



## அதிகரிக்கப்பட்ட உரமானிய கொடுப்பனவை நவம்பர் 17 க்கு பின்னர் வழங்க நடவடிக்கை

### அம்பாறை அரச அதிபர்

**ஒலுவில் விசேட நிருபர்**

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவால் விவசாயிகளுக்கு 25 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்ட உரமானிய கொடுப்பனவானது பெரும்போக நெற்செய்கை விவசாயிகளுக்கு எதிர்வரும் நவம்பர் 17ஆம் திகதிக்கு பின்னர் வழங்கப்படுமென, அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக்க அபேவிக்கிரம தெரிவித்தார்.

அக்கரைப்பற்று பிரதேச கல்லோயா வலதுகரை நீர்ப்பாசன பிரிவுக்குட்பட்ட பிரிவுகளில் பெரும்போக செய்கைக்கான ஆரம்பக் கூட்டம் நேற்று செவ்வாய்க்கிழமை அக்கரைப்பற்று பிரதேச செயலகத்தில் நடைபெற்ற போதே, அவர் இதனைக் கூறினார்.

எதிர்வரும் பொதுத் தேர்தலின் பின்னர் அதிகரித்த உர மானிய கொடுப்பனவு வழங்கப்படுமென்பதுடன், ஏற்கெனவே வழங்கப்பட்டு வரும் உர மானிய கொடுப்பனவு 15 ஆயிரம் ரூபா தொடர்ந்து வழங்கப்படும்.

அம்பாறையில் 2024/2025ஆம் ஆண்டுக்கான பெரும்போக செய்கைக்கான விதைப்புப் பணி இம்மாதம் 10ஆம் திகதி ஆரம்பித்து நவம்பர் 5ஆம் திகதிக்குள் நிறைவு செய்யப்படும்.

அம்பாறையில் இம்முறை பெரும்போக செய்கையானது பாரிய நீர்ப்பாசன பிரிவில் 65 ஆயிரம் ஹெக்டேயரிலும் சிறிய நீர்ப்பாசன பிரிவில் 5 ஆயிரத்து 525 ஹெக்டேயரிலும் ஆற்றுப்பாய்ச்சலில் 17 ஆயிரம் ஹெக்டேயரிலுமாக 87 ஆயிரத்து 65 ஹெக்டேயரில் நெற்செய்கை மேற்கொள்ளப்படும். கல்லோயா வலதுகரை நீர்ப்பாசனப் பிரிவுக்குட்பட்ட பிரிவில் 44 ஆயிரத்து 784 ஏக்கரிலும் இடதுகரை நீர்ப்பாசன பிரிவில் 39 ஆயிரத்து 857 ஏக்கரிலும் ஆற்றுப்பாய்ச்சலில் 35 ஆயிரத்து 363 ஏக்கரிலும் நெற்செய்கை மேற்கொள்ளப்படுமெனவும், அவர் கூறினார்.

எனவே விவசாயிகள் தாமதிக்காது குறிப்பிட்ட காலத்துக்குள் விதைப்புப் பணியை முன்னெடுக்க வேண்டுமெனவும் நீரை வீண் விரயம் செய்யாமல் நீர் முகாமைத்துவத்தை கடைப்பிடிக்குமாறும், அவர் கேட்டுக்கொண்டார். இதேவேளை கரும்புச் செய்கை மேற்கொள்வதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும், அவர் மேலும் தெரிவித்தார்.

## ஜனாதிபதியின் வெற்றியில் பங்காளர்களாகுவோம்!

### தேசிய மக்கள் சக்தி பிரமுகர்

**ஆரையம்பதி தினகரன் நிருபர்**



"எமது நாட்டை மாறி மாறி ஆட்சி செய்த தலைவர்கள், இதுவரைகாலமும் எமது மக்களின் அரசியல் உரிமைகளையும் தேவைகளையும் பெற்றுக்கொடுக்க தவறிவிட்டனர். தற்போது சிறந்த எதிர்காலத்தை அமைப்பதற்காக அனைத்து இன மக்களும் பெருமளவாக இணைந்து புதிய மாற்றமாக தேசிய மக்கள் சக்தியின் தலைவரான அநுரகுமார திசாநாயக்கவை ஜனாதிபதியாக தெரிவு செய்துள்ளதாக, தேசிய மக்கள் சக்தியின் மட்டக்களப்பு மாவட்ட நிறைவேற்றுக்குழு உறுப்பினர் கந்தசாமி பிரபு தெரிவித்தார்.

புதிய ஜனாதிபதியின் சேவைகளையும் குறுகிய காலத்துக்குள் மக்கள் உணர தொடங்கியுள்ளதாகவும், அவர் கூறினார்.

ஊடக சந்திப்பில் கேள்வியொன்றுக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

"ஏழை மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த வேண்டும், ஊழல்வாதிகளின் மோசடிகளை தவிர்க்க வேண்டும். பாதிக்கப்பட்டோருக்கு நியாயம் கிடைக்க வேண்டும். பொருளாதார நிலையை உயர்த்த வேண்டும். அனைத்து மக்களும் நிம்மதியாக வாழ வேண்டுமென்பதில் புதிய ஜனாதிபதி அவதானமாக உள்ளார். எனவே புதிய ஜனாதியின் வெற்றியில் பெரும் பங்குதாரர்களாக தமிழ் மக்கள் இருக்க வேண்டும். இதற்கான அரசியல் வியூகத்தை இன்றைய தமிழ்க் கட்சிகளின் தலைமைகள் உருவாக்க வேண்டும். இன்றைய காலத்தின் தேவையும் அதுவாகும்" என்றார்.

## கல்முனையில் புத்தக கண்காட்சி

'வாசிப்பை வளர்ப்போம்!, நேசிப்போம்!' எனும் தொனிப்பொருளின் கீழ் புத்தகக் கண்காட்சி இம்மாதம் 5ஆம் திகதி (சனிக்கிழமை) கல்முனையில் நடைபெறவுள்ளது. கல்முனை கலை இலக்கிய நண்பர்களால் இக்கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன், கல்முனை வெஸ்லி உயர்தர பாடசாலைக்கு அருகிலுள்ள கிறிஷ்தா இல்ல மண்டபத்தில் முற்பகல் 10.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணிவரை கண்காட்சி நடைபெறவுள்ளது.

இதன்போது தமிழின் முக்கியமான நூல்கள், ஈழம், இந்திய, புகலிட எழுத்துகள், பதிப்புகள் ஆகியன காட்சிப்படுத்தப்படவுள்ளதாக, கண்காட்சி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

ஆகையால் இக்கண்காட்சியில் அனைவரையும் கலந்துகொண்டு பயனடையுமாறும், ஏற்பாட்டாளர்கள் மேலும் கூறினர்.

## செங்கலடி ம.கல்லூரி, வின்சன்ற் மாணவர்கள் சிறந்த பெறுபேறு



சுகேஷ்மா

மட்டக்களப்பு வின்சன்ற் மகளிர் உயர் தேசிய பாடசாலை மாணவி பிரதீபன் சுகேஷ்மா இம்முறை வெளியான கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் 9A சித்திகளை பெற்றுள்ளார். இவரை நெறிப்படுத்திய பாடசாலை அதிபர், பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள், இவரது பெற்றோர் ஆகியோருக்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டுள்ளது. இம்மாணவியானவர் பிரதீபன் (தனியார் நிறுவன பிராந்திய முகாமையாளர்) மற்றும் வனிதா (செங்கலடி மத்திய கல்லூரி ஆசிரியை) ஆகியோரின் புதல்வியாவார்.

இதேவேளை இம்முறை வெளியான க.பொ.த. சாதாரணதரப் பரீட்சை பேறுபேற்றில் செங்கலடி மத்திய கல்லூரி (தேசிய) மாணவர்கள் 15 பேர் 9A சித்திகளை பெற்றுள்ளனர். 7 பேர் 8A, 1B சித்திகளையும் 5 பேர் 7A 2B சித்திகளையும் பெற்றுள்ளனர். அத்துடன் கணித பாடத்துடன் 88% மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர். இப்பாடசாலையில் இம்முறை 194 மாணவர்கள் பரீட்சைக்கு தோற்றியிருந்தனர்.

## கால்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் தென்கிழக்கு பல்கலை வெற்றிவாகை

**அம்பாறை மத்திய நிருபர்**




வவுனியா பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான கால்பந்தாட்ட போட்டியில் இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் அணி வெற்றிவாகை சூடி 2024ஆம் ஆண்டின் சம்பியனாக தெரிவாகியது. இந்நிலையில் இக்கால்பந்தாட்ட வீரர்களை வரவேற்கும் நிகழ்வு, தென்கிழக்கு பல்கலைக்கழக நிர்வாக கட்டட முன்றலில் பதில் உபவேந்தர் கலாநிதி யூ.எல். அப்துல் மஜீட் தலைமையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது.

## பயிற்சியை பூர்த்தி செய்த கிராம அலுவலர்களுக்கு பணி ஒப்படைப்பு

**கந்தளாய், மூதூர் தினகரன் நிருபர்கள்**



கிண்ணியா மற்றும் மூதூர் பிரதேச செயலக பிரிவுகளுக்குட்பட்ட கிராம அலுவலர் பிரிவுகளில் பயிற்சிக்காக இணைக்கப்பட்ட கிராம அலுவலர்களின் பயிற்சிக்காலம் பூர்த்தியடைந்ததை தொடர்ந்து அவர்கள் பணியாற்றும் வகையில் நிரந்தர கிராம அலுவலர் பிரிவுகள் நேற்று முன்தினம் திங்கட்கிழமை ஒப்படைக்கப்பட்டுள்ளன.

கிண்ணியாவில் 2 பேருக்கும் மூதூரில் 13 பேருக்குமாக மொத்தம் 15 பேருக்கு கிராம அலுவலர் பிரிவுகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

கிண்ணியாவில் எம்.பி.எம். அர்பக் கிராம அலுவலருக்கு பைசல் நகர் கிராம அலுவலர் பிரிவும் மாம் இல்ஹாம் கிராம அலுவலருக்கு மாஞ்சோலைச்சேனை கிராம அலுவலர் பிரிவும் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

# சர்வதேச சிறுவர் தினம்; கிழக்கில் நிகழ்வு






அம்பாறை மாவட்டத்திலும் திருகோணமலை மாவட்டத்திலும் நடைபெற்ற சர்வதேச சிறுவர் தின நிகழ்வுகள்.

**(நற்பிட்டிமுனை தினகரன், காரைதீவு குறுப், கல்முனை விசேட, பாலமுனை தினகரன், நிந்தவூர் குறுப், திராய்க்கேணி தினகரன், அக்கரைப்பற்று வடக்கு தினகரன், அட்டாளைச்சேனை தினகரன், தம்பலகாமம் குறுப், பள்ளிக்குடியிருப்பு தினகரன் நிருபர்கள்)**

## மன தூய்மைக்கான தியான பயிற்சி



மட்டக்களப்பு பிள்ளையாரடி மன்றேசாரிட்ரீட் ஹவுஸில் இம்மாதம் 4ஆம் திகதி முதல் 15ஆம் திகதிவரை இலவசமாக தியான பயிற்சி வகுப்பு நடத்தப்படவுள்ளது.

குருஜி எஸ்.என்.கோயங்கா வின் வழிகாட்டலின் கீழ் இத்தியான பயிற்சி வகுப்பு நடத்தப்படவுள்ளது. பர்மாவைச் சேர்ந்த ஊ.பா. கின்னிடமிருந்து கற்று, இந்தியா உட்பட உலகம் முழுவதும் விபாசனா கற்றுத்தந்த கோயங்காவால் மன தூய்மைக்கான தியான பயிற்சி நடத்தப்படுகின்றது.

இப்பயிற்சியில் 18 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் கலந்துகொள்ள முடியும். உணவு மற்றும் தங்குமிட வசதி உட்பட அனைத்து தியான நிகழ்ச்சிகளும் இலவசமாகும். விபாசனா தியான மையத்தில் இணைய விரும்புவர்கள் 0716439454, 0773504491 எனும் கையடக்க தொலைபேசி இலக்கத்துக்கோ அல்லது 0774935850 எனும் வட்ஸப் இலக்கத்துடனோ தொடர்புகொள்ள முடியும். மேலும் https://sobha.dhamma.org என்ற இணையத்தினூடாகவும் முன்பதிவு செய்துகொள்ள முடியுமென, ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

## 'தரிசனம்' நூல் வெளியீட்டு விழா

**அட்டாளைச்சேனை குறுப், அக்கரைப்பற்று தினகரன் நிருபர்கள்**



அக்கரைப்பற்று மஹ்ழரத்துல் காதிரிய்யா பள்ளிவாசல் ஸ்தாபகரும் இறைஞானியுமான கலீபத்துல் ஹல்லாஜ் இர்ஹமில் பக்கீர் அப்துல் மஜீத் மக்கத்தார் தாமத் பரக்காத்து ஹூல் ஆலியாவின் 'தரிசனம்' நூல் வெளியீட்டு விழாவும் மீலாதுன் நபி விழாவும் அக்கரைப்பற்று நூருல் இர்பான் அரபுக் கல்லூரி ஹல்லாஜ் இஸ்லாமிய கலாசார நிலைய வளாகத்தில் அண்மையில் நடைபெற்றது.

ஆன்மிக துறைகளையும் மெய்ஞான தத்துவங்களையும் உள்ளடக்கியதாக ஆழமான கருத்துகளுடன் ஆக்கப்பட்ட இந்நூல் வெளியீட்டு விழா, அக்கரைப்பற்று நூருல் இர்பான் அரபுக் கல்லூரி அதிபர் மௌலவி எம்.எம் பஸ்லி (ஷர்கி) தலைமையில் நடைபெற்றது.

## பனையோலை உற்பத்தி பயிற்சியை பூர்த்தி செய்தவர்களுக்கு சான்றிதழ்

**கந்தளாய் தினகரன் நிருபர்**

வெருகல் பிரதேச செயலக ஒருங்கிணைப்பின் கீழ் 'சிவம் அருள்' அமைப்பின் அனுசரணையுடன் நடத்தப்பட்ட பனையோலை உற்பத்தி பயிற்சியை பூர்த்தி செய்தவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் திங்கட்கிழமை அப்பிரதேச செயலக ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெற்றது.

# வடமாகாண மக்களின் பிரச்சினைகளை ஆளுநரிடம் நேரடியாக முறையிடும் வசதி

## தொலைபேசி இலக்கங்களும் அறிமுகம்

**யாழ் . விசேட நிருபர்**

வட மாகாண மக்கள் தமது பிரச்சினைகளை நேரடியாக வடக்கு ஆளுநரிடம் முறையிடக் கூடியவாறான பொறிமுறையொன்று உருவாக்கப்பட்டுள்ளது. வட மாகாண புதிய ஆளுநர் நா.வேதநாயகன் இப் புதிய முறையை உருவாக்கியுள்ளார்.

ஊழல், மோசடிகள், துஷ்பிரயோகங்கள், நிர்வாக ரீதியான பிரச்சினைகள் என்பவற்றை பொது மக்கள் ஆளுநரிடம் நேரடியாக முறையிட முடியும்.

'அபயம்' என்ற பெயரில் செயற்பட்டு வந்த வடமாகாண ஆளுநர் செயலகத்தின் பொதுமக்கள் குறைகேள் வலையமைப்பின் செயற்பாடுகள் நேற்று முன்முனம் (30) திங்கட்கிழமை முதல் நிறுத்துப்பட்டுள்ளது.



இதனையடுத்தே, நேற்று 01 ஆம் திகதி முதல் பொது மக்களின் குறைகளை, ஆளுநரிடம் நேரடியாகவோ அல்லது தொலைபேசியூடாகவோ தெரிவிக்கும் புதிய முறையை ஆளுநர் நா.வேதநாயகன் ஆரம்பித்து வைத்தார்.

இதன்படி, நேரடியாக அல்லது 021 221 9375 மற்றும் 021 221 9376 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டு முறையிடலாமென ஆளுநர் செயலகம் அறிவித்துள்ளது.

# சிறுவர் தினத்தை முன்னிட்டு கவனயீர்ப்பு போராட்டம்






சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு கிளிநொச்சியில் இருவேறு இடங்களில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களினால் கவனயீர்ப்பு போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.அதன்படி, காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்க அலுவலகம் முன்பாகவும் கிளிநொச்சி கந்தசுவாமி கோயில் முன்பாகவும் இவ்வாறு கவனயீர்ப்பு போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.சிறுவர்களாக கையளிக்கப்பட்ட தமது பிள்ளைகளுக்கு நீதி வேண்டி இந்த கவனயீர்ப்பு போராட்டங்கள் நடத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வடக்கின் உதயம்

## விளையாட்டு, கல்வியில் சாதனை படைத்த புதுக்குடியிருப்பு மாணவி

**ஓமந்தை விஷேட நிருபர்**



அகில இலங்கை தேசியமட்ட பாடசாலைகளுக்கு இடையிலான தைக் வொண்டோ போட்டியில் வெண்கலப் பதக்கத்தை வென்று சாதனை படைத்த மாணவி ஒருவர், இம்முறை வெளியான க.பொ.த சாதாரணதரப் பரீட்சையிலும் 9ஏ பெற்று சித்தியடைந்துள்ளார்.

புதுக்குடியிருப்பு மத்தியகல்லூரி மாணவியான டிவொன்சி என்ற மாணவியே விளையாட்டு மற்றும் கல்வியில் இவ்வாறு சாதனை படைத்துள்ளார்.

கடந்த மாதம் 28,29 மற்றும் 30 ஆம் திகதிகளில் இரத்தினபுரி நியூ டவுன் உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்ற, அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான தைக் வொண்டோ (Taekwondo) போட்டியில், 18 வயது பிரிவில் 59-63 கிலோ எடைப்பிரிவிலேயே இம் மாணவி வெண்கலப் பதக்கத்தை வென்றுள்ளார்.

# கைக்குண்டுகளுடன் இளைஞர்கள் கைது

**யாழ் . விசேட நிருபர்**

யாழ்ப்பாணத்தில் இரண்டு கைக்குண்டுகளுடன் வன்முறை கும்பலைச் சேர்ந்த இரு இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து 02 கைக்குண்டுகள், 04 வாள்கள் , 04 பெற்றோல் குண்டுகள் என்பவற்றை பொலிஸார் மீட்டுள்ளனர்.

யாழ் . மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கமைய, மானிப்பாய் பகுதியைச் சேர்ந்த 18 மற்றும் 24 வயதுடைய இரு இளைஞர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் மேலதிக சட்ட நடவடிக்கைக்காக மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ள பொலிஸார், அவர்களை மல்லாகம் நீதவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.





சிறுவர் தினத்தை முன்னிட்டு, வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் சிறுவர்கள் காணாமலாக்கப்பட்டமை தொடர்பாக நீதி கோரி, யாழ்ப்பாணம் ஐ.ஓ.எம். அலுவலகத்துக்கு முன்பாக நேற்று(01) கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டிருந்த போது...

### பங்காளி கட்சிகள் இணையாவிட்டால்

# பாராளுமன்ற தேர்தலில் தமிழரசு கட்சி தனித்து களமிறங்குவதாக அறிவிப்பு

## எம்.ஏ.சுமந்திரன் தெரிவிப்பு

**(மன்னார் குறூப் நிருபர்)**



பாராளுமன்ற தேர்தலில் தமிழரசுக் கட்சியின் சின்னத்தில் தமிழரசு கட்சியின் பெயரில் போட்டியிடுவதற்கு அழைப்பு விடுத்துள்ளதாகவும் அழைப்பை ஏற்றுக்கொள்ளாவிட்டால், தனித்து போட்டியிடுவதற்கு தீர்மானித்துள்ளதாகவும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் நேற்று முன்தினம் (30) ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனை தெரிவித்தார்.

இதன்போது மேலும் கருத்து தெரிவித்த அவர்,

அண்மையில் நடைபெற்ற எமது தமிழரசு கட்சியின் கூட்டத்தில், இலங்கை தமிழரசு கட்சியின் பெயரிலும் தமிழரசு கட்சியின் சின்னத்திலும் தேர்தலில் போட்டியிடுவதற்கு, ஏற்கனவே தமிழ் தேசிய கூட்டமைப்பிலிருந்த அனைத்து கட்சிகளுக்கும் அழைப்பு விடுத்திருந்தோம்.

அவர்கள் எம்முடன் இணையாவிட்டால், இலங்கை தமிழரசு கட்சியான நாம் தனித்து போட்டியிடுவதற்கு ஏற்கனவே தீர்மானித்துவிட்டோம்.

எனவே, நியமன பத்திரம் தாக்கல் செய்வதற்கு இன்னும் சிறிது காலமே இருப்பதனால், அவர்கள் தங்கள் முடிவுகளை துரிதமாக தெரியப்படுத்தும் பட்சத்தில், அவற்றை கருத்திற்கொண்டு தமிழரசு கட்சியின் வேட்பாளர்களை தீர்மானிப்போம்.

மேலும், எதிர்வரும் தேர்தலில் இளைஞர்கள், யுவதிகள், ஆற்றல் உள்ளவர்களுக்கு வாய்ப்பு வழங்க வேண்டும். அத்துடன், ஏற்கனவே பாராளுமன்ற உறுப்பினர்களாக இருந்து மீண்டும் பாராளுமன்ற தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்தவர்ளுக்கு வாய்ப்பு வழங்குவதில்லை என்ற தீர்மானத்தையும் நாம் மேற்கொண்டுள்ளோம் என அவர் தெரிவித்தார்.

### புதியவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்குவதற்காக

# பாராளுமன்றத் தேர்தலில் நான் போட்டியிடவில்லை

## சாள்ஸ் நிர்மலநாதன் அறிவிப்பு

**(மன்னார் குறூப் நிருபர்)**



புதியவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்க வேண்டும் என்ற நோக்கத்துக்காக இம்முறை நடைபெறவுள்ள பாராளுமன்ற தேர்தலில் தான் போட்டியிடப் போவதில்லைஎன்பதை அனைத்து தமிழ் மக்களுக்கும் அறியத் தருவதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்துள்ளார்.

இதனை தனது உத்தியோகபூர்வ முகநூல் பக்கத்தில் அறிவித்துள்ள அவர், அப் பதிவில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

கடந்த 2015 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற பாராளுமன்ற தேர்தலில் வன்னி தேர்தல் தொகுதியில் அதிகூடிய வாக்குகளுடன் மக்களின் விருப்பத்துக்கமைய பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்டேன்.

அன்று தொடக்கம் இன்று வரை என்னால் முடிந்தளவு தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தொடர்ச்சியாக பாராளுமன்றத்தில் குரல் கொடுத்து வந்துள்ளேன்.

அத்துடன், எமது பிரதேசங்களில் தமிழ் மக்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகளுக்கு, இயன்றவரை தீர்வுகளை வழங்கியுள்ளதுடன் மக்கள் போராட்டங்களிலும் பங்குபற்றியுள்ளேன். வன்னி மாவட்டத்துக்கு தேவையான, என்னால் முடிந்த பல அபிவிருத்தி திட்டங்களையும் முன்னெடுத்துள்ளேன்.

தமிழ் மக்கள் எனக்கு இவ்வளவு காலமும் வழங்கிய ஆதரவுக்கும் கௌரவத்துக்கும் நன்றிகளை தெரிவித்துக்கொள்ளும் அதேநேரம் தமிழர்களின் உரிமைக்காக தொடர்ச்சியாக நான் உழைத்துக் கொண்டிருப்பேன் என்பதை உறுதியாக கூறுகின்றேன் என அவர் தெரிவித்தார்.

# பாராளுமன்ற தேர்தலில் த.ம.கூட்டணி தனித்து போட்டியிடுவதாக அறிவிப்பு

## வேட்பாளராக க.அருந்தவபாலனை நிறுத்த தீர்மானம்

**(பருத்தித்துறை நிருபர்)**



பாராளுமன்ற தேர்தலில், தமிழ் மக்கள் கூட்டணி தனித்து போட்டியிடவுள்ளதாகவும், அதன் முதன்மை வேட்பாளராக க.அருந்தவபாலனை நிறுத்த தீர்மானித்துள்ளதாகவும், அக் கட்சியின் தலைவரும், பாராளுமன்ற முன்னாள் உறுப்பினருமான நீதியரசர் சி.வி விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் (30) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனை தெரிவித்த அவர், மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் தேசிய கூட்டமைப்புடன் இணைந்து தேர்தலில் போட்டியிட விரும்பினோம். ஆனால் அவர்கள் தேர்தலில் போட்டியிடவில்லை என ஊடகங்களுக்கு அறிவித்துள்ளனர். ஆகையால் நாம் தனித்து போட்டியிட தீர்மானித்துள்ளோம். வடக்கு தவிர்ந்து கிழக்கிலும் போட்டியிட தீர்மானித்துள்ளோம்.

பாராளுமன்ற தேர்தலில் நான் போட்டியிடபோவதில்லை. ஆனால், கட்சியின் வளர்ச்சிக்காக தொடர்ந்தும் அரசியலில் ஈடுபடுவேன்.

எமது கட்சியின் முதன்மை வேட்பாளராக அருந்தவபாலனை நிறுத்த தீர்மானித்துள்ளோம். அவர் தென்மராட்சி மக்களுக்கு சேவை செய்ய கூடியவர். அவரை நிறுத்தவது தொடர்பாக மத்திய குழுவில் பேசி முடிவெடுத்துள்ளோம்.

அதேவேளை, சட்டத்தரணி மணிவண்ணனும் எமது கட்சியில் போட்டியிடுவார். எமது கட்சி வேட்பாளர்களின் பின்னணிகள் மற்றும் கல்வித்தகமை போன்றவற்றை ஆராய்ந்து, தகுதியானவர்களையே வேட்பாளராக நிறுத்துவோம்.

தமிழரசு கட்சியில் சுமந்திரன் கேட்கிறார் என்பதற்காக அவருடன் சேர்ந்து செல்ல முடியாது. தமிழ் தேசியத்தை முன்னிட்டு பொது வேட்பாளரை நிறுத்தியபோது அதற்கு எதிராக செயற்பட்டவர் சுமந்திரன். இவ்வாறு தமிழ் தேசியத்துக்கு எதிராக செயற்பட்டவருடன் இணைந்து பயணிக்க முடியாது என அவர் மேலும் தெரிவித்தார்.

### பாராளுமன்ற தேர்தலில்

# ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு போட்டியிடப்போவதாக அறிவிப்பு



பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடப்போவதாக ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு அறிவித்துள்ளது. நேற்று முன்தினம் (30) யாழ்ப்பாணத்தில் நடத்திய ஊடக சந்திப்பின் போதே ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு இதனை அறிவித்துள்ளது.

இது தொடர்பாக அவர்களது ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தமிழ் தேசிய களத்தில் தூய்மையான மாற்றத்திற்கான மனிதர்களை மக்கள் பிரதிநிதிகளாக பாராளுமன்றத்துக்கு அனுப்ப தமிழ் மக்கள் விரும்புகின்றனர்.

பொதுத் தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் அடுத்த வாரம் எதிர்நோக்கி இருக்கின்ற இந்த தருணத்தில், வடகிழக்கின் திருமலை, மட்டு , யாழ். வன்னி, அம்பாறை தேர்தல் மாவட்டங்களை சார்ந்த ஊழலற்ற மதுபோதை வணிகங்களுடன் சமுக பிறழ்வு நடத்தைகளுடன் எவ்விதத்திலும் தொடர்புபடாத, தமிழ் தேசியத்திலும் தமிழ் மக்கள் வாழ்வியல் மேம்பாட்டிலும் பற்றுதியான கறைபடியாத மாற்றத்துக்கான தூய தமிழை தேசிய முகங்களை பரிந்துரை செய்யுமாறு வேண்டுகின்றோம்.

தமிழ் தேசிய நலனை முன்னிறுத்தும் பொது வேட்பாளர்களாக பாராளுமன்ற தமிழ் மக்கள் பிரதிநிதித்துவத்துக்கான தேர்தலை எதிர்கொள்வர்.

கட்சி அரசியலைக் கடந்த இந்த திட்ட முன்மொழிவுக்கு அனைத்து தமிழர்களது ஆதரவையும் பங்குபற்றுதலையும் வேண்டி நிற்கின்றோம்எனதெரிவிக்கப்பட்டுள்ளது.

# கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் 101 ஆம் ஆண்டு நிறைவு வைபவம்




கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் 101 ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் கலாசாலை தின விழா நேற்று (01) செவ்வாய்க்கிழமை கலாசாலை ரதிலக்க்ஷ்மி மண்டபத்தில் இடம்பெற்றது.

கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கலாசாலையின் பழைய மாணவரும் யாழ்ப்பாண வலயக்கல்விப் பணிப்பாளருமாகிய ஜமுனா ராஜசீலன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

இதன்போது, கலாசாலையை நிறுவுவதற்கு நிலத்தை வழங்கிய சேர் பொன் இராமநாதனை கௌரவப்படுத்தும் வகையில் இராமநாதன் நினைவுப் பேருரையும் இடம்பெற்றது."ஆசிரிய கல்வியியலாளர்களின் தத்துவ ஆராய்ச்சிப் பட்டங்கள் தொடர்பாக மேற்கிளம்பும் சவால்களும் அவற்றை தாண்டிப் பயணித்தலும்" என்ற பொருளில் யாழ். பல்கலைக்கழக கல்வியியல்துறை விரிவுரையாளர் இ.சர்வேஸ்வரா நினைவுப் பேருரை ஆற்றினார்.

தொடர்ந்து கலாசாலையில் உள்ள சிவன் ஆலயப் பிரதம குரு சிவசிறீ பா. செல்வசேனக் குருக்கள் ஆசியுரை வழங்கினார்.

நிகழ்வில் கலாசாலையின் பழைய மாணவர்கள் மற்றும் முன்னாள் அதிபர், விரிவுரையாளர்களும் கலந்து கொண்டனர்.

# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான நவராத்திரி விழா ஆரம்பம்

சாவகச்சேரி அருள்மிகு ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான நவராத்திரி விழா நாளை(03) வியாழக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

நாளை ஆரம்பமாகும் நவராத்திரி விழா எதிர்வரும் 12 ஆம் திகதி விஜயதசமியன்று மானம்பூ உற்சவமும் பிற்பகல் 2.30 மணிக்கு மஹிடாசுரன் சம்ஹாரமும் இடம்பெறவுள்ளது.

விஜயதசமியன்று காலை 7 மணிக்கு கும்பச்சரிவும் அம்பாளுக்கு விசேட அபிஷேகமும் பூஜையும் நடைபெற்று தொடர்ந்து ஏடு தொடக்குதல் இடம்பெறும். 12 ஆம் திகதி சனிக்கிழமை முதல் கேதார கௌரி விரதம் மாலை 3மணிக்கு ஆரம்பமாகி விரத பூர்த்தி தினமான 1 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிமுதல் கௌரி விரத நூல் அணிவிக்கப்படும்.

# இழுவைமடி முறையை நிறுத்தக்கோரி வடக்கு ஆளுநரிடம் மகஜர் கையளிப்பு

## கடற்றொழிலாளர் சங்கம்



இலங்கையின் கடற்றொழில் சட்டங்களை மீறி, யாழ். மாவட்டத்தில் தொடர்ச்சியாக முன்னெடுப்பட்டு வரும் சட்டவிரோதமான இழுவைமடி தொழிலை நிறுத்தக்கோரி வடமாகாண ஆளுநரிடம் நேற்று (01) மகஜரொன்று கையளிக்கப்பட்டுள்ளது.

வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் ஊடக பேச்சாளர் அன்னலிங்கம் அன்னராசா, அனலைதீவு கடற்றொழிலாளர் சங்கத்தின் தலைவர் யோன் போஸ்கோ, எழுவைதீவு கடற்றொழிலாளர் சங்க உறுப்பினர்கள் இணைந்து இந்த மஜரை கையளித்துள்ளனர்.

# கீரிமலை – கொழும்பு பஸ் சேவை நேற்று முதல் மீண்டும் ஆரம்பம்

**கரவெட்டி விஷேட நிருபர்**

யாழ். கீரிமலையிலிருந்து கொழும்புக்கு பயணிக்கக்கூடிய இலங்கை போக்குவரத்து சேவைக்குச் சொந்தமான பஸ் சேவை நேற்று (01) முதல் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பருத்தித்துறை டிபோ அறிவித்துள்ளது.

இச் சேவை கடந்த 2020 ஆண்டுவரை இடம்பெற்று வந்த நிலையில், பஸ் இன்மை மற்றும் சாரதிகள் இன்மை போன்ற



காரணங்களால் நிறுத்தப்பட்டிருந்தது.

இந்நிலையில், நேற்று (01) முதல் மீண்டும் கீரிமலையிலிருந்து புறப்பட்டு காங்கேசன்துறை, தொண்டைமானாறு, வல்வெட்டித்துறை ஊடாக பருத்தித்துறையை சென்றடைந்து, பருத்தித்துறையிலிருந்து மந்திகை மாலிசந்தி, நெல்லியடி, துன்னாலை ஊடாக வவுனியா அநுராதபுரம், புத்தளம், சிலாபம் வழியாக கொழும்பை சென்றடையவுள்ளதாக பருத்தித்துறை டிபோ முகாமைத்துவம் தெரிவித்துள்ளது.

# விலைக்கோரலுக்கான அழைப்பு (IFB)

## மேல் மாகாண சபை - பொறியியல் செயலணி

1. பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ள வேலைகளுக்காக இயைபுடைய பிரதேச பொறியியலாளர் / பணிப்பாளர் (கட்டிடங்கள்) பெறுகைக் குழுத் தலைவரினால் தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

2. I. தேசிய போட்டி ரீதியில் விலைக்கோரல் மூலம் ஒப்பந்ததாரர்கள் தெரிவு செய்யப்படுவர். 04/2016(iii)ஆம் இலக்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் (வெட் மற்றும் ஏனைய வரிகள் இன்றி) மொத்தப் பெறுகையின் பெறுமதி 50 மில்லியன் ரூபாவுக்குக் குறைவாக இருப்பதனால் பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA பதிவுத் தர முன்னுரிமை பிரயோகிக்கப்படும்.

   II. 01/2024ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை இந்தப் பெறுகைக்கு ஏற்புடையது.

| (1) தொ. இல. | (2) ஒப்பந்தத்தின் இலக்கம் | (3) வேலையின் பெயர் | (4) நேரடி மதிப்பீட்டுக் கிரயம் | (5) 03ஆம் இலக்க பொது ஒப்பந்தத் தேவைப்பாடு | (6) CIDA பதிவு | (7) மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) | (8) மீளளிக்கப்படும் விலைக்கோரல் பிணை முறி | (9) விலைமனு ஆவணங்கள் வழங்கப்படும் இடம் மற்றும் தொலைபேசி இலக்கம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | WP/PU/ CON/24/374 | மேமா/மத்து/சென் மேரிஸ் கல்லூரி - நான்கு மாடிக் கட்டிடத்தை நிர்மாணித்தல் (கட்டம் 1) | 47,290,241.70 | ஆம் | C4 மற்றும் அதற்கு மேல் | 12,500.00 | விலைக்கோரல் பிணை முறி - 620,000.00 | வழங்குதல்: பிரதேச பொறியியலாளர் அலுவலகம், மத்துகம. மத்திய வீதி, மத்துகம. தொலைபேசி இல. 034-2243082<br>சமர்ப்பித்தல்: பணிப்பாளர் (கட்டங்கள்), பொறியியல் பணியகம் (மே. மா), 5ஆம் தளம், இல. 204, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்ல. தொ.பே. **011-2092504** |
| 2 | WP/PU/ CON/24/375 | மத்துகம - கட்டுகஹஹேன மாவட்ட வைத்தியசாலையில் கழிவு முற்றவெளியை நிர்மாணித்தல் மற்றும் ஏனைய புதுப்பித்தல் வேலைகள் | 4,039,903.14 | இல்லை | C8 மற்றும் C7 | 1,000.00 | பண வைப்பு - ரூபா 25,000.00 விலைக்கோரல் பிணை முறி - 50,000.00 | வழங்குதல்: பிரதேச பொறியியலாளர் அலுவலகம், மத்துகம. மத்திய வீதி, மத்துகம. தொலைபேசி இல. 034-2243082 |
| 3 | WP/PU/ CON/24/376 | இத்தபான மாவட்ட வைத்தியசாலையில் உள்ள RMO விடுதிகளின் திருத்தவேலைகள் | 4,209,312.00 | இல்லை | C8 மற்றும் C7 | 1,000.00 | பண வைப்பு - ரூபா 25,000.00 விலைக்கோரல் பிணை முறி - 50,000.00 | |
| 4 | WP/PU/ CON/24/377 | மேமா/மத்து/ஹொரவில ம.வி. - 100' x 20' கட்டிடத்தின் கூரை திருத்தவேலைகள் (80' x 20' பிரதேசம்) | 3,389,763.95 | இல்லை | C8 மற்றும் C7 | 1,000.00 | பண வைப்பு - ரூபா 20,000.00 | |
| 5 | WP/PU/ CON/24/378 | மத்துகம மாவட்ட வைத்தியசாலைக்கு சுற்றுச்சுவரை நிர்மாணித்தல் | 3,238,265.20 | இல்லை | C8 மற்றும் C7 | 1,000.00 | பண வைப்பு - ரூபா 20,000.00 | |
| 6 | WP/PU/ CON/24/379 | மேமா/மத்து/விபுத்ர பி.வி. - 100 'x 26' பிரதான கட்டிடத்தின் கூரை திருத்தவேலைகள் | 4,004,305.45 | இல்லை | C8 மற்றும் C7 | 1,000.00 | பண வைப்பு - ரூபா 24,000.00 | |
| 7 | WP/PU/ CON/24/380 | மேமா/மத்து/வெலகெதர ம.வி. - 115' x 21' அலுவலகத்துடனான கட்டிடத்தின் கூரை திருத்தவேலைகள் | 5,182,797.90 | ஆம் | C7 மற்றும் C6 | 1,000.00 | பண வைப்பு - ரூபா 30,875.00 விலைக்கோரல் பிணை முறி - 61,750.00 | |
| 8 | WP/PU/ CON/24/381 | மேமா/மத்து/மெரில் காரியவசம் ம.ம.வி. - 110' x 20' கட்டிடத்தின் திருத்தவேலைகள் | 4,108,945.80 | இல்லை | C8 மற்றும் C7 | 1,000.00 | பண வைப்பு - ரூபா 25,000.00 விலைக்கோரல் பிணை முறி - 50,000.00 | |
| 9 | WP/PU/ CON/24/382 | மேமா/மத்து/ரத்மலே க.வி. - 80' x 20' கட்டிடத்தின் கூரை மற்றும் அத்தியாவசிய திருத்தவேலைகள் | 5,010,384.35 | ஆம் | C7 மற்றும் C6 | 1,000.00 | பண வைப்பு - ரூபா 30,000.00 விலைக்கோரல் பிணை முறி - 60,000.00 | |
| 10 | WP/PU/ CON/24/383 | மேமா/பிலி/பொரலஸ்கமுவ 01ஆம் இலக்க மாதிரி வித்தியாலயம் - நீர்த் தொட்டியை நிர்மாணித்தல் | 910,486.95 | இல்லை | C9 மற்றும் C8 | 1,000.00 | பண வைப்பு - ரூபா 5,500.00 | பிரதேச பொறியியலாளர் அலுவலகம், இரத்மலானை. இல. 25, மாளிகாவ வீதி, இரத்மலானை. தொலைபேசி இல. 0112-622517 |
| 11 | WP/PU/ CON/24/384 | மெத்செவனயில் சமையலறை மற்றும் உணவு அறைக்கிடையில் கூரையைப் பொருத்துதல் மற்றும் புதுப்பித்தல் வேலைகள் | 976,582.40 | இல்லை | C9 மற்றும் C8 | 1,000.00 | பண வைப்பு - ரூபா 6,000.00 | |
| 12 | WP/PU/ CON/24/385 | தெஹிவளை றோயல் ஆரம்ப வித்தியாலயத்தில் 90'x 25' மூன்று மாடிக் கட்டிடத்தின் கட்டமைப்பு திருத்தவேலைகள் | 1,423,509.00 | இல்லை | C9 மற்றும் C8 | 1,000.00 | பண வைப்பு - ரூபா 8,750.00 | |
| 13 | WP/PU/ CON/24/386 | மேமா/பிலி/பொரலஸ்கமுவ 01ஆம் இலக்க ஆரம்ப வித்தியாலயம் - வலதுகுறைந்தோர் மலசலகூடத்தை நிர்மாணித்தல். | 890,964.65 | இல்லை | C9 மற்றும் C8 | 1,000.00 | பண வைப்பு - ரூபா 5,500.00 | |
| 14 | WP/PU/ CON/24/387 | மேமா/பிலி/சென் ஜோன்ஸ் ஆரம்ப வித்தியாலயம் - 100'x 20' 3ஆம் வகுப்பு ஒற்றை மாடிக் கட்டிடத்தின் கூரை திருத்தவேலைகள் | 2,073,735.80 | இல்லை | C8 மற்றும் C7 | 1,000.00 | பண வைப்பு - ரூபா 12,500.00 | |
| 15 | WP/PU/ CON/24/388 | மேமா/பிலி/சஸ்தரானந்த வித்தியாலயம் - தெஹிவளை - இரண்டு மாடிக் கட்டிடத்தின் மிகுதி வேலைகள் (கட்டம் 1) | 1,635,169.70 | இல்லை | C9 மற்றும் C8 | 1,000.00 | பண வைப்பு - ரூபா 10,000.00 | |
| 16 | WP/PU/ CON/24/389 | மெத்செவனயில் சுஜாதா பிரிவின் கூரை திருத்தவேலைகள் (180' x 30' ஒற்றை மாடிக் கட்டிடம்) | 5,073,458.60 | ஆம் | C7 மற்றும் C6 | 1,000.00 | பண வைப்பு - ரூபா 31,500.00 விலைக்கோரல் பிணை முறி - 63,000.00 | |
| 17 | WP/PU/ CON/24/390 | மேமா/பிலி/கந்தவல மகா வித்தியாலயம் - 80'x20' ஒற்றை மாடிக் கட்டிடத்தின் திருத்தவேலைகள் | 3,336,162.25 | இல்லை | C8 மற்றும் C7 | 1,000.00 | பண வைப்பு - ரூபா 20,700.00 | |
| 18 | WP/PU/ CON/24/391 | மேமா/பிலி/லங்கா சபா வித்தியாலயம் - அதிபர் அறையின் திருத்தவேலைகள் (25'x20') | 549,223.00 | இல்லை | C9 மற்றும் C8 | 1,000.00 | பண வைப்பு - ரூபா 3,500.00 | |
| 19 | WP/PU/ CON/24/392 | மேமா/பிலி/வில்லோரவத்த ஞானிஸ்ஸார பௌத்த வித்தியாலயம் - 90'x25' மூன்று மாடிக் கட்டிடத்தின் கூரை திருத்தவேலைகள் மற்றும் ஏனைய திருத்தவேலைகள் (பகுதி மட்டும்) | 1,242,050.07 | இல்லை | C9 மற்றும் C8 | 1,000.00 | பண வைப்பு - ரூபா 7,500.00 | |
| 20 | WP/PU/ CON/24/393 | ரத்னாவளி மகளிர் வித்தியாலயம் - 90' x 20' மூன்று மாடிக் கட்டிடத்தின் கூரை திருத்தவேலைகளின் மிகுதி வேலைகள் | 2,200,000.00 | இல்லை | C8 மற்றும் C7 | 1,000.00 | பண வைப்பு - ரூபா 13,750.00 | பிரதேச பொறியியலாளர் அலுவலகம், இல. 151/4/2/1, மாளிகாவத்த பிளேஸ், மாளிகாவத்தை, கொழும்பு-10. தொலைபேசி-: 011-2447773 |
| 21 | WP/PU/ CON/24/394 | மாளிகாவத்தை மாவட்ட வைத்தியசாலையில் உள்ள மருந்து களஞ்சியசாலையின் கூரை திருத்தவேலைகள் | 5,500,000.00 | ஆம் | C7 மற்றும் C6 | 1,000.00 | பண வைப்பு - ரூபா 35,000.00 விலைக்கோரல் பிணை முறி - 70,000.00 | |
| 22 | WP/PU/ CON/24/395 | சென் அந்தனீஸ் B.P.V.யில் 90' x 25' மூன்று மாடிக் கட்டிடத்தின் அவசர கூரை திருத்தவேலைகள் | 4,126,641.90 | இல்லை | C8 மற்றும் C7 | 1,000.00 | பண வைப்பு - ரூபா 25,000.00 விலைக்கோரல் பிணை முறி - 50,000.00 | |
| 23 | WP/PU/ CON/24/396 | கொழும்பு - பிரதேச பொறியியலாளர் அலுவலகத்தின் அவசர கூரை மற்றும் ஏனைய திருத்தவேலைகள் | 4,445,842.00 | இல்லை | C8 மற்றும் C7 | 1,000.00 | பண வைப்பு - ரூபா 27,250.00 விலைக்கோரல் பிணை முறி - 54,500.00 | |
| 24 | WP/PU/ CON/24/397 | மேமா/கொ/சீவளி வித்தியாலயம் - மூன்று மாடிக் கட்டிடத்தின் அவசர மற்றும் ஏனைய திருத்தவேலைகள் | 1,476,346.64 | இல்லை | C9 மற்றும் C8 | 1,000.00 | பண வைப்பு - ரூபா 9,250.00 | |
| 25 | WP/PU/ CON/24/398 | பாணந்துறை நன்னடத்தை அலுவலகத்தின் அத்தியாவசிய திருத்தவேலைகள் | 4,065,500.00 | இல்லை | C8 மற்றும் C7 | 1,000.00 | பண வைப்பு - ரூபா 25,000.00 விலைக்கோரல் பிணை முறி - 50,000.00 | பிரதேச பொறியியலாளர் அலுவலகம், ஸ்ரீ மகா விஹார வீதி, பாணந்துறை. T.P -: 038-2234774 |
| 26 | WP/PU/ CON/24/399 | மேமா/ஹொர/நியூசெட்டல் தமிழ் வித்தியாலயம் - எல்லைச் சுவரை நிர்மாணித்தல் | 990,820.05 | இல்லை | C9 மற்றும் C8 | 1,000.00 | பண வைப்பு - ரூபா 5,000.00 | |
| 27 | WP/PU/ CON/24/400 | வாத்துவ MOH இன் பகுதிபிரிப்பு வேலைகள் | 2,855,887.45 | இல்லை | C8 மற்றும் C7 | 1,000.00 | பண வைப்பு - ரூபா 17,500.00 | |
| 28 | WP/PU/ CON/24/401 | கம்பஹா வைத்தியசாலையில் உள்ள நிர்வாகக் கட்டிடத்தின் புதுப்பித்தல் வேலைகள் | 2,421,420.00 | இல்லை | C8 மற்றும் C7 | 1,000.00 | பண வைப்பு - ரூபா 15,000.00 | |
| 29 | WP/PU/ CON/24/402 | மேமா/ஹொர/அல்-கஸ்ஸாலி பி.வி. - எல்லைச் சுவரை நிர்மாணித்தல் | 4,060,795.70 | இல்லை | C8 மற்றும் C7 | 1,000.00 | பண வைப்பு - ரூபா 25,000.00 விலைக்கோரல் பிணை முறி - 50,000.00 | |
| 30 | WP/PU/ CON/24/403 | மேமா/ஹொர/புலத்சிங்கள பி.வி. - 80' x 20' கட்டிடத்தின் கூரை திருத்தவேலைகள் (அனர்த்த பாதிப்பு) | 2,074,919.40 | இல்லை | C8 மற்றும் C7 | 1,000.00 | பண வைப்பு - ரூபா 12,500.00 | பிரதேச பொறியியலாளர் அலுவலகம், ஹொரணை, பல்லபிட்டிய, ஹொரணை. தொலைபேசி: 034-2261019 |
| 31 | WP/PU/ CON/24/404 | ஹொரண பிரதேச அலுவலகத்தை நிறுவுவதற்காக ஹொரண வலயக் கல்வி அலுவலகத்தின் இரண்டு மாடி பழைய நிர்வாகக் கட்டிடத்தை (தரை மாடி) மேம்படுத்துதல் (கட்டம் 3) | 4,525,545.25 | இல்லை | C8 மற்றும் C7 | 1,000.00 | பண வைப்பு - ரூபா 28,000.00 விலைக்கோரல் பிணை முறி - 56,000.00 | |
| 32 | WP/PU/ CON/24/405 | மேமா/ஹொர/மஹகம பி.வி. - ஒற்றை மாடி 'சுரக்ஷா' கட்டிடத்தின் கூரையுடனான திருத்தவேலைகள் | 4,050,918.75 | இல்லை | C8 மற்றும் C7 | 1,000.00 | பண வைப்பு - ரூபா 25,000.00 விலைக்கோரல் பிணை முறி - 50,000.00 | |
| 33 | WP/PU/ CON/24/406 | களுத்துறை மாவட்டத்திலுள்ள ஹொரண மாவட்ட கமத்தொழில் பயிற்சி நிலையத்தின் 01ஆம் இலக்க விரிவுரை மண்டபத்தின் புதுப்பித்தல் வேலைகள் | 2,051,901.34 | இல்லை | C8 மற்றும் C7 | 1,000.00 | பண வைப்பு - ரூபா 12,500.00 | |
| 34 | WP/PU/ CON/24/407 | களுத்துறை மாவட்டத்திலுள்ள ஹொரண மாவட்ட கமத்தொழில் பயிற்சி நிலையத்தின் பிரதான வீதியின் வரம்புகளுக்கு தொடர் வேலியை (Chain Link) நிர்மாணித்தல் | 4,041,120.50 | இல்லை | C8 மற்றும் C7 | 1,000.00 | பண வைப்பு - ரூபா 25,000.00 விலைக்கோரல் பிணை முறி - 50,000.00 | |
| 35 | WP/PU/ CON/24/408 | களுத்துறை மாவட்டத்திலுள்ள ஹொரண மாவட்ட கமத்தொழில் பயிற்சி நிலையத்தில் புதிய சந்தை கூடங்களை நிர்மாணித்தல். | 3,890,559.75 | இல்லை | C8 மற்றும் C7 | 1,000.00 | பண வைப்பு - ரூபா 24,500.00 | |
| 36 | WP/PU/ CON/24/409 | களுத்துறை மாவட்டத்திலுள்ள ஹொரண மாவட்ட கமத்தொழில் பயிற்சி நிலையத்தின் 03ஆம் இலக்க விடுதியின் புதுப்பித்தல் வேலைகள் | 2,036,190.25 | இல்லை | C8 மற்றும் C7 | 1,000.00 | பண வைப்பு - ரூபா 12,500.00 | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 37 | WP/PU/ CON/24/410 | மேமா/களு/மியூசியஸ் க.வி. - 80' x 20' கட்டிடத்தின் திருத்தவேலைகள் (கட்டம் 02) மற்றும் நிலச்சீராக்கம் | 3,366,673.50 | இல்லை | C8 மற்றும் C7 | 1,000.00 | பண வைப்பு - ரூபா 20,000.00 | பிரதேச பொறியியலாளர் அலுவலகம் களுத்துறை, சுமங்கள வீதி, களுத்துறை வடக்கு. தொலைபேசி இல. 034-2237002/ 034-2237349 |
| 38 | WP/PU/ CON/24/411 | மேமா/கம்/தொம்பே பி.வி. - 70' x 25' இரண்டு மாடிக் கட்டிடத்தின் திருத்தவேலைகள் (மிகுதி வேலைகள்) | 2,110,835.69 | இல்லை | C8 மற்றும் C7 | 1,000.00 | பண வைப்பு - ரூபா 13,000.00 | பிரதேச பொறியியலாளர் அலுவலகம் கம்பஹா, நீதிமன்ற வீதி, கம்பஹா. தொலைபேசி இல. 033-2222515 |
| 39 | WP/PU/ CON/24/412 | மேமா/கம்/ஸ்ரீ சீலானந்த ம.வி. - 27.9m x 7.8m மூன்று மாடிக் கட்டிடத்தை நிர்மாணித்தல். | 8,080,264.40 | ஆம் | C7 மற்றும் C6 | 3,500.00 | பண வைப்பு - ரூபா 50,000.00 விலைக்கோரல் பிணை முறி - 100,000.00 | |
| 40 | WP/PU/ CON/24/413 | பெம்முல்ல PMCU யில் பழைய கட்டிட புதுப்பித்தலின் மிகுதி வேலைகள் | 4,812,555.20 | இல்லை | C7 மற்றும் C6 | 1,000.00 | பண வைப்பு - ரூபா 29,000.00 விலைக்கோரல் பிணை முறி - 58,000.00 | |
| 41 | WP/PU/ CON/24/414 | ஹோமாகம, கபடாவத்த, மாவட்ட கமத்தொழில் பயற்சி நிலையத்தின் புதிய ஓர்கிட் இல்லம், காளான் இல்லம் மற்றும் பிரதான படலையை நிர்மாணித்தல். | 6,924,982.50 | ஆம் | C7 மற்றும் C6 | 1,000.00 | பண வைப்பு - ரூபா 41,000.00 விலைக்கோரல் பிணை முறி - 82,000.00 | பிரதேச பொறியியலாளர், பிரதேச பொறியியலாளர் அலுவலகம், ஹோமாகம, நீதிமன்ற வீதி, ஹோமாகம. T.P-:011-2855090/011-2855719 |

3. ஒப்பந்தத்தைப் பெற்றுக்கொள்ளும் வெற்றிகரமான விலைகூறுநர் அபகீர்த்தியாளர் பட்டியலில் உள்வாங்கப்பட்டவர்களாக இருத்தல் ஆகாது என்பதுடன் விலைமனு ஆவணத்தின் பிரகாரம் பின்வரும் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

4. இதில் ஆர்வம் கொண்டுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக விபரங்களை அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள இயைபுடைய பொறியியல் அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் அலுவலக நேரத்தினுள் இதே அலுவலகத்தில் விலைமனு ஆவணங்களை இலவசமாகப் பரீசித்துப் பார்க்கலாம்.

5. மீளளிக்கப்படாத கட்டணத்தை (01ஆம் திட்டம் நீங்கலாக) 2024-10-02ஆம் திகதி முதல் 2024-10-16ஆம் திகதி வரையான எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9.00 மற்றும் பி.ப. 03.00 மணிக்கிடையில் மற்றும் (01ஆம் மற்றும் 11ஆம் இலக்கத் திட்டத்திற்கு) 2024-10-02ஆம் திகதி முதல் 2024-10-23ஆம் திகதி வரையும் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9.00 மற்றும் பி.ப. 03.00 மணிக்கிடையில் மேல் மாகாண சபைக்கு செலுத்தியதன் பின் இயைபுடைய பிரதேச பொறியியலாளர் அவர்களுக்கு (அட்டவணையின் 09ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம்) எழுத்து மூல விண்ணப்பமொன்றைச் செய்வதன் பேரில் எந்தவொரு வளமுள்ள விலைமனுதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதி முழுமையான விலைமனு ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.

6. முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட நகல் பிரதிகளுடனான விலைமனுக்களை வெவ்வேறான கடித உறைகளில் இட்டு கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் செயற்றிட்டத்தின் பெயரைக் குறிப்பிட்டு இரு நகல்களில் தயாரிக்கப்பட்ட விலைமனுக்களை இயைபுடைய அலுவலகத்திற்கு (அட்டவணையின் 09ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம்) (01ஆம் திட்டம் தவிர்ந்தவைக்கு) 2024-10-18ஆம் திகதி மு.ப. 10.30 மணி அல்லது அதற்கு முன் மற்றும் (01ஆம் இலக்கத் திட்டத்திற்கு) 2024-10-23ஆம் திகதி மு.ப. 10.30 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கச் செய்தல் வேண்டும். விலைமனுக்கள் ஏற்றுக்கொள்வது நிறைவடைந்த உடனடுத்து அவ்வேளையிலேயே விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

7. சகல விலைமனுக்களுடனும் விலைமனுப் பிணை முறி அல்லது ரொக்கப் பண வைப்பு பற்றுச்சீட்டு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். (அட்டவணையின் 08ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம்). செல்லுபடிக் காலமானது விலைமனு ஆவணத்தின் பிரகாரமாகவிருத்தல் வேண்டும்.

8. விலைமனுதாரர்கள் 1987இன் 3ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்து கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் பதிவுச் சான்றிதழைச் சமர்ப்பித்தல் வேண்டும். (அட்டவணையின் 05ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம்)

**பொறி. K. R. அபேசிறிவர்தன,**
**பிரதிப் பிரதான செயலாளர் (பொறியியல்),**
**பொறியியல் பணியகம் (மே.மா),**
**5ஆம் மாடி, 204, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்ல.**
**2024-09-30.**
**தொலைபேசி: 0112-092504 தொலைநகல்: 0112-092505**

## இலங்கை முதலீட்டுச் சபை

## பெறுகை அறிவித்தல்

கீழ்க்காணும் பெறுகைக்காக பெறுகை கோரல் அறிவித்தல் 2024.10.02ம் திகதி புதன் மற்றும் 2024.10.05 சனி தினங்களில் (Daily News) பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

01. **Design, supply, installation and Commissioning of a Floating Type Intake System for Water Supply Scheme Horana Export Processing Zone**
**Contract No.: BOI/TS/HEPZ/2022/03/02.040**

02. **Laying of Sewerage Collection Network & Construction of Liftwells in Block A of Mirigama Export Proecssing Zone**
**Contract No.: BOI/TS/MEPZ/10/2023/06/03.013**

மேற்படி பெறுகைக்கான குறித்த கேள்விப் பத்திரங்கள் ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் பெறுகையை சமர்ப்பிப்பதற்கு ஆர்வம் காட்டுகின்ற ஒப்பந்தக்காரர்களுக்கு 2024.10.02 புதன் மற்றும் 2024.10.05 சனி தினங்களில் (Daily News) பத்திரிகையில் குறித்த அறிவித்தலின் பிரகாரம் செயற்படுமாறு இத்தால் அறிவித்தல் விடுக்கின்றோம்.

**தலைவர்**
**இலங்கை முதலீட்டுச் சபை**

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

## வெலிமடை பிரதேச சபை

## பெறுகை அறிவித்தல்

வெலிமடை வியாபார வளாகத்தில் இல. 51,53,54,56,57,58,59,60 மாட்டிறைச்சி, ஆட்டிறைச்சி, கோழி இறைச்சி, சில்லறை பொருட்கள் மற்றும் களஞ்சிய வசதிகளுக்காக கடை அறைகள் குத்தகைக்கு வழங்கல் மற்றும் பொரகஸ், குருதலாவ பள்ளி இல.10, குருதலாவ மஹதென்ன மாட்டிறைச்சி விற்பனை செய்யும் உரிமையை குத்தகைக்கு வழங்கல், வெலிமடை/பொரலந்தை கிழமைச்சந்தை குத்தகை கட்டணத்தை வசூலிக்கும் உரிமையை குத்தகைக்கு வழங்கல், வெலிமடை சந்தை தொகுதியின் மீன் கடை, சிற்றுண்டி சாலை மற்றும் பொது மலசலகூட கட்டணத்தினை அறவிடும் உரிமையினை குத்தகைக்கு வழங்கல் மற்றும் வெலிமடை நகரில் வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கான கட்டணம் அறவிடலின் உரிமையினை குத்தகைக்கு வழங்குதல், கெப்பெட்பொல நகரில் வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கான கட்டணம் அறவிடலின் உரிமையினை குத்தகைக்கு வழங்குதல், வெலிமடை பேருந்து தரிப்பிடம், மணிக்கூட்டு கோபுரம் அருகில் உள்ள பொது மலசலகூடம் மற்றும் பொது வியாபார வளாகத்தில் உள்ள பொது மலசலகூட அமைப்பில் கட்டணம் அறவிடலின் உரிமையினை குத்தகைக்குவழங்குதல்.

1.1 கீழ் உள்ள 1.6 அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் 2025 ஆண்டிற்குரிய 2025.01.01 முதல் 2025.12.31 வரையான காலத்திற்கு வியாபார உரிமையை குத்தகைக்கு வழங்கல் தொடர்பாக அச்சிடப்பட்ட டெண்டர் பத்திரம் (விலைகள்) 2024.10.22ஆம் திகதி மு.ப 9.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

1.2 டெண்டர் படிவப் பத்திரம் 2024.10.01ஆம் திகதி மு.ப 9.00 மணி முதல் 2024.10.21ஆம் திகதி மு.ப 10.00 மணி வரை கிழமையில் வேலை செய்யும் நாட்களில் வழங்கப்படும்.

1.3 டெண்டர் படிவப் பத்திரத்தினை இவ் அலுவலகத்திற்கு வருகை தந்து பெற்றுக் கொள்ள முடியும்.

1.4 டெண்டர் விதிமுறைகள் மற்றும் மேலதிக தகவல்களை சபைச் செயலாளரிடம் கேட்டு அறிந்து கொள்ள முடியும். (தொ.பே இலக்கம் -057 2245973)

1.5 உரிய டெண்டர் படிவம் 2024.10.22ஆம் திகதி மு.ப 9.30 மணிக்கு திறக்கப்படும்.டெண்டர் குழுவின் தீர்மானமே இறுதி தீர்மானமாகும்.

1.6 உப அட்டவணை

**கொள்முதல் விலைகள்**

| தொடர் இலக்கம் | இடம் | குறைந்த பட்ச ஏலம் (ரூபா) | மீண்டும் செலுத்தும் டெண்டர் வைப்பு (ரூபா) | மீண்டும் செலுத்தப் படாத டெண்டர் படிவக் கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 1.6.1 | வெலிமடை புதிய வியாபார வளாகத்தில் இல.51 கடை அறை (களஞ்சிய வசதிக்காக) | 51,000.00 | 4,000.00 | 5,800.00 |
| 1.6.2 | வெலிமடை புதிய வியாபார வளாகத்தில் இல.53 கடை அறை (களஞ்சிய வசதிக்காக) | 51,000.00 | 4,000.00 | 5,800.00 |
| 1.6.3 | வெலிமடை புதிய வியாபார வளாகத்தில் இல.54 கடை அறை (களஞ்சிய வசதிக்காக) | 51,000.00 | 4,000.00 | 5,800.00 |
| 1.6.4 | வெலிமடை புதிய வியாபார வளாகத்தில் இல.56 கடை அறை (சில்லறை பொருட்கள் மற்றும் மலிகைப் பொருட்களுக்காக மாத்திரம்) | 298,200.00 | 4,000.00 | 5,800.00 |
| 1.6.5 | வெலிமடை புதிய வியாபார வளாகத்தில் இல.57 கோழி இறைச்சி கடை | 1,201,500.00 | 10,000.00 | 5,800.00 |
| 1.6.6 | வெலிமடை புதிய வியாபார வளாகத்தில் இல.58 ஆட்டிறைச்சி கடை | 580,700.00 | 10,000.00 | 5,800.00 |
| 1.6.7 | வெலிமடை புதிய வியாபார வளாகத்தில் இல.59 மாட்டிறைச்சிக் கடை | 2,132,240.00 | 10,000.00 | 5,800.00 |
| 1.6.8 | வெலிமடை புதிய வியாபார வளாகத்தில் இல.60 மாட்டிறைச்சிக் கடை | 1,777,210.00 | 10,000.00 | 5,800.00 |
| 1.6.9 | குருத்தலாவ பள்ளி இல.10 மாட்டிறைச்சிக் கடை கடை (மாட்டு இறைச்சி விற்பனை செய்யும் உரிமையை குத்தகைக்கு வழங்கல்) | 1,898,000.00 | 10,000.00 | 5,800.00 |
| 1.6.10 | பொரகஸ் மாட்டிறைச்சிக் கடை கடை (மாட்டிறைச்சிக் கடை விற்பனை செய்யும் உரிமையை குத்தகைக்கு வழங்கல்) | 2,193,750.00 | 10,000.00 | 5,800.00 |
| 1.6.11 | குருத்தலாவ, மஹதென்ன மாட்டிறைச்சிக் கடை கடை (மாட்டிறைச்சிக் கடை விற்பனை செய்யும் உரிமையை குத்தகைக்கு வழங்கல்) | 1,246,000.00 | 10,000.00 | 5,800.00 |
| 1.6.12 | வெலிமடை சந்தை நில குத்தகை கட்டணத்தை வசூலிக்கும் உரிமையை குத்தகைக்கு வழங்கல் | 3,230,000.00 | 10,000.00 | 5,800.00 |
| 1.6.13 | பொரலந்தை சந்தை நில குத்தகை கட்டணத்தை வசூலிக்கும் உரிமையை குத்தகைக்கு வழங்கல் | 83,000.00 | 4,000.00 | 5,800.00 |
| 1.6.14 | புதிய கிழமைச்சந்தை தொகுதியில் இலக்கம் 01 F மீன் கடை | 150,000.00 | 4,000.00 | 5,800.00 |
| 1.6.15 | புதிய கிழமைச்சந்தை தொகுதியில் இலக்கம் 04 F மீன் கடை | 150,000.00 | 4,000.00 | 5,800.00 |
| 1.6.16 | புதிய கிழமைச்சந்தை தொகுதியில் இலக்கம் 03 F மீன் கடை | 150,000.00 | 4,000.00 | 5,800.00 |
| 1.6.17 | புதிய கிழமைச்சந்தை தொகுதியில் இலக்கம் 02 F மீன் கடை | 150,000.00 | 4,000.00 | 5,800.00 |
| 1.6.18 | புதிய கிழமைச்சந்தை தொகுதியில் இலக்கம் 05 F மீன் கடை | 150,000.00 | 4,000.00 | 5,800.00 |
| 1.6.19 | புதிய கிழமைச்சந்தை தொகுதியில் இலக்கம் 01 C சிற்றுண்டிச் சாலை | 500,000.00 | 10,000.00 | 5,800.00 |
| 1.6.20 | புதிய கிழமைச்சந்தை தொகுதியில் இலக்கம் 02 C சிற்றுண்டிச் சாலை | 500,000.00 | 10,000.00 | 5,800.00 |
| 1.6.21 | புதிய கிழமைச்சந்தை தொகுதியின் பொது மலசல கூடத்தின் கட்டணத்தை அறவிடும் உரிமையினை குத்தகைக்கு விடல் | 150,000.00 | 4,000.00 | 5,800.00 |
| 1.6.22 | வெலிமடை மணிக்கூட்டு கோபுரத்தின் அருகில் பொது மலசல கூடத்தின் கட்டணத்தினை அறவிடும் உரிமையினை குத்தகைக்கு விடல் | 268,500.00 | 4,000.00 | 5,800.00 |
| 1.6.23 | வெலிமடை நகரில் வாகனங்களை நிறுத்தி வைத்தலுக்கான கட்டணத்தினை அறவிடும் உரிமையினை குத்தகைக்கு விடல் | 1,022,000.00 | 10,000.00 | 5,800.00 |
| 1.6.24 | வெலிமடை பஸ் தரிப்பிடத்தின் பொது மலசல கூடத்தில் கட்டணத்தினை அறவிடும் உரிமையினை குத்தகைக்கு விடல் | 3,923,750.00 | 10,000.00 | 5,800.00 |
| 1.6.25 | கெப்பெட்டிபொல நகரில் வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கான கட்டணத்தினை அறவிடும் உரிமையினை குத்தகைக்கு விடல் | 150,000.00 | 10,000.00 | 5,800.00 |
| 1.6.26 | வெலிமடை பொது வணிக வளாகத்தில் பொது மலசலகூட அமைப்பின் குத்தகை கட்டணம் அறவிடும் உரிமையை குத்தகைக்கு விடல் | 550,000.00 | 10,000.00 | 5,800.00 |

கவனத்திற்கு :- 1.6.9, 1.6.10 மற்றும் 1.6.11 உரிமை தொடர்பாக பொருத்தமான இறைச்சிக் கடை அறைகள் டெண்டர்காரர்களால் வழங்கப்பட வேண்டியதுடன், டெண்டர் விண்ணப்பப்படிவத்துடன் பொருத்தமான கடை அறையினை தெரிவு செய்து கொண்டதாக எழுத்து மூலம் ஆதாரத்தினை முன்வைக்க வேண்டும். அனைத்து மாட்டிறைச்சிக் கடை கடைகள் மற்றும் ஆட்டிறைச்சி கடைகளுக்கு அங்கீகாரம் பெற்ற கொலையிடல் வசதிகளை உங்களாலே வழங்கப்பட வேண்டியதோடு, சுகாதார வழிமுறைகளுக்கு அமைவாக உள்ளதென சுகாதார பரிசோதகரின் சான்றிதழை முன்வைத்தல் வேண்டும்.

**2024.09.26**
**வெலிமடை பிரதேச சபை அலுவலகத்தில்**

**டி.எம்.பி.எஸ்.பண்டார**
**சபை செயலாளர்**
**பிரதேச சபை**
**வெலிமடை**

## தேசிய போக்குவரத்து ஆணைக்குழு

**பேரூந்தில் பிரயாணம் செய்யும் பயணிகள், பயணிகள் போக்குவரத்து அனுமதிப்பத்திர உரிமையாளர்கள், பேரூந்து பணியாளர் குழுக்கள் மற்றும் அனைத்து பொதுமக்களுக்கான அறிவித்தல்**

## இடைக்கால பஸ் கட்டண திருத்தம்

**2024 செப்டெம்பர் 01ம் திகதி மற்றும் 2024 அக்டோபர் 01ம் திகதி முதல் (30 செப்டம்பர் 2024 நள்ளிரவு முதல்)** ஒரு லீற்றர் இலங்கை வெள்ளை டீசலின் விலை லீட்டருக்கு ரூ.10/- மற்றும் இருபத்தி நான்கு ரூபாயினால் (ரூ.24/-) முறையே குறைக்கப்பட்டுள்ளதின் படி பேருந்துக் கட்டணக் கணக்கீட்டுச் சுட்டிக்கு ஏற்ப, தற்போது நடைமுறையிலுள்ள பேருந்துக் கட்டணத்தை நான்கு தசம் இரண்டு நான்கு விகிதத்தினால் (4.24 %) குறைக்க முடியும் என அனுமாணிக்கப்பட்டுள்ளது.

எனவே தற்போது சேவையாற்றும் சாதாரண சேவைகள், அரை சொகுசு சேவைகள், சொகுசு சேவைகள், அதி சொகுசு சேவைகள் ஆகியவற்றின் பேருந்து கட்டணங்கள் **01ம் திகதி அக்டோபர் 2024 அன்று நள்ளிரவு முதல் (02ம் திகதி அக்டோபர் 2024 அன்று 0001 மணி முதல்)** நான்கு தசம் இரண்டு நான்கு வீகிதத்தினால் (4.24 %) குறைக்கப்படுவதோடு. இவ் வீகிதத்தில் திருத்தம் ஏதும் ஏற்பட்டால் மீண்டும் இதை மீள் பரிசீலனை செய்ய போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சகத்தின் செயலாளர் ஒப்புதல் அளித்துள்ளார்.

அதன்படி, 2024 ஆம் ஆண்டு ஒக்டோபர் 01 ஆம் திகதி நள்ளிரவு முதல் **(2024 ஆம் ஆண்டு ஒக்டோபர் 02 ஆம் திகதி 0001 மணித்தியாலங்களில் இருந்து)** இலங்கை போக்குவரத்து சபையினால் இயங்கும் பேரூந்துகள், தேசிய போக்குவரத்து ஆணைக்குழு மற்றும் மாகாண வீதி பயணிகள் போக்குவரத்து அதிகார சபையினால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் பயணிகள் சேவை அனுமதிப்பத்திரத்தின் கீழ் இயங்கும் தனியார் பேரூந்துகளில் புதிய திருத்தப்பட்ட பேருந்து கட்டணங்கள் நடைமுறைபடுத்தப்படும். மற்றும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் கீழ் இயங்கும் அனைத்து மாகாணங்களுக்கிடையிலான பேருந்து சேவைகளின் திருத்தப்பட்ட பேருந்து கட்டண சுழற்சி மற்றும் முழு பேருந்து கட்டணம் மற்றும் கட்டண குறிப்புகளை தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் அதிகாரப்பூர்வ இணையதளமான www..ntc.gov.lk தரவிறக்க / அவதானிக்க முடியும்.

அதன்படி, இலங்கை போக்குவரத்து சபை மற்றும் அனைத்து தனியார் பேரூந்து செயலாற்றுனர்களுக்கும் பயணிகளிடம் இருந்து நிர்ணயிக்கப்பட்ட பஸ் கட்டணத்தை மாத்திரம் அறவிடுமாறு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், நிர்ணயிக்கப்பட்ட பஸ் கட்டணத்தை விட அதிகமாக கட்டணம் வசூலிப்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நிர்ணயிக்கப்பட்ட பஸ் கட்டணத்தை விட அதிகமாக கட்டணம் அறவிடப்படுமாயின் மாகாணங்களுக்கிடையிலான பேருந்துகள் தொடர்பாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் **துரித தொலைபேசி இலக்கமான 1955 அல்லது 0712595555** என்ற வட்ஸ்அப் இலக்கத்திற்கு இலங்கை போக்குவரத்து சபை பேருந்துகள் தொடர்பாக இலங்கை போக்குவரத்து சபையின் **துரித தொலைபேசி இலக்கமான 1958ம்** மாகாணத்தினுள் இயங்கும் பேருந்துகள் தொடர்பாக குறித்த மாகாண அதிகாரசபைக்கு முறைப்பாடுகளை வழங்குமாறு அனைத்து பொதுமக்களுக்கும் அறியத்தருகிறோம்.

**நயோமி ஜெயவர்த்தன**
**பணிப்பாளர் நாயகம்**
**தேசிய போக்குவரத்து ஆணைக்குழு.**

SELACINE

Daily News Classifieds, the Housewives' companion

# நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சு

## தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை

## விலைக்கோரல் அறிவித்தல் – 2024–10–02

பின்வரும் வேலைகள் / வழங்கல்களுக்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடமிருந்து தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை சார்பில் பெறுகைக் குழு தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| இல. | ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் ஒப்பந்த இலக்கம் | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) | தேவையான கேள்விப் பிணை | தேவையான தகைமை | VAT உட்பட மதிப்பீட்டுச் செலவு (ரூபா) | தொடர்புகொள்ள வேண்டிய நபர் மற்றும் ஆவணங்கள் வழங்கப்படும் இடம் | இறுதித் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|---|---|
| பொது நிதித் திணைக்களத்தினால் செயற்படுத்தப்படும் இலத்திரனியல் அரச பெறுகை **(e-GP)** முறைமையின் மூலம் (10 மில்லியன் ரூபா வரை) பொருட்களுக்கான கேள்விகளை அழைக்கும் பணியில் நாம் ஈடுபட்டுள்ளோம். கேள்விகளைச் சமர்ப்பிப்பதற்கான தகுதித் தேவைப்பாடாக முறைமையில் பதிவு செய்துகொள்ளல் வேண்டும். மேலதிக விபரங்களுக்கு **011 -2635886/071-1525234** எனும் தொலைபேசி இலக்கங்களின் ஊடாக எமது அதிகாரியை தயவுசெய்து தொடர்புகொள்ளவும். | | | | | | | |
| சிவில் கேள்விகள் | | | | | | | |
| 01 | உக்குவளை மற்றும் மாத்தளை நீர் வழங்கல் திட்டங்களில் உள்ள காணிகளுக்கு படலைகளை பொருத்துதல் மற்றும் வேலிகளை நிர்மாணித்தல்<br>ஒப்பந்த இல **:RSC/C/CIVIL/RH/MATALE/2024/272** | 4,000/- + VAT | ரூபா 60,000/- | ஆவணத்தின் பிரகாரம் மற்றும் நீர் வழங்கல் மற்றும் சாக்கடை துறையில் C7 அல்லது C8 தரத்தில் CIDA பதிவு | 2.93 மில்லியன் | பி.ஓ.நி. (மத்திய), கெட்டம்பே, பேராதனை.<br>Tele : 081-2386068<br>Fax: 081-2388027 | 16/10/2024 பி.ப. 2.00 |
| 02 | வவுனியா நீர் வழங்கல் திட்டம் - பேராறுவில் (WSP) நீர்த்தேக்க வான் பிரதேசத்தில் கருங்கல் பரப்புதல் (Rubble Packing) மற்றும் கால்வாய் திருத்தவேலைகள்<br>ஒப்பந்த இல: **RSC/N/DGM/RH/RESERVOIR-REPAIR-PERARU/2024/095** | 12,500/- +VAT | ரூபா 162,000/- | ஆவணத்தின் பிரகாரம் மற்றும் கட்டிட நிர்மாணத் துறை மற்றும் நீர் வழங்கல் மற்றும் சாக்கடை துறையில் C5 அல்லது C6 தரத்தில் CIDA பதிவு அத்துடன் 2018 ஒக்டோபர் 16ஆம் திகதி டெய்லி நியூஸ் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தின் பிரகாரம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 16.11 மில்லியன் | பிஒநி (வடக்கு) அலுவலகம், தேநீவவச, யாழ்ப்பாணம் வீதி, வவுனியா.<br>Tele:024-2227313/ 024-2225719/ 024-2227340<br>Fax:024-2225088/ 024-2227341 | 16/10/2024 பி.ப. 2.00 |
| 03 | வெலிகம நீர் வழங்கல் திட்டத்திற்கு வால்வு அறையை நிர்மாணித்தல் மற்றும் DI குழாய்கள், பொருத்தல்கள் மற்றும் விசேடங்களைப் பதித்தல்.<br>ஒப்பந்த இல: **RSCS/P&C/W/RH/3121/2024B** | 12,500/- +VAT | ரூபா 214,000/- | ஆவணத்தின் பிரகாரம் மற்றும் நீர் வழங்கல் மற்றும் சாக்கடை துறையில் C5 அல்லது C6 தரத்தில் CIDA பதிவு அத்துடன் 2018 ஒக்டோபர் 16ஆம் திகதி டெய்லி நியூஸ் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தின் பிரகாரம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 21.35 மில்லியன் | பிஒநி (தெற்கு), 395, குமாரதுங்க மாவத்தை, பம்புரன, மாத்தறை.<br>Tele: 0412222105<br>Fax 0412221329 | 16/10/2024 பி.ப. 2.00 |
| 04 | மெத்தவத்த சந்தியிலிருந்து வேரதுடுவ சந்தி வரையில் பிரதான விநியோகத்திற்காக வால்வு அறைகளை நிர்மாணித்தல் மற்றும் uPVC குழாய்கள், பொருத்தல்கள், விசேடங்கள், DI வால்வுகள் சகிதமான துணைப்பாகங்களைப் பதித்தல்.<br>ஒப்பந்த இல: **RSCS/P&C/W/UTILITY SHIFTING/ 3116/2024A** | 12,500/- +VAT | ரூபா 158,000/- | ஆவணத்தின் பிரகாரம் மற்றும் நீர் வழங்கல் மற்றும் சாக்கடை துறையில் C5 அல்லது C6 தரத்தில் CIDA பதிவு அத்துடன் 2018 ஒக்டோபர் 16ஆம் திகதி டெய்லி நியூஸ் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தின் பிரகாரம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 15.8 மில்லியன் | பிஒநி (தெற்கு), 395, குமாரதுங்க மாவத்தை, பம்புரன, மாத்தறை.<br>Tele: 0412222105<br>Fax 0412221329 | 16/10/2024 பி.ப. 2.00 |
| 05 | மூதூர் நீர் வழங்கல் திட்டத்தில் வாடிக்கையாளர் உறவுகள் அலுவலகத்தின் மிகுதி நிர்மாண வேலைகள்<br>ஒப்பந்த இல: **RSC(E)/O&M/RH/MUTHUR/OIC OFFICE/ 2024/304** | 4,000/- + VAT | ரூபா 42,400/- | ஆவணத்தின் பிரகாரம் மற்றும் கட்டிட நிர்மாணத் துறையில் C7 அல்லது C8 தரத்தில் CIDA பதிவு | 4.23 மில்லியன் | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (கிழக்கு), தேநீவவச, இல. 48A/1, கண்டி வீதி, திருகோணமலை.<br>Tele:026-2225396/ 0262222028<br>Fax:0262225383 | 16/10/2024 மு.ப. 10.00 |
| 06 | நிலாவெளி நீர் வழங்கல் திட்டத்தில் வாடிக்கையாளர் உறவுகள் அலுவலகத்தின் மிகுதி நிர்மாண வேலைகள்<br>ஒப்பந்த இல: **RSC(E)/O&M/RH/NILAVALI/OI COFFICE/2024/305** | 4,000/- + VAT | ரூபா 41,500/- | ஆவணத்தின் பிரகாரம் மற்றும் கட்டிட நிர்மாணத் துறையில் C7 அல்லது C8 தரத்தில் CIDA பதிவு | 4.15 மில்லியன் | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (கிழக்கு), தேநீவவச, இல. 48A/1, கண்டி வீதி, திருகோணமலை.<br>Tele:026-2225396/ 0262222028<br>Fax:0262225383 | 16/10/2024 மு.ப. 10.00 |
| 07 | புத்தள நீர் வழங்கல் திட்டத்திற்கான பம்பி இல்ல புனரமைப்பு வேலைகள்<br>ஒப்பந்த இல: **RSC(UVA)/DGM(UVA)/REH/ BUTTALA/2024/049** | 6,000/- + VAT | ரூபா 75,000/- | ஆவணத்தின் பிரகாரம் மற்றும் கட்டிட நிர்மாணத் துறையில் C7 அல்லது C6 தரத்தில் CIDA பதிவு அத்துடன் 2018 ஒக்டோபர் 16ஆம் திகதி டெய்லி நியூஸ் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தின் பிரகாரம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 6.5 மில்லியன் | பிஒநி (ஊவா), கேள்விகள் பிரிவு, தேநீவவச, மெதிரிய வீதி, பதுளை.<br>Tele: 0552230934<br>Fax: 0552230974/ 0552222448 | 16/10/2024 பி.ப. 2.00 |
| 08 | கிராந்துருகோட்டே நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியின் மிகுதி வேலைகள்<br>ஒப்பந்த இல: **RSC(UVA)/DGM(UVA)/REH/ BADULLA/2024/164** | 12,500/- +VAT | ரூபா 521,284/- | ஆவணத்தின் பிரகாரம் மற்றும் நீர் வழங்கல் மற்றும் சாக்கடை துறையில் C4 அல்லது C5 தரத்தில் CIDA பதிவு அத்துடன் 2018 ஒக்டோபர் 16ஆம் திகதி டெய்லி நியூஸ் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தின் பிரகாரம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 34.75 மில்லியன் | பிஒநி (ஊவா), கேள்விகள் பிரிவு, தேநீவவச, மெதிரிய வீதி, பதுளை.<br>Tele: 0552230934<br>Fax: 0552230974/ 0552222448 | 16/10/2024 பி.ப. 2.00 |
| 09 | கம்பஹா பிராந்தியத்தில் நீர்க்குழாய் கசிவு திருத்தவேலைகள்<br>ஒப்பந்த இல: **RSC(W/N)/SS/LR/GAM(O&M)/2024/54R** | 12,500/- +VAT | ரூபா 178,500/- | ஆவணத்தின் பிரகாரம் மற்றும் நீர் வழங்கல் மற்றும் சாக்கடை துறையில் C5 அல்லது C6 தரத்தில் CIDA பதிவு அத்துடன் 2018 ஒக்டோபர் 16ஆம் திகதி டெய்லி நியூஸ் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தின் பிரகாரம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 12 மில்லியன் | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (W/N) அலுவலகம், இல. 433/4A, கணேமுல்ல வீதி, கடவத்தை.<br>Tele:0112922129 Fax:0112922146 | 16/10/2024 மு.ப. 10.00 |
மிகச்சிறந்த மாற்றத்துக்கான அடித்தளத்தை நீங்கள் இடமுடியும்.

அதேபோன்று அடுத்துவரவிருக்கும் இரண்டு தேர்தல்களின் முக்கியத்துவத்தை உங்களுக்கு சுட்டிக்காட்ட விரும்புவதுடன், உள்ளூராட்சி மற்றும் மாகாணசபைத்தேர்தல்களை இயலுமானவரை விரைவில் நடாத்துவதற்கு முன்னுரிமை அளிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம். இதுசிறுபான்மையின மக்களை சமத்துவமாக நடாத்துதல், அவர்களது வளங்களை அவர்களே நிர்வகிப்பதற்கான வாய்ப்பேற்படுத்தல் மற்றும் அவர்கள் 15 வருடங்களுக்கும் மேலாகக் கோரிவரும் பொறுப்புக்கூறல் செயற்திட்டத்தை ஸ்தாபித்தல் என்பன தொடர்பில் உங்களது தேர்தல் விஞ்ஞாபனத்தில் வழங்கப்பட்டிருக்கும் வாக்குறுதிகளுடன் தொடர்புபட்டதாகும்.

மாகாணசபை மற்றும் உள்ளூராட்சி மன்றத்தேர்தல் சட்டங்கள் 25 சதவீத கட்டாய பெண் பிரதிநிதித்துவத்தை வலியுறுத்துகின்றன. இதற்கு முன்னுரிமை அளிக்குமாறும், பெண்கள், இளைஞர்கள் மற்றும் ஏனைய ஒடுக்கப்பட்ட பிரிவினர் தேர்தல்களில் அவர்களுக்குரிய நியாயமான பிரதிநிதித்துவத்தைப் பெற்றுக்கொள்வதை உறுதிப்படுத்துமாறும் உங்களிடம் கேட்டுக்கொள்கின்றோம்.

மேலும் சகல பிரஜைகளும் தமது இந்த நாட்டில் சமத்துவமாகவும், கௌரவமாகவும் உணர்வதை உறுதிப்படுத்தும் அதேவேளை, தமிழ் பேசும் மக்களின் நீண்டகாலப் பிரச்சினைகளுக்குரிய தீர்வை வழங்குவதற்கான செயற்திறன்மிக்க நடவடிக்கைகளை உங்களது நிர்வாகம் முன்னெடுக்கும் என நம்புகின்றோம். நல்லாட்சிஅரசாங்கத்தின்கீழ் ஆரம்பிக்கப்பட்ட புதிய அரசியலமைப்பு வரைபு உருவாக்கப்பணிகளைத் துரிதமாக முன்னெடுத்து நிறைவுசெய்வது குறித்து தேசிய மக்கள் சக்தியின் விஞ்ஞாபனத்தில் அளிக்கப்பட்டிருக்கும் உத்தரவாதம் மிகமுக்கியமானதாகும். அரசியலமைப்பு மறுசீரமைப்பு தொடர்பான பொதுமக்கள் பிரதிநிதிகள் குழுவின் உறுப்பினராக இருந்த கலாநிதி ஹரிணி அமரசூரியவுக்கு பெண்களின், குறிப்பாக சிறுபான்மையின பெண்களின் அபிலாஷைகள் தொடர்பில் போதிய தெளிவு உண்டு என்பதுடன் ஏற்கனவே உள்ள வரைபில் இருந்து அப்பணிகளைத் தொடர்வது இன்றியமையாததாகும். எதிர்வரும் காலத்தில் நீங்கள் முன்னெடுக்கவிருக்கும் முக்கிய பணிகள் வெற்றியடைய எமது வாழ்த்துக்கள்.

இவ்வாறு அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


## இலங்கை வங்கி

### ஏலவிலை கூறலுக்கான அழைப்பு (IFB)

**கேள்விப்பத்திர இல: P/PROC/2024/391**

**இலங்கை வங்கியின் மெய்நிகராக்கம் மற்றும் கொள்கலனமைப்பாக்கல் (Virtualization and Containerization) உட்கட்டமைப்புக்கான மென்பொருள் அடிப்படையிலான தரவு நிலையத்தை மேம்படுத்தல்**

மேற்குறிப்பிட்ட பெறுகைக்கான அரக்கு முத்திரையிடப்பட்ட விலை கோரல்கள் VMware அங்கீகாரம்பெற்ற பங்காளர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

| முக்கிய திகதிகள் | |
|---|---|
| விலைகூறல் ஆவணங்களை வழங்குவதற்கான இறுதித் திகதியும் நேரமும் | 2024.10.22 அன்று 1500 மணி |
| விலைகூறல் ஆவணங்கள் வழங்கப்படும் காலப்பகுதி | வேலை நாட்களில் 0900 மணியிலிருந்து 1500 மணி வரை |
| விலைகூறலுக்கான முற்கூட்டிய கூட்டம் | 2024.10.11 அன்று 1100 மணிக்கு 14ஆம் தளம், இலங்கை வங்கி, தலைமை அலுவலகக் கட்டடம் |
| விலைகூறலை மூடும் திகதியும் நேரமும் | 2024.10.23 1000 மணி |
| விலைகூறலைத் திறத்தல் | விலைகூறல் முடிவடைந்ததும் |

மேலதிக விபரங்களுக்கு, விலைகூறுவோர் www.boc.lk என்ற இலங்கை வங்கியின் வலைத்தளத்தைப் பார்வையிடலாம்.

ஏதேனும் அல்லது அனைத்து விலைகூறல்களையும் நிராகரிப்பதற்கான உரிமையையும் எவ்வித காரணமும் தெரிவிக்காது விலைகூறலை அல்லது அதன் ஏதேனும் ஒரு பாகத்தினை ஏற்றுக்கொள்வதற்கான உரிமையினையும் இலங்கை வங்கி கொண்டுள்ளது.

**பிரதான முகாமையாளர்**
சொத்துகளும் சேகரிப்பும் பகுதி
14ஆம் தளம், இலங்கை வங்கி தலைமை அலுவலகம்,
"BOC சதுக்கம்", இல.01, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 01.
தொலைபேசி: 011 220 4264, 011 254 4310, 011 243 4786
மின்னஞ்சல்: procurement@boc.lk

மேலதிக விபரங்களுக்கு Scan செய்யவும்

இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்




மத்திய மாகாண தமிழ் மொழித் தினப் போட்டியில் முஸ்லிம் கலாசார நிகழ்ச்சி எனும் பிரிவின் கீழ் இடம்பெற்ற, கவிதா நிகழ்வு போட்டியில் மாத்தளை குரீவலை ஹமீதியா கல்லூரி மாணவர்கள் முதலாம் இடத்தை பெற்று அகில இலங்கைப் போட்டிக்கு தெரிவாகியுள்ளனர். பங்குபற்றி பரிசில்கள் வென்ற மாணவர்களோடு பயிற்றுவித்த ஆசிரியர்கள் மற்றும் அதிபர் ஆகியோரைக் காணலாம்.

## அமரர் அருளானந்தனின் சமுதாயப்பணி அளவற்றது

### ஜனநாயக தேசிய முன்னணியின் பிரதித் தலைவர் குமரகுருபரன் அனுதாபம்

அமரர் எஸ்.ரி.எஸ்.அருளானந்தனின் சமுதாயப்பணி அளவற்றதென்பதுடன், கொழும்பு தமிழ், இந்து உலகம் மட்டுமல்லாது பௌத்த உலகமும் அவர் தம் மனம் உவந்த சமூகப் பணியை பெற்று பெருமையுற்றதென்றால் வரலாற்றில் அவர் பெயர் நீடு நிலைத்து விளங்குமென, ஜனநாயக தேசிய முன்னணியின் பிரதி தலைவரும் மேல் மாகாண சபையின் முன்னாள் உறுப்பினருமான கலாநிதி என்.குமரகுருபரன் தெரிவித்துள்ளார்.

பிரபல வர்த்தகரான அருளானந்தனின் மறைவையொட்டி அவர் விடுத்துள்ள தனது அனுதாபச் செய்தியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அச்செய்தியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

"அகில இலங்கை இந்து மாமன்றம், கதிர்காம யாத்திரிகர் மடம், செல்லக்கதிர்காம கோயில் அபிவிருத்தி பரிபாலனம், தெய்வானை அம்மன் தேவஸ்தான நிர்வாகம், கொழும்பு விவேகானந்த சபை ஈடுபாடென்று பல்பரிமாண உயர் பங்களிப்பு கொண்டவராவார் அருளானந்தன்.

இலங்கை கனரக வர்த்தக ஸ்தாபனங்களின் சங்கத்தின் தலைவராக மீண்டும் மீண்டும் பல ஆண்டுகள் தொடர்ச்சியாக ஏகமனதாக அவர் தெரிவாகியிருந்தார். அன்பான புன்முறுவல் மறக்க முடியாதது.

பெரும் வர்த்தக பிரமுகர்களிடம் இல்லாத சமய, சமூக மனிதநேய இன்முகம் கொண்ட பெருந்தகை இன்று எம்முடன் இல்லையென்பதற்கு அப்பால் அருளானந்தம் எனும் பெருந்தகையின் ஆத்மா இறைபாதங்களில் அமைதியடை பிரார்த்திக்கின்றேன்" என்றார்.


## INVITATION FOR BIDS (IFB)

### Department of Industries Northern Province

**NP/16/03/Ac.01/PSDG/VD/2024/03**

1. The Chairman, Department Procurement Committee on behalf of the Provincial Director, Department of Industries, Northern Province now invites sealed bids from eligible and qualified bidders for Video Documentary (Creating Brand Stories with Subtitle in English and Voice over / narration).
2. Bidding will be conducted through National Competitive Bidding procedure.
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall meet the following requirements;
   a) Should be a registered service provider.
   b) Studio or Branch should be located in Northern Province.
   c) Past Experience – Minimum 2 years experience in similar videography project in any recognized organization
   d) At least one contract of a nature and complexity equivalent to the proposed Service worth of Rs.900,000.00 within two years.
4. To qualify for award of the Contract, bidders shall meet the minimum qualifying criteria given in Section 2 – Bidding Data.
5. Interested bidders may obtain further information from Provincial Director, Department of Industries, Northern Province, Adappan Road, Main Street, Jaffna and inspect the bidding documents at Provincial Director, Department of Industries, Northern Province from 9.00 hrs to 15.00 hrs on working days.
6. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on submission of a written application to the Provincial Director, Department of Industries, Northern Province, Adappan Road, Main Street, Jaffna, **from 03rd October to 23rd October 2024 from 09.00 hrs to 15.00 hrs** upon payment of a non-refundable fee of Rs.1,000.00. The method of payment will be by cash.
7. Bids shall be delivered to Provincial Director, Department of Industries, Northern Province, Adappan Road, Main Street, Jaffna at or before 10.00 hrs. on 24th October 2024. Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders' representatives who choose to attend.
8. Pre-Bid Meeting will be held on 14th October 2024 at 10.00 hrs. at Department of Industries, Northern Province, Adappan Road, Main Street, Jaffna.
9. All bids shall be accompanied by a Bid-Security of Rs.15, 000.00.

**Chairman**
**Department Procurement Committee,**
**Department of Industries, Northern Province**
**Adappan Road, Main Street, Jaffna.**
**Telephone : 021-223-1536 & 021-222-9717**
**Fax : 021-223-1532**



### தொல்பொருளியல் பட்டப்பின்படிப்பு நிறுவனம்

## விண்ணப்பங்களுக்கான அழைப்பு

### பணிப்பாளர் பதவி

1985இன் 2ஆம் இலக்க கட்டளையின் 14 ஆம் இலக்கம் மற்றும் 2024 ஜனவரி 01 ஆம் திகதி 01/2024 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் ஏற்பாடுகளின் பிரகாரம் களனி பல்கலைக்கழக, தொல்பொருளியல் பட்டப்பின்படிப்பு நிறுவனத்தின் (PGIAR) முகாமைத்துவ சபையினால் தொல்பொருளியல் பட்டப்பின்படிப்பு நிறுவனத்தின் பணிப்பாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரர்கள் 63 வயதுக்கு குறைந்தவராகவும் இலங்கை பிரசையாகவும் முகாமைத்துவத்தில் தகைமை மற்றும் அனுபவத்தைப் பெற்றவராகவும் இருத்தல் வேண்டும் என்பதோடு குறித்த புதிய நியமனம் 2025 மார்ச் 11 ஆம் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும்.

பணிப்பாளர் நிறுவனத்தின் முழு நேர அதிகாரியாவார். 1985 இன் 2 ஆம் இலக்க கட்டளையின் 11 ஆம் இலக்க விதிகளின்படி, பணிப்பாளரானவர் நிறுவனத்தின் தலைமை நிறைவேற்று அதிகாரி, தலைமை கல்விசார் அதிகாரி மற்றும் தலைமை கணக்கு அதிகாரி ஆவார்.

**பதவிக் காலம்:** நியமிக்கப்பட்ட திகதியில் இருந்து 03 ஆண்டுகள் அல்லது 65 ஆவது பிறந்த நாள் ஆகியவற்றில் முதலில் வரும் காலம் வரை.

விண்ணப்பங்களுடன் பின்வரும் ஆவணங்கள் இணைக்கப்படுதல் வேண்டும்.

I. பிறந்த திகதி (பிறப்புச் சான்றிதழின் உறுதி செய்யப்பட்ட பிரதி ஒன்றை இணைத்தல் வேண்டும்) மற்றும் தொடர்பு விபரங்கள் உள்ளடக்கிய விண்ணப்பதாரரின் (ஆதார ஆவணங்களுடன்) முழுமையான சுயவிபரக் கோவை

II. நிறுவனத்தை அபிவிருத்தி செய்வதற்கான தனிப்பட்ட அறிக்கை ஒன்று.

III. பணிப்பாளர் பதவிக்கு நியமிக்கப்பட்டால், விண்ணப்பதாரர் அடைவுக்கான முன்மொழிவுகளில் சுருக்கமான விபரம் ஒன்று.

IV. விண்ணப்பதாரர் அரச துறை, கூட்டுத்தாபனம், சட்டரீதியான சபைகள் மற்றும் தொல்பொருளியல் பட்டப்பின்படிப்பு நிறுவனம் தவிர உயர் கல்வி நிறுவனங்களில் பணியாற்றும் சந்தர்ப்பத்தில் இந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டால் அவரை விடுவிக்க முடியும் என்பதை குறிப்பிட்டு தொழில் வழங்குநரிடம் இருந்து கடிதம் ஒன்று.

2024 ஜனவரி 01 ஆம் திகதி 01/2024 ஆம் இலக்க ப.மா.ஆ. இல் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு அமைய தேர்வு நடைமுறை மேற்கொள்ளப்படும். இந்த சுற்றுநிருபத்தை www.ugc.lk என்ற முகவரியில் https://shorturl.at/HPrD7 இணைப்பில் இருந்து தரவிறக்கம் செய்ய முடியும்.

விண்ணப்பங்களை முத்திரை பொறிக்கப்பட்ட உறை ஒன்றில்/ கடித உறையில் இட்டு, முகாமைத்துவச் சபை செயலாளர், பொது நிர்வாகப் பிரிவு, தொல்பொருளியல் பட்டப்பின்படிப்பு நிறுவனம், இல. 407, பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு 07 என்ற முகவரிக்கு 2024 நவம்பர் 02 ஆம் திகதி பி.ப. 3.00 அல்லது அதற்கு முன்னர் மேலுள்ள முகவரிக்கு கிடைப்பதற்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "பணிப்பாளர் பதவிக்கான விண்ணப்பம்" என்று குறிப்பிடுவதற்கு விண்ணப்பதாரர்கள் அறிவுறுத்தப்படுகின்றனர்.

தவிர, எந்த ஒரு ஆதார ஆவணங்களுடன் சேர்த்து மேலுள்ள ஆவணங்களின் PDF வடிவத்தில் மென் பிரதி ஒன்றை sarpgiar@kln.ac.lk என்ற மின்னசல் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் அல்லது மேலுள்ள அறிவுறுத்தலுக்கு அமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**முகாமைத்துவச் சபை செயலாளர்**
**பொது நிர்வாகப் பிரிவு**
**தொல்பொருளியல் பட்டப்பின்படிப்பு நிறுவனம்**
**இல. 407, பௌத்தாலோக்க மாவத்தை**
**கொழும்பு 07.**
**2024.10.02**

### டி20 மகளிர் உலகக் கிண்ணம்:

# கடைசி பயிற்சிப் போட்டியிலும் இலங்கை மகளிருக்கு வெற்றி

மகளிர் டி20 உலகக் கிண்ணத்தின் ஸ்கொட்லாந்துக்கு எதிரான இரண்டாவது பயிற்சிப் போட்டியிலும் இலங்கை மகளிர் அணி 5 விக்கெட்டுகளால் வெற்றியீட்டியது.

டுபாயில் நேற்று முன்தினம் (30) நடந்த இந்தப் போட்டியில் நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்கொட்லாந்து அணி 58 ஓட்டங்களுக்கே சுருண்டது. எட்டு பந்து வீச்சாளர்களை பயன்படுத்திய இலங்கை அணி சார்பில் உதேஷிகா பிரபோதனி மற்றும் சச்சினி நிசன்சல தலா இரண்டு விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

பதிலெடுத்தாடிய இலங்கை அணியும் அடுத்தடுத்து விக்கெட்டுகளை இழந்தபோதும் மத்திய வரிசையில் கவீஷா டில்ஹாரி பெற்ற 27 ஓட்டங்களும் அணியின் வெற்றிக்கு உதவியது. இதன் மூலம் இலங்கை மகளிர் அணி 15.3 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து வெற்றி இலக்கான 59 ஓட்டங்களை எட்டியது.

முன்னதாக இலங்கை மகளிர் அணி தனது முதல் பயிற்சிப் போட்டியில் பங்களாதேஷ் அணியை வீழ்த்தியது. மகளிர் டி20 உலகக் கிண்ணப் போட்டி நாளை (03) ஐக்கிய அரபு இராச்சியத்தில் ஆரம்பமாகிறது. இதில் ஏ குழுவில் ஆரம்ப சுற்றில் ஆடும் இலங்கை அணி நாளை தனது முதல் போட்டியில் பாகிஸ்தான் அணியை எதிர்கொள்ளவுள்ளது.



# பங்களாதேஷை வீழ்த்தி டெஸ்ட் தொடரை வென்றது இந்திய அணி




பங்களாதேஷுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியிலும் 7 விக்கெட்டுகளால் அபார வெற்றியீட்டிய இந்திய அணி இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரை 2–0 என கைப்பற்றியது.

இதன்மூலம் இந்திய அணி சொந்த மண்ணில் தொடர்ச்சியாக 18 டெஸ்ட் தொடர்களை வென்று ஏற்கனவே படைத்த சாதனையை நீட்டித்துள்ளது.

கான்பூரில் நடைபெற்ற இந்த டெஸ்ட் போட்டியின் கடைசி நாளான நேற்று (01) இந்திய அணிக்கு 95 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்ட நிலையில் அந்த அணி 17.2 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை இழந்து 98 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது.

முன்னதாக முதலில் துடுப்பெடுத்தாட பணிக்கப்பட்ட பங்களாதேஷ் அணி மொமினுல் ஹக்கின் சதத்தின் உதவியோடு முதல் இன்னிங்ஸில் 233 ஓட்டங்களைப் பெற்றது. தொடர்ந்து இந்திய அணி தனது முதல் இன்னிங்ஸுக்காக 289 ஓட்டங்களைக் குவித்தது.

முதல் இன்னிங்ஸில் 52 ஓட்டங்களால் பின் தங்கிய நிலையில் தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த பங்களாதேஷ் அணியை 146 ஓட்டங்களுக்கு மட்டுப்படுத்த இந்திய அணியினால் முடிந்தது.

அடுத்து இரு அணிகளுக்கும் இடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட டி20 தொடர் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (06) கவாலியோரில் ஆரம்பமாகவுள்ளது.

# இலங்கை இளையோர் மகளிர் அணி வெற்றி



அவுஸ்திரேலியாவில் நடைபெற்று வரும் 19 வயதுக்கு உட்பட்ட மகளிர் முக்கோண ஒருநாள் தொடரில் நியூசிலாந்துக்கு எதிராக நேற்று (1) நடைபெற்ற போட்டியில் இலங்கை இளையோர் அணி 55 ஓட்டங்களால் வெற்றியீட்டியது.

பிரிஸ்பானில் நடைபெற்ற இந்தப் போட்டியில் நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை 19 வயதுக்கு உட்பட்ட மகளிர் அணி 42 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 159 ஓட்டங்களைப் பெற்றது. சுமுந்து நிசன்சலா 34 ஓட்டங்களைப் பெற்றதோடு விமொக்ஷா பாலசூரிய 29 ஓட்டங்களைக் குவித்தார்.

இந்நிலையில் பதிலெடுத்தாடிய நியூசிலாந்து 19 வயதுக்கு உட்பட்ட அணியை இலங்கை இளையோரால் 35.2 ஓவர்களில் 104 ஓட்டங்களுக்கே சுருட்ட முடிந்தது. இதன்போது 15 வயது இடது கை சுழல் வீராங்கனை சமோதி பிரபோதா 24 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளை பதம்பார்த்தார். அதேபோன்று லிமன்சா திலகரத்ன 3 விக்கெட்டுகளை பதம்பார்த்தார்.



நிந்தவூர் பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற டி20 சம்பியன்சிப் தொடரின் இறுதிப் போட்டி சீரற்ற காலநிலையால் கைவிடப்பட்ட நிலையில் கிண்ணத்தை பகிர்ந்துகொண்ட இறுதிப் போட்டிக்கு முன்னேறிய நிந்தவூர் முஸ்தகீன் மற்றும் ஹிக்மா அணிகளை காணலாம். இந்தப் போட்டி அண்மையில் நிந்தவூர் பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

(படம்: மாளிகைக்காடு குறூப் நிருபர்)

## சர்வதேச செய்திகள்

# லெபனானில் இஸ்ரேல் தரைவழி நடவடிக்கை: ஹிஸ்புல்லா மறுப்பு

## டெல் அவிவ் மீது லெபனானில் இருந்து ஏவுகணை வீச்சு

மட்டுப்படுத்தப்பட்ட தரைவழி படை நடவடிக்கையாக இஸ்ரேலின் கமாண்டோ மற்றும் பரசூட் படைப் பிரிவுகள் நேற்று லெபனானுக்குள் நுழைந்ததாக இஸ்ரேல் குறிப்பிட்டிருப்பதோடு டெல் அவிவில் இருக்கும் இஸ்ரேலின் மொசாட் உளவுப் பிரிவு தலைமையகம் உட்பட இஸ்ரேல் மீது ஏவுகணைகளை வீசியதாக ஹிஸ்புல்லா அமைப்பு தெரிவித்தது.

தெற்கு லெபனானில் இஸ்ரேலின் தரைவழி படை நடவடிக்கை நேற்று முன்தினம் இரவு ஆரம்பித்ததோடு அது மட்டுப்படுத்தப்பட்டதாகவும் எல்லையில் இருந்து குறுகிய தூரம் வரை இருந்ததாக இஸ்ரேலிய பாதுகாப்பு அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார். எனினும் ஹிஸ்புல்லா போராளிகளுடன் நேரடி சண்டையில் ஈடுபடவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் இஸ்ரேலியப் படை லெபனானுக்குள் தரைவழியாக நுழைந்ததாக கூறுவதை ஹஸ்புல்லாவின் ஊடகப் பிரிவு தலைவர் முஹமது அபீப் மறுத்துள்ளார்.

முன்னதாக இஸ்ரேல் இராணுவப் பேச்சாளர் அவிசாய் அட்ராயீ எக்ஸ் சமூகதளத்தில் அரபு மொழியில் விடுத்த எச்சரிக்கையில், ஹிஸ்புல்லாவுடன் கடும் மோதல் இடம்பெற்று வருவதால் தெற்கு லெபனானில் உள்ள குடியிருப்பாளர்களை வெளியேறும்படி குறிப்பிட்டுள்ளார்.

'தெற்கு லெபனானின் குடியிருப்பாளர்களுக்கு அவசர எச்சரிக்கை. தெற்கு லெபனானில் பொதுமக்களின் இடங்களில் ஹிஸ்புல்லாவுடன் கடுமையான சண்டை இடம்பெற்று வருவதோடு மக்களை கேடயமாகப் பயன்படுத்தி தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன' என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

லெபனானில் கடந்த ஒரு வாரத்திற்கு மேலாக உக்கிர வான் தாக்குதல்களை நடத்தி வந்த நிலையிலேயே இஸ்ரேலின் தரைவழி படை நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.

தரைவழி நடவடிக்கையில் எல்லையை ஒட்டி இஸ்ரேலுக்கு அச்சுறுத்தலாக உள்ள ஹிஸ்புல்லாவின் கோட்டைகள் இலக்கு வைக்கப்படும் என்றும் இது லெபனான் மக்களுக்கு எதிரான போர் அல்ல என்றும் இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் ஹிஸ்புல்லா அமைப்பு நேற்று வெளியிட்ட அறிவிப்பில், இஸ்ரேலின் வர்த்தக மையமாக உள்ள டெல் அவிவ் நகரின் புறநகர்களில் இராணுவ நிலைகள் மீது 'பதா 4' ரக ஏவுகணை கொண்டு தாக்குதல் நடத்தியதாக குறிப்பிட்டது. இஸ்ரேல் மீது அண்மைய வாரங்களில் நீண்ட தூர ஏவுகணைகள் கொண்டு தாக்குதல் நடத்துவது இது நான்காவது முறையாக இருந்தது.



இஸ்ரேலின் மொசாட் உளவுப் பிரிவு தலைமையத்தின் மீது ஏவுகணை வீசியதாக ஹிஸ்புல்லா குறிப்பிட்டது. ஹிஸ்புல்லா தளபதிகள் மற்றும் தலைவர்களின் படுகொலையின் பின்னணியில் மொசாட் இருப்பதாக குற்றம்சாட்டப்படுகிறது.

டெல் அவிவை நோக்கி பெரும் எண்ணிக்கையான ஏவுகணைகள் வந்த நிலையில் அதன் கூரிய பாகங்கள் தாக்கியதில் இருவர் காயமடைந்ததாக இஸ்ரேலிய அம்புயலன்ஸ் சேவை தெரிவித்தது. டெல் அவிவின் கிழக்கே கபிர் காசிம் சிறு நகருக்கு அருகே உள்ள நெடுஞ்சாலையில் ஏவுகணை ஒன்று விழுந்ததில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளது.

உளவு மற்றும் ஆய்வு நடவடிக்கை ஒன்றாக இஸ்ரேலிய படைப் பிரிவுகள் நேற்று முன்தினம் இரவு லெபனானுக்குள் ஊடுருவியதாக இரு லெபனான் பாதுகாப்புத் தரப்புகளை மேற்கோள்காட்டி ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் தெரிவித்தது. எல்லைப் பகுதிகளில் இருந்து லெபனான் துருப்புகளும் பின்வாங்கி இருப்பதாக கூறப்பட்டுள்ளது.

லெபனான் வரலாற்றில் மிக மோசமான கட்டம் ஒன்றை எதிர்கொண்டுள்ளது என்று அந்நாட்டு பிரதமர் நஜிப் மிகாதி நேற்று தெரிவித்தார். ஐ.நா அமைப்புகள் மற்றும் நன்கொடை நாடுகளின் தூதுவர்களுடனான சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஹிஸ்புல்லாவின் ரொக்கெட் தாக்குதல்களால் வடக்கு இஸ்ரேல் எல்லையில் இருந்து வெளியேறிய ஆயிரக்கணக்கான இஸ்ரேலியர் மீண்டும் தமது வீடுகளுக்கு திரும்புவதை உறுதி செய்யும் வகையில் லெபனானில் தாக்குதல்களை நடத்துவதாக குறிப்பிடும் இஸ்ரேல் அங்கு முழு அளவில் தரைவழி படை நடவடிக்கை ஒன்று பற்றியும் வலியுறுத்தி வருகிறது.

இஸ்ரேலின் தாக்குதல்களில் லெபனானில் ஒரு மில்லியனுக்கும் அதிகமான மக்கள் தமது வீடுகளை விட்டு வெளியேறி இருப்பதோடு 1,100க்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டிருப்பதாக லெபனான் நிர்வாகம் தெரிவித்துள்ளது. இந்நிலையில் இஸ்ரேலின் தரைவழி நடவடிக்கை லெபனான் மக்களிடையே மேலும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

'ஹிஸ்புல்லா மாத்திரம் அல்ல அனைத்து லெபனானியர்களும் இம்முறை சண்டை புரிவார்கள். காசா மற்றும் லெபனானில் செய்த படுகொலைகளுக்காக இஸ்ரேலுடன் சண்டை புரிய அனைத்து லெபனானியர்களும் உறுதியாக உள்ளனர்' என்று லெபனானின் தெற்கு துறைமுக நகரான சிடானைச் சேர்ந்த அபூ அலா குறிப்பிட்டார்.

# காசாவில் மேலும் 31 பேர் பலி



மத்திய காசாவின் நுஸைரத் அகதி முகாம் மற்றும் காசா நகரின் கிழக்கே தூபா பகுதியில் இடம்பெயர்ந்த மக்கள் அடைக்கலம் பெற்றிருக்கும் பாடசாலை மீது இஸ்ரேல் நேற்றுக் காலை நடத்திய குண்டு வீச்சுகளில் குறைந்தது 31 பேர் கொல்லப்பட்டதாக பலஸ்தீன ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

நுஸைரத் முகாமில் உள்ள இரு வீடுகளை இலக்கு வைத்து நடத்தப்பட்ட தாக்குதலில் பெரும்பாலும் சிறுவர்கள் மற்றும் பெண்களைக் கொண்ட 12 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். இதில் அல் துர்ரா குடும்பத்திற்குச் சொந்தமான மூன்று மாடிக் கட்டடத்தின் மீது இடம்பெற்ற தாக்குதலில் ஏழு சிறுவர்கள் மற்றும் மூன்று பெண்கள் கொல்லப்பட்டதாக உள்ளூர் வட்டாரத்தை மேற்கோள்காட்டி பலஸ்தீன செய்தி நிறுவனமான வபா செய்தி வெளியிட்டுள்ளது.

இதேநேரம் அபூ அதயா குடும்பத்திற்குச் சொந்தமான வீட்டின் மீது நடத்தப்பட்ட வான் தாக்குதலில் இரு பெண்கள் பலியாகியுள்ளனர். காசா நகரில் ஷுஜையா பாடசாலை மீது நடத்தப்பட்ட தாக்குதல்களில் மேலும் ஏழு பேர் பலியாகியுள்ளனர்.

காசாவின் ஏனைய பகுதிகளிலும் இஸ்ரேலியப் படை தொடர்ந்து தாக்குதல்களை நடத்தி வரும் நிலையில் கடந்த ஓர் ஆண்டாக நீடிக்கும் இந்த இடைவிடாத தாக்குதல்களில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 41,600ஐ தாண்டியுள்ளது.

காசாவின் பல பகுதிகளிலும் இஸ்ரேலிய துருப்புகள் மீது தமது போராளிகள் தாக்குதல்களை நடத்துவதாக ஹமாஸ் ஆயுதப் பிரிவு, இஸ்லாமிய ஜிஹாத் மற்றும் சிறிய போராட்டக் குழுக்கள தனித்தனியே வெளியிட்ட அறிவிப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# இஸ்ரேலின் தாக்குதலில் சிரியாவிலும் மூவர் பலி

சிரிய தலைநகர் டமஸ்கஸில் இஸ்ரேல் நேற்று (01) நடத்திய வான் தாக்குதலில் மூன்று பொது மக்கள் கொல்லப்பட்டு மேலும் ஒன்பது பேர் காயமடைந்ததாக சிரிய அரச ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

இஸ்ரேலின் தாக்குதலில் தமது தொலைக்காட்சி அறிவிப்பாளர் சபா அஹமது கொல்லப்பட்டதாக சிரிய அரச தொலைக்காட்சி முன்னதாக குறிப்பிட்டிருந்தது. இந்நிலையில் கொல்லப்பட்ட மூவரில் இவரும் அடங்குகிறாரா என்பது குறித்து உறுதி செய்யப்படவில்லை.

அடுக்குமாடிக் குடியிருப்புகளால் சூழ்ந்த வீதி ஒன்றில் கார் வண்டி ஒன்று தீப்பற்றி எரியும் காட்சி சமூக ஊடகத்தில் வெளியாகியுள்ளது. இஸ்ரேலின் தாக்குதலில் தனியார் சொத்துக்கு குறிப்பிடத்தக்க சேதம் ஏற்பட்டிருப்பதாக அரச ஊடகம் குறிப்பிட்டது.



லெபனானில் தாக்குதல்களை தீவிரப்படுத்தி இருக்கும் இஸ்ரேல் அண்டை நாடான சிரிய மற்றும் யெமனிலும் வான் தாக்குதல்களை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# தாய்லாந்தில் பஸ் தீப்பற்றி 22 சிறுவர்கள் பலி

தாய்லாந்து தலைநகர் பாங்கொக்கிற்கு அருகே பாலர் பாடசாலை சிறுவர்களை அழைத்துச் சென்ற பஸ் ஒன்று தீப்பற்றியதில் 22 சிறுவர்கள் மற்றும் மூன்று ஆசிரியர்கள் பலியாகியுள்ளனர்.

நாற்பதுக்கும் அதிகமான மாணவர்களுடன் சுற்றுலாச் சென்ற பஸ் ஒன்றே நேற்று (01) இந்த விபத்துக்கு உள்ளாகியுள்ளது. இதில் 16 மாணவர்கள் மற்றும் மூன்று ஆசிரியர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாக போக்குவரத்து அமைச்சர் தெரிவித்தார்.

பஸ் வண்டியில் இருந்து கரும் புகை எழுந்த வண்ணம் இருக்கும் படங்கள் சமூக ஊடகத்தில் வெளியாகியுள்ளன. அந்தத் தீ பின்னர் அணைக்கப்பட்டது. தீ வேகமாகப் பரவியதாக ஆசிரியர்கள் குறிப்பிட்டனர் என்று பதில் பொலிஸ் தலைவர் கிட்டிராட் பன்பாட் செய்தியாளர் சந்திப்பில் குறிப்பிட்டார்.

'பார்த்தவர்கள் அளித்த வாக்குமூலத்தின் படி பார்த்தால், பஸ் சக்கரத்தில் இருந்து தீ ஏற்பட்டு எரிவாயு தொட்டிக்கு பரவி இருப்பது தெரிகிறது' என்று அவர் தெரிவித்தார். சில மாணவர்கள் ஜன்னல் வழியாக தப்பியுள்ளனர்.



இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஒக்டோபர் மாதம் 2ம் திகதி புதன்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

## இலங்கை புகையிரத சேவைகள்

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

**PROCUREMENT FOR THE PURCHASE OF 500 NOS. 12V, 215AH(MINIMUM), 20HR RATED, COLD CRANKING CURRENT 1100A, LEAD ACID BATTERIES FOR LOCOMOTIVE STARTING**

**PROCUREMENT NO. SRS/F.7988**

1. இலங்கை புகையிரத சேவைகளுக்கு PROCUREMENT FOR THE PURCHASE OF 500 NOS. 12V, 215AH(MINIMUM), 20HR RATED, COLD CRANKING CURRENT 1100A, LEAD ACID BATTERIES FOR LOCOMOTIVE STARTING இற்கு உற்பத்தியாளர்கள்/ வழங்குநர்களிடம் இருந்து கொழும்பு, இலங்கை புகையிரத சேவைகள், திணைக்கள பெறுகைக் குழு (பாரிய அளவானது), தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் ஏற்கப்படும். உற்பத்தியாளர்கள் அற்றோனித் தத்துவம் அல்லது நேரடியாக அதிகாரம் வழங்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள் ஊடாக தமது விலைமனுக்களை சமர்ப்பிக்கலாம்.
2. சர்வதேச போட்டிரீதியான விலைமனு (ICB) நடைமுறை மூலம் விலைக்கேட்பு நடத்தப்படும்.
3. ஆர்வமுடைய தகுதி/ தகைமை பெற்ற விலைமனுதாரர்கள் 2024.10.02 ஆம் திகதி தொடக்கம் 2024.11.12 ஆம் திகதி வரை வேலை நாட்களில் 9.00 மணி தொடக்கம் 15.00 மணி வரை கீழ் தரப்பட்டுள்ள முகவரியில் மேலதிக விபரங்களைப் பெறலாம் என்பதோடு விலைமனு ஆவணங்களை பரீட்சிக்க முடியும்.

**பிரதிப் பொது முகாமையாளர் (பெறுகை),**
**புகையிரத பெறுகை உப திணைக்களம்,**
**ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10, இலங்கை.**
**தொலைபேசி இல. : 94 (11) 2438078 அல்லது 94 (11) 2436818**
**தொலைநகல் இல. : 94 (11) 2432044**
**மின்னஞ்சல் : srs.slr@gmail.com**
**இணையதளம் : www.railway.gov.lk**

4. விலைமனுதாரர்/ உற்பத்தியாளர் அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச தரம் ஒன்றுக்கு 05 ஆண்டுகளுக்கு மேல் உந்துபொறி/ DMU தொடக்கத்திற்கான அமில மின்கலன்களை உற்பத்தி செய்திருத்தல் வேண்டும் என்பதோடு விலைமனுதாரர்/ உற்பத்தியாளர் அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச தரம் ஒன்றுக்கு கடந்த 05 ஆண்டுகளுக்கு உந்துபொறி தொடக்கத்திற்கான 500 அமில மின்கலன்களில் குறைந்தது மூன்று (03) மொத்த கொள்வனவுக் கோரல்களை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் என்பதோடு அதில் ஒன்று வெளிநாட்டு புகையிரத சேவை ஒன்றுக்காக இருத்தல் வேண்டும்.
5. மீளளிக்கப்படாத பெறுகைக் கட்டணமாக 14,300.00 ரூபாவைச் செலுத்தி 2024.10.02 ஆம் திகதி தொடக்கம் 2024.11.12 ஆம் திகதி வரை 15 மணி வரை கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, இலங்கை புகையிரத சேவைகள், பெறுகை உப திணைக்கள, பிரதிப் பொது முகாமையாளரின் முகவரிக்கு எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை கொள்வனவு செய்யலாம்.
6. அனைத்து விலைமனுக்களும் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையில் இயங்கும் வங்கினால் வழங்கப்பட்ட நிபந்தனையற்ற உத்தரவாத்தின் வடிவில் 625,000,00 ரூபாவில் விலைமனு பிணை ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும்.
7. விலைமனுக்கள் 2024.11.13 ஆம் திகதி பி.ப. 14.00 அல்லது அதற்கு முன்னர் கீழுள்ள முகவரிக்கு சமர்ப்பித்தல் வேண்டும் என்பதோடு விலைமனுக்கள் மூடப்பட்ட பின் அவை உடன் திறக்கப்படும். விலைமனுக்களை திறக்கும் சந்தர்ப்பத்தில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்தம் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் பங்கேற்க கோரப்படுகின்றனர். தாமதிக்கும் விலைமனுக்கள் ஏற்கப்படமாட்டாது.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு (பாரிய அளவானது),**
**பெறுகை உப திணைக்கள அலுவலகம்,**
**இலங்கை புகையிரத சேவைகள்**
**ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10.**

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு (பாரிய அளவானது)**
**இலங்கை புகையிர சேவைகள்**
**Ref. No. SRS/F.7988**

## மத்திய மாகாண சபை

## கேள்விகளுக்கான அழைப்பு

### நிதியளிப்பு - மாகாண நிலையான அபிவிருத்தி மானியம்

### சுகாதாரம், சுதேச வைத்தியம், சமூக நலன்புரி, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் அமைச்சு

01. பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள செயற்றிட்டங்களுக்காக மத்திய மாகாண சுகாதாரம், சுதேச வைத்தியம், சமூக நலன்புரி, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் அமைச்சின் பெறுகைக் குழுத் தலைவரினால் தகைமை வாய்ந்த ஒப்பந்தக்காரர்கள்/ வழங்குநர்களிடமிருந்து 2021-02-18ஆம் திகதிய அரசாங்க 4/2016(iii) பிரகாரம் தேசிய போட்டி ரீதியிலான நடைமுறையின் கீழ் கேள்விகள் கோரப்படுகின்றன.
02. பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள மற்றும் அபகீர்த்தியாளர் பட்டியல்படுத்தப்படாத கேள்விதாரர்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.
03. கேள்விக்கு இயைபான மேலதிக தகவல்களை கண்டி, சங்கராஜ மாவத்தை, த.பெ. இல. 121 இல் அமைந்துள்ள மத்திய மாகாண சுகாதார அமைச்சின் பிரதான கணக்காளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி இல. 081-2232620)
04. பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணத்தை கண்டி, சங்கராஜ மாவத்தை, த.பெ. இல. 121 இல் அமைந்துள்ள மத்திய மாகாண சுகாதார அமைச்சின் பிரதான கணக்காளரிடம் ரொக்கப் பணமாகச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை அமைச்சின் கணக்குப் பிரிவிற்குச் சமர்ப்பிப்பதன் பேரில் 2024-10-02ஆம் திகதி முதல் 2024-10-22ஆம் திகதி வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை கேள்விப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
05. முறையாகப் பூரணப்படுத்தி, முத்திரை பொறிக்கப்பட்ட விண்ணப்பங்களை 2024-10-23ஆம் திகதி மு.ப. 10.30 மணி அல்லது அதற்கு முன் கண்டி, சங்கராஜ மாவத்தை, த.பெ. இல. 121 இல் அமைந்துள்ள சுகாதாரம், சுதேச வைத்தியம், சமூக நலன்புரி, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் அமைச்சின் பெறுகைக் குழுத் தலைவருக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது அலுவலகத்தின் கணக்குப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
06. இரு பிரதிகளில் பூரணப்படுத்தப்பட்ட சகல கேள்விகளையும் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி என வெவ்வேறான இரு உறைகளில் இட்டு உறையின் இடதுபக்க மேல் மூலையில் செயற்றிட்டத்தின் பெயர் மற்றும் இலக்கத்தைக் குறிப்பிட்டு அவ்விரு உறைகளையும் வேறொரு உறையில் இட்டு அனுப்புதல் வேண்டும். அந்த உறையின் இடதுபக்க மேல் மூலையில் செயற்றிட்டத்தின் பெயர் மற்றும் இலக்கத்தைக் குறிப்பிட்டு முத்திரைக் குறி பொறித்து அனுப்புதல் வேண்டும்.
07. கேள்விகளை ஏற்றுக்கொள்ளும் நேரம் முடிவடைந்ததும் அவை உடன் திறக்கப்படும். அவ்வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.
08. சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் கேள்வி ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும் என்பதுடன் இலங்கை மத்திய வங்கியினால் ஒப்புதல் அளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றில், இலங்கை காப்புறுதிச் சபையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட காப்புறுதி நிறுவனமொன்றில், மத்திய மாகாண சமூக நலன்புரி, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்கள ஆணையாளரின் பெயரில் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் பெறுமதியைக் கொண்ட மற்றும் கால எல்லைக்கு இயைபான கேள்விப் பிணை முறியொன்றுடன் சமர்ப்பித்தல் வேண்டும். கேள்விப் பிணை முறியை ரொக்கப் பணமாகச் செலுத்துவதானால் மத்திய மாகாண சமூக நலன்புரி, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவை திணைக்களத்தின் நிதி உதவியாளருக்கு பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் பணத்தை வைப்புச் செய்து பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் சான்றுபடுத்திய பிரதியொன்றை கேள்விப் படிவத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
09. இந்தக் கேள்விகள் தொடர்பான முன்னோடிக் கூட்டமொன்று 2024-10-14ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு மத்திய மாகாண சுகாதாரம், சுதேச வைத்தியம், சமூக நலன்புரி, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் அமைச்சில் இடம்பெறும்.
10. சகல கேள்விகளும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் மதிப்பீடு செய்யப்படும் என்பதுடன் பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

| தொ. இல. | செயற்றிட்ட இல. | வேலை/ சேவை/ வழங்கல் செயற்படுத்தப்படும் மாவட்டம் மற்றும் பெயர் | அளவுப் பத்திரத்தின் பெறுமதி (ரூபா மில்லியன்) (வெட் இன்றி) | தேவையான பதிவு (CIDA) | கேள்விப் பிணை முறி | | ஒப்பந்தக் காலம் (நாட்கள்) | கேள்விப் பிணை முறியின் செல்லுபடிக் காலம் (நாட்கள்) | மீளளிக்கப் படாத கேள்வி ஆவணக் கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | கேள்விப் பிணை முறியின் பெறுமதி (ரூபா) | ரொக்கப் பண வைப்பு (ரூபா) | | | |
| 1 | CPC/ MH//02/08/ 04/09/2024-PSDG | கொத்மலை ஆயுர்வேத ஆதார வைத்தியசாலையில் வெளி நோயாளர் பிரிவை விஸ்தரித்தல் மற்றும் மலசலகூடம் சகிதம் மருத்துவ அதிகாரிகள் மற்றும் தாதியர்கள் ஓய்வு அறையை நிர்மாணித்தல் | 20,128,169.48 | C6 மற்றும் C5 | 403,000.00 | 201,500.00 | 210 | 105 | 7,500.00 |
| 2 | CPC/MH//02/ 08/04/010/2024 - Maintenance | டிகிரி செவன சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் பழைய கட்டிடத்தின் அத்தியாவசிய திருத்தவேலைகள் | 7,845,700.99 | C7 மற்றும் C6 | 157,000.00 | 78,500.00 | 180 | 105 | 3,500.00 |
| 3 | CPC/MH/02/08/ 04/11/2024 | பட்டிய பள்ளேகம பிரதேச வைத்தியசாலைக்கு அம்பியூலன்ஸ் கராஜ் சகிதம் சாரதிகள் ஓய்வறையொன்றை நிர்மாணித்தல் | 16,813,012.03 | C6 மற்றும் C5 | 336,000.00 | 168,000.00 | 210 | 105 | 7,500.00 |
| 4 | CPC/MH/02/08/ 04/12/2024-PSDG | பல்லேகளை ஆயுர்வேத மருந்துகள் உற்பத்திப் பிரிவின் உலர்ந்த மூலிகை களஞ்சியசாலையின் திருத்தவேலைகள் - PSDG | 9,689,062.47 | C7 மற்றும் C6 | 194,000.00 | 97,000.00 | 180 | 105 | 3,500.00 |

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**சுகாதாரம், சுதேச வைத்தியம், சமூக நலன்புரி, நன்னடத்தை மற்றும்**
**சிறுவர் பாதுகாப்பு சேவைகள் அமைச்சு,**
**மத்திய மாகாணம்,**
**த.பெ.இல. 121, சங்கராஜ மாவத்தை,**
**கண்டி.**
**2024-10-02.**

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

### மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மேல் மாகாணம்)

### மாகாண வீதிகள், போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வர்த்தகம், வீடமைப்பு நிர்மாணத்துறை, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள், கைத்தொழில், மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு - (மேல் மாகாணம்)

1. பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ள பெருந்தெருக்கள் நிர்மாண வேலைகளுக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை மேல் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் சார்பில் பெறுகைக் குழுவின் தலைவர் இத்தால் கோருகிறார்.
2. ஒப்பந்தத்தை பெற்றுக்கொள்வதற்கான தகைமை பெறுவதற்கு சித்திகரமான ஒப்பந்தக்காரர்கள் அபகீர்த்தியாளர் பட்டியலில் உள்வாங்காதவர்களாகவும் மற்றும் ஒவ்வொரு ஒப்பந்தத்திற்கும் எதிரில் தரப்பட்டுள்ள CIDA (ICTAD) பதிவுடன் மேல் மாகாண நிர்வாக எல்லைக்குள் கம்பனி பதிவாளரிடம் பதிவு செய்து கொண்டிருத்தல் வேண்டும்.
3. 5.0 மில்லியன் ரூபாவை விஞ்சும் ஒவ்வொரு ஒப்பந்தத்தையும் பெற்றுக்கொள்வதற்கான தகைமை பெறுவதற்கு 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 8ஆம் பந்தியின் கீழ் கம்பனிப் பதிவாளரினால் வழங்கப்பட்ட சான்றிதழைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கொழும்பு-12, இல. 59, செபஸ்தியன் மேடு, 2ஆம் மாடி, வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா), பெறுகை அதிகாரியிடமிருந்து மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம் (தொ.பே. 011-4849835) என்பதுடன், மேற்குறிப்பிடப்பட்ட முகவரியில் 2024 ஒக்டோபர் 02ஆம் திகதி முதல் வேலை நாட்களின் அலுவலக நேரங்களில் விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2024 ஒக்டோபர் 02ஆம் திகதி முதல் 2024 ஒக்டோபர் 15ம் திகதி வரையில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரையான வேலை நாட்களில் மீளளிக்கப்படாத கட்டணத்தையும் மற்றும் எழுத்துமூல விண்ணப்பமொன்றையும் செய்வதன் பேரில் கொழும்பு-12, இல. 59, புனித செபஸ்தியன் மேடு, வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா), 2ஆம் மாடி, பெறுகை அதிகாரியிடமிருந்து ஆங்கில மொழியிலான முழுமையான விலைமனு ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகளை ரொக்கப் பணமாகச் செலுத்துதல் வேண்டும்.
6. முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி எனக் குறிப்பிட்டு வெவ்வேறு உறைகளில் இட்டு, கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''திட்டப் பெயரை''க் குறிப்பிட்டு தலைவர், மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா), இல. 59, புனித செபஸ்தியன் மேடு, கொழும்பு-12 என முகவரியிட்டு கொழும்பு-12, இல. 59, புனித செபஸ்தியன் மேடு, வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா) பெறுகை அதிகாரிக்கு 2024 ஒக்டோபர் 16ஆம் திகதி மு.ப. 10.30 மணி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கச் செய்தல் வேண்டும். பிந்திய மற்றும் இலத்திரனியல் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
7. சகல விலைமனுக்களுடனும் 2025 பெப்ரவரி 11ஆம் திகதி வரையில் செல்லுபடியாகும் வகையில் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட விலைமனுப் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். பிணை முறியானது விலைமனு ஆவணத்தின் நிலையான படிவத்தில் உள்ளவாறு வங்கி உத்தரவாதம்/ காப்புறுதி பிணை முறியாகவிருத்தல் வேண்டும்.
8. எந்தவொரு விலைமனுவையும் ஏற்றுக்கொள்வதற்கும் அல்லது நிராகரிப்பதற்கும் அல்லது எக்காரணம் கொண்டும் எந்நேரத்திலும் வருடாந்த செயற்பாடுகளை மேற்கொள்ளாத மற்றும் பொருத்தமான எண்ணிக்கையாகக் கருதப்படும் எந்தவொரு எண்ணிக்கைக்கும் ஒப்பந்தக்காரர்களின் பட்டியலை கட்டுப்படுத்தும் உரிமையை பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.
9. சுய விருப்பத்தின் பேரில் வருகை தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்களைச் சமர்ப்பிக்க முடிவுறுத்தப்பட்டுள்ள நேரத்திற்கு பின் உடனடியாகத் திறக்கப்படும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா),**
**இல. 59, புனித செபஸ்தியன் மேடு,**
**கொழும்பு-12.**

**விலைகூறல் அட்டவணை - 2024**

| தொ. இல | நிதி வளம் | நிறைவேற்றுப் பொறியியளாலர் பிரிவு | கேள்வி இலக்கம் | செயற்றிட்டத்தின் பெயர் | செயற்றிட்டத்தின் விபரம் | கேள்வியிடக் கூடிய தொகை வெட் இன்றி (மில்லியன்) | ஆகக் குறைந்த ICTAD தரம் (பெருந் தெருக்கள்) | செயற் றிட்டக் காலம் (மாதங்கள்) | தக்க வைத்தல் காலம் (மாதங்கள்) | கேள்விக் கட்டணம் (மீளளிக்கப் படாதது) வெட் 15% மற்றும் 2.5% SSCL வரியுடன் (ரூபா) | பிணை முறியின் பெறுமதி | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | ரொக்கப் பணம் | வங்கி உத்தரவாதம் அல்லது காப்புறுதிப் பிணை |
| 1 | PDG - FLOOD | கிரிந்திவெல (பியகம) | PE/2024/KI/52 | தரனகம மீகஹவத்த வீதி | தடுப்புச் சுவரை நிர்மாணித்தல் (0+400 Km) | 3.33 | C-07 or C-08 | 06 | 12 | 2,419.00 | 49,910.00 | 24,955.00 |
| | PDG - FLOOD | கிரிந்திவெல (பியகம) | | பியகம கொட்டுன்ன வீதி | வீதி வரம்பை நிர்மாணித்தல் (1+100 -1+200 Km) | | | | | | | |
| | PDG-FLOOD | கிரிந்திவெல (தொம்பே) | | வனலுவெவ பெல்பிட்ட வீதி | தடுப்புச் சுவரை நிர்மாணித்தல் (0+800 Km) | | | | | | | |
| 2 | PDG-FLOOD | கிரிந்திவெல (தொம்பே) | PE/2024/KI/53 | மெத்தேகம ஹிஸ்வத்த வீதி | மதகை அகலப்படுத்துதல் மற்றும் தடுப்புச் சுவரை நிர்மாணித்தல் (3+200-3+700 Km) | 3.84 | C-07 or C-08 | 06 | 12 | 2,419.00 | 57,675.00 | 28,837.50 |
| 3 | PDG-FLOOD | கிரிந்திவெல (களனி) | PE/2024/KI/54 | பாதிலியதுடுவ ஹுணுப்பிட்டிய வீதி | தடுப்புச் சுவரை நிர்மாணித்தல் (1+200 Km) | 3.07 | C-07 or C-08 | 06 | 12 | 2,419.00 | 46,010.00 | 23,005.00 |
| 4 | PDG-FLOOD | நீர்கொழும்பு (வத்தளை) | PE/2024/NG/55 | Tow Parth வீதி | வீதி மேற்பரப்பிற்கு கொங்கிறீட் இடுதல் (2+418 - 2+742 Km) | 3.53 | C-07 or C-08 | 06 | 12 | 2,419.00 | 52,955.00 | 26,477.50 |
| 5 | PDG-Common | நீர்கொழும்பு (வத்தளை) | PE/2024/NG/56 | வத்தளை தெலங்கபாத்த வீதி | முன்வார்ப்பு 'U' வடிகான் மற்றும் insitu பெட்டி வடிகான், 'L' வடிகானை நிர்மாணித்தல் (0+072.4 ~0+088 - 0+644~0+669 Km) | 2.02 | C-07 or C-08 | 06 | 12 | 2,419.00 | 30,355.00 | 15,177.50 |
| 6 | PDG-DCC | அகலவத்த (வலல்லாவிட்ட) | PE/2024/AG/57 | சுனில் சந்திரரத்ன மாவத்தை | வீதியின் மேற்பரப்பிற்கு கொங்றீட் இடுதல் மற்றும் insitu கொங்கிறீட் வடிகான்கள் (0+000 - 0+660 Km) | 6.77 | C-06 or C-07 | 06 | 12 | 3,628.50 | 101,615.00 | 50,807.50 |

* Trusted Marketplace of Classified Advertisers...
OBSERVER adz TRUSTED CLASSIFIED GUIDE it's what you want
Classified
Call :- 077 7 278 948/ 011 2 429 347 | 011 2 429 383 | 011 2 429 342/ 343
077 7 270 067
E-mail - classified@lakehouse.lk
WE ACCEPT
Green Light for Online Transfer
For 15 Words Rs. 800/-
(Additional each word Rs. 20/-)
BANK OF CEYLON Lake House Branch
Acc. No. 000000377

# கமத்தொழில், காணி, கால்நடை, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரியல் வள அமைச்சு

SAP Smallholder Agribusiness & Resilience Project

IFAD Investing in rural people

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## வடமத்திய மாகாணம், மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தின் ஒத்துழைப்புடன் சிறியளவிலான விவசாய வணிகம் மற்றும் மீண்டெழுதல் செயற்றிட்டம் (SARP)

1. சிறியளவிலான விவசாய வணிகம் மற்றும் மீண்டெழுதல் செயற்றிட்டத்தின் (SARP) செலவை நோக்கி விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியத்திடம் (IFAD) இருந்து இலங்கை சனநாயக சோசலிச குடியரசுக்கு கடன் ஒன்று கிடைக்கப்பெற்றிருப்பதோடு, அநுராதபுரம் மாவட்டத்திலுள்ள நுவரகம்பலாத்த மத்தி, மகாவிலச்சிய, மிகிந்தலை மற்றும் மதவாச்சி பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் உள்ள நீர்ப்பாசன திட்டங்களை புனரமைப்பதற்கான ஒப்பந்தங்களின் கீழான கொடுப்பனவுகளுக்கு இந்த கடனின் பகுதியை பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2. அளவுப் பத்திர அடிப்படையில் பொதிக்காக (ஒப்பந்தம்) ஒவ்வொன்றிற்கும் ஒரு அலகுக்கான விலை வகையில் நீர்ப்பாசன பொதியின் புனரமைப்பை நிறைவேற்றுதல் மற்றும் பூர்த்தி செய்வதற்காக தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து அமைச்சுப் பெறுகைக் குழுவின் சார்பாக வடமத்திய மாகாணம், மாகான நீர்ப்பாசன அமைச்சின் செயலாளர் முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் தற்போது கோரப்படுகின்றன. கீழுள்ள அட்டவணையில் விபரங்கள் சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன.

| இல. | திட்டத்தின் பெயர் | பொறியியலாளர் மதிப்பீட்டுத் தொகை (ரூபா (மில்.) | தேவையான குறைந்தபட்ச CIDA தரம் | விலைமனு பிணை முறித் தொகை (இல. ரூபா) 2025-03-19ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும் | மீளளிக்கப் படாத வைப்பு (இல. ரூபா) |
|---|---|---|---|---|---|
| 1 | புலேலிய குளத்தை புனரமைத்தல் (மதவாச்சி பிரதேச செயலாளர் பிரிவு) | 72.31 | C4 அல்லது அதற்கு மேல் நீர்ப்பாசனம் மற்றும் வடிகாலமைப்பு | 1,000,000.00 | 15,000.00 |
| 2 | குடாகலென்பிந்துனுவெவ குளத்தை புனரமைத்தல் (மிஹிந்தலை பிரதேச செயலாளர் பிரிவு) | 39.97 | C5 அல்லது அதற்கு மேல் நீர்ப்பாசனம் மற்றும் வடிகாலமைப்பு | 500,000.00 | 10,000.00 |
| 3. | அம்பகஹாவெல குளத்தை புனரமைத்தல் (மிஹிந்தலை பிரதேச செயலாளர் பிரிவு) | 50.67 | C4 அல்லது அதற்கு மேல் நீர்ப்பாசனம் மற்றும் வடிகாலமைப்பு | 700,000.00 | 12,500.00 |
| 4 | கனுகஹவெவ மற்றும் மோரகஸ்ஸேகம குளங்களைப் புனரமைத்தல் (மதவாச்சி பிரதேச செயலாளர் பிரிவு) | 46.65 | C5 அல்லது அதற்கு மேல் நீர்ப்பாசனம் மற்றும் வடிகாலமைப்பு | 600,000.00 | 10,000.00 |
| 5 | கல்பொத்தேகம, பஹல மொரகொல்லாகம மற்றும் நிக்கவெவ குளங்களைப் புனரமைத்தல் (NPC மற்றும் மஹவிலச்சிய பிரதேச செயலாளர் பிரிவு) | 73.67 | C4 அல்லது அதற்கு மேல் நீர்ப்பாசனம் மற்றும் வடிகாலமைப்பு | 1,100,000.00 | 15,000.00 |

4. நிர்மாணக் காலம் 180 நாட்கள்.

5. ஒப்பந்தம் வழங்கப்படுவதற்கான தகுதிக்கு, வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாதவராகவும் மேற்கூறிய அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தேவையான CIDA பதிவை கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.

6. தகைமைத் தேவைப்பாடுகள்: ஒப்பந்தத்திற்கான தகுதிக்கு தேவையான தகைமைகள் பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ளது.

| திட்டத்தின் பெயர் | கடந்த ஐந்து ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட நிர்மாண வேலைகளின் இருக்க வேண்டிய வருடாந்த சராசரி அளவு (மில்லியனில் இ.ரூபா) | கடந்த 10 ஆண்டுகளில் பின்வரும் பெறுமதிகளுக்குக் குறையாத இதற்கு நிகரான தன்மை மற்றும் சிக்கல் தன்மை கொண்ட ஆகக் குறைந்தது ஒரு ஒப்பந்த நிர்மாணத்தின் அனுபவம் (இந்த வேலையில் குறைந்தது 70 வீதம் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்) (மில்லியனில் இ.ரூபா) | தேவையான ஆகக் குறைந்த திரவச் சொத்து (மில்லியனில் இ.ரூபா) |
|---|---|---|---|
| புலேலிய குளத்தை புனரமைத்தல் | 108 | 50.0 | 36 |
| குடாகலென்பிந்துனுவெவ குளத்தை புனரமைத்தல் | 60 | 28.0 | 20 |
| அம்பகஹாவெல குளத்தை புனரமைத்தல் | 76 | 35.0 | 25 |
| கனுகஹவெவ மற்றும் மோரகஸ்ஸேகம குளங்களைப் புனரமைத்தல் | 70 | 33.0 | 23 |
| கல்பொத்தேகம, பஹல மொரகொல்லாகம மற்றும் நிக்கவெவ குளங்களைப் புனரமைத்தல் | 110 | 50.0 | 37 |

7. பதிலளிக்க விரும்பும் சகல தகுதியுடைய விலைமனுதாரர்களுக்கும் இந்த விலைமனு திறக்கப்பட்டுள்ளது. விலைமனு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு மற்றும் மேற்கூறிய அட்டவணையில் திட்டமிடப்பட்டுள்ளதன் பிரகாரம் CIDA பதிவுத் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் மேலும், ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் அநுராதபுரம், மைத்திரிபால சிறிசேன மாவத்தை, வடமேல் மாகாணம், மாகாண நீர்ப்பாசனத் திணைக்களம், மாகாண நீர்ப்பாசனப் பணிப்பாளரிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம் மற்றும் வேலை நாட்களில் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3.00 வரை பின்வரும் முகவரியில் விலைமனு ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம். (தொலைபேசி: **025-2237586)**

8. ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் ஒவ்வொரு ஆவணத்திற்குமான மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தியதன் பின் 2024-10-03ஆம் திகதி முதல் 2024-10-23ஆம் திகதி வரை மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 03.00 மணி வரை அநுராதபுரம், மைத்திரிபால சிறிசேன மாவத்தை, வடமேல் மாகாணம், மாகாண நீர்ப்பாசனத் திணைக்களம், மாகாண நீர்ப்பாசனப் பணிப்பாளருக்கு எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து ஆங்கில மொழியிலான முழுமையான விலைமனு ஆவணங்களின் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவு முறை அநுராதபுரம், மைத்திரிபால சிறிசேன மாவத்தை, வடமேல் மாகாணம், மாகாண நீர்ப்பாசனத் திணைக்களம், காசாளர்/ கணக்கிடல் பிரிவிற்கு ரொக்கப் பணமாகச் செலுத்துதல் வேண்டும் அல்லது அநுராதபுரம், மைத்திரிபால சிறிசேன மாவத்தை, வடமேல் மாகாணம், மாகாண நீர்ப்பாசனத் திணைக்களம், மாகாண நீர்ப்பாசனப் பணிப்பாளருக்கு வரையப்பட்ட அரசாங்க வங்கி வரைவாக இருத்தல் வேண்டும்.

9. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2024-10-16ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு அநுராதபுரம், மைத்திரிபால சிறிசேன மாவத்தை, வடமேல் மாகாணம், மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தில் இடம்பெறும். இதில் பங்கேற்பது கட்டாயம் இல்லாதபோதிலும், விலைமனுதாரர்கள் இதில் பங்கேற்பதற்கு ஊக்குவிக்கப்படுவதோடு, விலைக்கோரல் முன்னோடிக் கூட்டத்திற்கு முன்னர் விலைமனுதாரர்கள் வேலைத்தள விஜயமொன்றை சொந்தமாக ஏற்பாடு செய்தல் வேண்டும்.

10. விலைமனுக்கள் விலைக்கோரல் தரவுத் தாளின் - விலைமனுதாரர்களுக்கான வழிமுறைகள் 19.2 இல் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு 2024-10-24ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு முன் ஒப்படைத்தல் வேண்டும். இலத்திரனியல் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதை தயவு செய்து கவனத்திற் கொள்ளவும்.

11. பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் எந்தச் சூழ்நிலையிலும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதுடன் விலைமனுதாரரின் எழுத்து மூலமான வேண்டுகோள் மற்றும் மொத்தச் செலவின் பேரில் திறக்கப்படாமலேயே திருப்பியனுப்பப்படும் என்பதை விலைமனுதாரர்கள் அறிந்திருக்க வேண்டும். சகல விலைமனுக்களுடனும் விலைமனு தரவுத் தாளிலும் இங்கும் கூறப்பட்டுள்ளதன் பிரகாரம் ''மாகாண நீர்ப்பாசனப் பணிப்பாளர், வடமத்திய மாகாணம்'' எனும் முகவரிக்கு விலைக்கோரல் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**தலைவர் / அமைச்சின் செயலாளர்,**
**அமைச்சுப் பெறுகைக் குழு,**
**மாகாண நீர்ப்பாசன அமைச்சு, NCP,**
**1ஆம் மாடி,**
**மாகாண சபைகள் கட்டிடத்தொகுதி,**
**அநுராதபுரம்.**

# அடிப்படை கற்கைநெறிகளுக்கான தேசிய நிறுவகம் – இலங்கை

NIFS

## வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2025

2025ஆம் வருடத்தில் கீழே குறிப்பிட்டுள்ள பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக இந்த நிறுவகத்துடன் தம்மை பதிவு செய்ய விரும்பும் உற்பத்தியாளர்கள்/ கூட்டுத்தாபனங்கள்/ஏக முகவர்கள் மற்றும் வியாபார நிறுவனங்களிடமிருந்து விண்ணப்பங்கள் அழைக்கப்படுகின்றன.

**பொருட்களின் வழங்கல்:**

01. காகிதாதி மற்றும் கணனி காகிதாதி அடங்கலான அலுவலக தேவைப்பாடுகள்
02. கணனிகள், கணனி உபகரணம் மற்றும் துணைப்பாகங்கள் (டோனர், கார்ட்ரிஜ் உட்பட)
